For example, 'I normally go shopping on Sundays.'

Use the present tense

- "I wash the Clothes"
- "I watch TV"
- "I make dinner"

Use the future tense

The future tense is another way to talk about habits. We use this when we are making a list of our habits, or the things that we do regularly. Try using the future tense to sound more natural when you talk about your habits.



- "I'll let the dishes soak for a few minutes"
- "I'll stream videos"

Keywords to talk about your habits

- "Every day I..."
- "I usually ..."
- "We always..."
- "Often I...."

Let's learn punctuation...!!!

Punctuation is the use of symbols such as full stops or periods, commas, or question marks to divide written words into sentences and clauses. They are: the period, question mark, exclamation point, comma, colon, semicolon, dash, hyphen, square brackets, curly brackets or braces, round brackets or parentheses, apostrophe, quotation mark, and ellipsis.

Eg:

1. speak Tamil, Kannada and Telugu.
2. "I will become an entrepreneur" - Said by Ragul.
3. Where is Mamallapuram?

Let's practice...!!!

1. Have you read Thirukkural
2. I love idly upma and vada
3. I like humanities

ACTIVITY

Fill the table with relevant information

	Sleeping hours	Studying hours
At the age of 2		
At the age of 5		
At the age of 9		
At the age of 13		
Now		

Now see the table once again. Have you noticed any change in your habits? Mention other changes in your habits compared to childhood.

XII_TM_EMPS_CH02-2023.indd 28 13/03/2023 12:28:35

Glossary

1.	Routine	Procedure; Practice
2.	Rely	Depend; Pin one's hopes on
3.	Accomplish	Fulfill; Achieve
4.	Suit	Acceptable; Match
5.	Frequency	Repetition; Recurrence

2.4 QUESTIONING TECHNIQUES

INTRODUCTION

Learning how to ask questions effectively can help you improve your communication skills and develop positive relationships with your colleagues, clients and other professionals in your network. Asking the right questions can also help you gather important information, learn new things and develop productive solutions. Developing this skill can also help you:

- Improve your interpersonal skills
- Improve your critical thinking skills
- Clarify important conversation points
- Persuade other people to agree with you



TYPES OF QUESTIONING TECHNIQUES

Open questions

Asking open questions is a great way to gather more details about a specific situation. When you ask an open question, it gives the other person an opportunity to elaborate and offer an in-depth explanation. **(How, What, When, Why, Which, Explain, Describe)** Asking open questions can help you have more interesting conversations and build positive relationships with other people.



- *"What happened in the sales meeting yesterday?"*
- *"Who else was at the event?"*
- *"How did you develop this solution?"*

Closed questions

Closed questions can be useful when you need a simple answer. Often these are yes or no questions.

- *"Have you received a response from Jancy about the new logo?"*
- *"Are you comfortable moving forward with this project?"*

Probing questions

Probing questions ask for specific details. It is also known as trigger questions. You might choose to use this technique if you need clarification about a specific topic.

- *"Who exactly did you speak with about this situation?"*
- *"How did you learn about this?"*

XII_TM_EMPS_CH02-2023.indd 29 13/03/2023 12:28:35

Funnel questions

The funnel questioning technique begins with general questions that gradually become more specific throughout the conversation.

- *"Did they have any questions or concerns about our services?"*
- *"When do you plan to have your first project completed for them?"*

Rhetorical questions

When someone asks a rhetorical question, they don't typically expect a response. Instead, people use this type of questioning technique to engage with their audience and ensure they're still listening.

- *"What's not to like?"*
- *"Isn't this an amazing deal?"*

Recall questions

Recall and process questions are an excellent tool to use when you want to make sure someone remembers a key discussion point or fact.

- *"Do you remember what Ravi said about the ABC Foundation during yesterday's meeting?"*
- *"Where did you save the files for Sameer's presentation?"*

Process questions

Process questions, also known as divergent questions, require the respondent to think critically about the situation before they answer. Journalists and interviewers often use this questioning technique to learn more about a person's experiences and beliefs.

- *"What are the pros and cons of making this investment?"*
- "Why do you think we should partner with MK International?"

Let's learn question tags...!!!

In grammar, a question tag is a very short clause at the end of a statement which changes the statement into a question.

For example, in 'She said half price, didn't she?' , the words 'didn't she' are a question tag.

Rules to be followed

- The tense of the statement and the question tag must match.
- Use the contracted version of "helping verb" and "not" for negative question tags.
- If the statement is positive, the question tag must be negative, and the opposite is the case.
- Pronouns must always be used in question tags.

Let's practice...!!!

1. Shahina is the new lead, ……..
2. They have confirmed, ……
3. You like cookies, ……

ACTIVITY 1

Fill in the blanks with suitable questions.

Karthi : ……?

Guna: I'm coming from Coimbatore

XII_TM_EMPS_CH02-2023.indd 30 13/03/2023 12:28:36

Karthi : .....?

Guna: I do not have a 1 rupee coin.

Karthi : .....?

Guna: History is my favorite subject

Karthi : .....?

Guna: I ate chapathi in the morning.

Karthi : .....?

Guna: Dhass is my pet cat.

ACTIVITY 2

You are new to a place. You need to know about the timing of the next bus. Around you there is no one familiar. But you have to ask about the timing of the next bus. How would you ask the timing to your nearby person?

Glossary

1.	Technique	Approach; Manner
2.	Productive	Fruitful; Creative
3.	Probing	Curious; Investigative
4.	Rhetorical	Eloquence; Stylistics
5.	Divergent	Different; Various
6.	Respondent	A person who is giving help or information

2.5 TRANSLATION SKILLS

INTRODUCTION

Translation is the process of reworking text or sound or any other mode of exchange of ideas from one language into another. You can translate anything, including websites, subtitles, books, and legal documents. Most of the time, translators work from a particular language into their native language. Translation is not a new concept. People have translated information for many centuries. Now, translators rely on specialized tools and software applications to streamline their work.



How to improve translation skills?

If you want to become a professional translator, you have to master various tricks and insights. For this, you need to constantly practice and increase your knowledge base. Only after building a broad foundation in translating will allow you to possess the translation skills you need to thrive in this industry.

- **Become bilingual or multilingual**

Bilinguals and multilinguals can take into account both culture and language aspects as they switch from one language to another. If you're an experienced bilingual speaker and writer, you need to develop your linguistic abilities to adapt to the source and target culture to improve your overall translation skills.

- **Great reading comprehension**

If you want to succeed in your field, you have to be fluent in the source and target audience not only when speaking, but also

XII_TM_EMPS_CH02-2023.indd 31 13/03/2023 12:28:36

when reading. This way, you are sure that what you are translating is accurate. To improve this translation skill, you need to read a lot of materials in both languages.

Let's learn about singular and plural...!!!

The difference between singular and plural nouns is easy to spot. When a noun indicates one only, it is a singular noun. When a noun indicates more than one, it is plural. Look at the following table for example. Complete the last two examples.

Singular	Plural
Pen	Pens
Cat	Cats
Man	
Goat	

ACTIVITY 1

Give tamil translation to the following terms.

1. Office
2. Parcel
3. Head master
4. Governor
5. Vocational teacher
6. Bakery
7. Counterparts
8. Parents
9. Twitter
10. Calendar

Glossary

1.	Bilingual	Speaking two languages
2.	Multilingual	Speaking more than two languages

2.6 FORMAL COMMUNICATION AT WORKPLACE

INTRODUCTION

Formal communication typically refers to an official interchange of information. Regardless of your role within an organization, knowing how to formally communicate and recognize formal communication can help to improve the way you communicate with colleagues and the company's management.



Importance of formal communication

Some of the main reasons to implement formal workplace communication include:

- It clearly defines and establishes authority
- It reduces the likelihood of mistakes and errors
- It can create discipline
- It can improve work coordination

Types of formal communication

Downward communication: This is the most common type of formal communication and represents the flow of information from the company's management to its subordinates. It usually consists of various instructions and orders

XII_TM_EMPS_CH02-2023.indd 32 13/03/2023 12:28:36

that are passed down in written or oral form, through reports, memos, emails, manuals and others.

Practice session

Complete the table of downward communication at an educational institution:

1.	Principal / Headmaster
2.	Assistant Principal / Headmaster
3.	Head of the department
4.	
5.	

Upward communication: This is the opposite of downward communication and therefore represents the messages passed from subordinates to management. It can take various forms, such as requests, reports, complaints and suggestions.

Horizontal communication: Also known as lateral communication, this type of formal communication takes place between coworkers who have different roles but are on the same hierarchical level within the organization. Communication between managers of different departments within the same organization is typically the most common example of horizontal communication.

Diagonal communication: Also known as crosswise communication, diagonal communication is when employees who work for different departments within the same organization and are also on different hierarchical levels formally communicate with each other. It usually consists of various employees communicating with managers of different departments, such as HR, marketing or finance.

Formal communication methods

Here are some of the most widely used methods of formal communication:

Meetings: Scheduled meetings within the same department.

Activity reports: Reports are formal documents that are usually sent to the management team.

Memos: Short for memorandum, a memo is a written message sent to a large number of people within an organization.

Letters and emails: Letters, in either physical or electronic form, are a widely used method of formal communication.

Formal discussions: A one-on-one discussion between people working for the same organization.

Tips for improving formal communication

Consider these tips for improving your formal communication technique:

- Avoid contractions.
- Use official titles and address people formally
- Use company or professional jargon
- Avoid using anecdotes or analogies

Let's learn the parts of speech...!!!

Parts of speech are among the first grammar topics we learn when we are in school or when we start our English language learning process. Parts of speech can be defined as words that perform Different roles in a sentence. Some parts of speech can perform the functions of other parts of speech too. Here are the examples of parts of speech.

XII_TM_EMPS_CH02-2023.indd 33 13/03/2023 12:28:36

1. Noun – She lives in **Chennai.**
2. Pronoun – Did **she** find the dress she was looking for?
3. Verb – He **reached** home.
4. Adverb – The jam is **too** cold.
5. Adjective – The movie was **amazing**.
6. Preposition – The ball was kept **under** the chair.
7. Conjunction – I was at home all day, **but** I am feeling very tired.
8. Interjection – **Oh**! I forgot to turn off the switch.

ACTIVITY 1

You are writing an email to your boss. Give the formal prefix of their name for your boss when your boss is a

Male .....

Female .....

Unmarried women .....

ACTIVITY 2

Make groups in your class and discuss any current topic. At the end of group discussion evaluate your performances. Focus on the area where you want to improve.

Glossary

1.	Colleagues	Coworkers; Teammates
2.	Implementing	Applying; Put into action
3.	Ambiguities	Doubts; difficult to understand
4.	Jargon	Waffle; Slang
5.	Anecdote	Short story; Tale

2.7 INTERNATIONAL LANGUAGE CERTIFICATIONS (IELTS, TOEFL, OET)

INTRODUCTION

Many people want to move abroad after their higher studies. Since English is a predominant world language many organizations and governments offer language certificates to test the ability. By getting this certificate one can prove their English knowledge skills. Students, job seekers and professional scan take these tests and can move to abroad.



Benefits of Foreign Language Test:

Language proficiency test is conducted for various purposes. They are,

1. **Education:** In educational settings, language tests are conducted to assess the student's potential or advancement for the purposes of academic placement.
2. **Profession:** In professional settings, the language test can decide whether an applicant has the language skills needed for a job.
3. **Knowledge:** You can prove your knowledge level through several international tests. As there are different sets of rules and test patterns, one should have a clear idea of what tests the institution requires and accepts.

XII_TM_EMPS_CH02-2023.indd 34 13/03/2023 12:28:36

4. **Career advancement:** It will show you the world of job opportunities across the globe and encourages career advancement. The proof of the test certificate is an added advantage in your qualifications for the smooth interview process.
5. **Others:** Other great advantages include acting as a confidence booster when you crack the exam. Based on your proficiency level, it also assists your Visa and PR application while traveling abroad.

Examples: DELF, IELTS, TOEFL, BEC, TEF, DELE, TORFL, OET and so on.

IELTS: The International English Language Testing System (IELTS) is one of the world's most approved English language testing systems for higher education and global migration. More than 11,000 organizations globally trust IELTS

- **IELTS Test Format:** There are two IELTS tests. IELTS Academic or IELTS General Training.
- **IELTS Academic:** measures the level of English language proficiency suitable for an educational environment. It evaluates whether you are qualified to begin your training or studying.
- **IELTS General:** measures the English language proficiency in a practical context. The test reflects both workplace and social situations.

TOEFL: Test of English as a Foreign Language (TOEFL) is similarly popular English assessment tests like IELTS for candidates looking to travel to the USA, Canada or any other English speaking countries for higher education.

OET: It is the English language test for Healthcare professionals. OET stands for Occupational English Test. It has been developed specifically for 12 healthcare professionals. These tests reflect on real workplace tasks and relevant language skills for each professional. Dentistry, diabetics, medicine, nursing, occupational therapy, optometry, physiotherapy, pediatrics, radiography, pathology and veterinary science are the 12 branches.

OET is an international English language test that assesses the language communication skills of healthcare professionals. OET is trusted by regulators, hospitals and universities in the UK, the US, Ireland, Australia, New Zealand, Dubai and Singapore as proof of ability to communicate effectively. It covers all forms of language skills with an emphasis on communication in a healthcare environment.

Modal verbs and their usage

Modal verbs are helping verbs that are used along with main verbs to represent the ability, possibility and probability of a subject to do an action and emphasize the necessity of an action.

Examples

1. I **could** make some time to help you with your assignments.
2. Your friends **may** come to visit you next week.
3. It **would** not be possible for you to complete all of it by tomorrow evening.

XII_TM_EMPS_CH02-2023.indd 35 13/03/2023 12:28:36

Try these sentences to practice modal verbs..!

1. It ……. rain in the evening.
2. I think they ……. reach Coimbatore by 8 pm.

ACTIVITY 1

Speaking activity : Work in pairs and arrive at five points that bring out the benefits of early rising. Share your views with your class.

Glossary

1.	Linguistic	Language; Verbal
2.	Proficiency	Skill; Talent
3.	Non-native	Outsider; Immigrant
4.	Mandatory	Compulsory; Needed
5.	Global	Worldwide; Universal

CONCLUSION

English is the predominant language spoken all over the world and it is a primary business language. So learning this language can help us achieve big dreams in future. Through this lesson we have understood the usage of English words in a formal way at a work culture. We have also learned about its usage in modern media.

ASSESSMENT

I. Choose the Best Answer (1 Mark)

1. Which among the following is the dominant business language?

   A. French B. English

   C. German D. Spanish

2. LSRW skills stands for……

   A. Listening speaking reading writing

   B. Learning speaking rising writing

   C. Learning speaking rising watching

   D. Language speaking rising writing

3. Speaking is an act of making ……..

   A. Beating sound

   B. Dancing beats

   C. Vocal sound

   D. Ringing sound

WMUTG

4. Effective speaking helps us to build ……

   A. Unclear communication

   B. Effective communication

   C. Bad communication

   D. Ambiguous communication

5. Which of the following helps us to grasp important notes.

   A. Summary writing

   B. Mind mapping

   C. Note making

   D. Draft making

6. Writing skill provides us with a permanent record for …….. reference.

   A. Past B. Present

   C. Future D. Yesterday

XII_TM_EMPS_CH02-2023.indd 36 13/03/2023 12:28:36

7. Information about daily economy, entertainment, politics, sports and commerce are seen in?

A. Subject book

B. Organisation's publications

C. Yearbook

D. Newspaper

8. Which of the following is not a merit of reading a newspaper?

A. Enrich the language

B. Strengthen the writing skill

C. Domain expertise

D. Ambiguous talk

9. Find out the right abbreviated term for C.M.

A. Chief Member B. Chief Minister

C. Chief Man D. Chief Maker

10. Having a routine can greatly improve ……..

A. Stress B. Health

C. Cash D. Travel

11. Which of the following is a future tense?

A. I watched a movie

B. I had a pet

C. I will walk

D. I lost it

12. Effective questioning techniques will increase …….

A. Doubts

B. Ambiguity

C. Logical thinking

D. Mistakes

13. What is the correct Tamil translation for the word "bakery"?

A. அடுமனை B. தேநீர் விடுதி

C. பேக்கரி D. பெட்டி கடை

14. Official interchange of information is known as…….

A. Communication

B. Effective communication

C. Good communication

D. Formal communication

15. Communication flow from upper ladder to lower ladder is known as……..

A. Upward communication

B. Download communication

C. Horizontal communication

D. Diagonal communication

16. In which of the following kinds of communication the information is exchanged between the same ranking?

A Upward communication

B. Download communication

C. Horizontal communication

D. Diagonal communication

17. IELTS stands for……..

A. The International English Language Testing System

B. The International English Language Talking System

C. The International every Language Testing System

D. The International every Language Testing Style

XII_TM_EMPS_CH02-2023.indd 37 13/03/2023 12:28:36

18. OET stands for……..

A. Operational English Test

B. Occupational English Test

C. Organizational English Test

D. Ongoing English Test

19. On an average, how many organizations believe IELTS test?

A. Fewer than hundred

B. Fewer than thousand

C. Fewer than 10000

D. More than 10000

20. Occupational English Test have been developed specifically for……professionals.

A. Finance

B. International business

C. Healthcare

D. Child care

II. Answer the following (2 Marks)

1. Write about Listening skills.
2. What is writing skill?
3. List out the benefits of reading the newspaper.
4. What is the importance of formal communication?
5. Write a short note on OET.

III. Answer the following (3 Marks)

1. List out the benefits of speaking skills.
2. What are the uses of questioning skills?
3. Write a short note on diagonal communication.
4. What are the benefits of foreign language tests?
5. Write a short note on translation skills.

IV. Answer the following (5 Marks)

1. Write about LSRW skills.
2. What are the types of questions? Briefly explain them.
3. What are the types of formal communication?
4. What are the methods of formal communication?

XII_TM_EMPS_CH02-2023.indd 38 13/03/2023 12:28:36



3

தகவல் தொடர்புத் திறன்கள்

கற்றலின் நோக்கம்

- சமூக ஊடகங்களின் வகைகள், முக்கியத்துவம் நன்மைகள் மற்றும் தீமைகள் ஆகியவற்றை விளக்குதல்.
- மெய்நிகர் தகவல் தொடர்பு (Virtual Communication) அதன் வகைகள், நன்மைகள் மற்றும் தீமைகளைப் பற்றி அறிதல்.
- வலைப்பதிவிடுதல்கள் (Blogs), மற்றும் இலவச வலைப்பதிவு சேவைகளை வழங்கும் மற்றும் உருவாக்கும் இணையதளங்களின் பட்டியல்களைப் பற்றி அறிதல்.
- தகவல் தொடர்பு திறனை விளக்குதல் மற்றும் நன்மை, தீமைகளை கலந்தாய்வு செய்தல்.
- நல்ல கேட்கும் திறன்களின் நன்மை மற்றும் திறன் மிகு கவனித்தலில் பயிற்சிகளைப் பற்றி விவரித்தல்.
- விளக்கத் திறன்களின் பண்புகளைப் பட்டியலிடுதல்.

3.1 சமூக ஊடகத் தொடர்பு

அறிமுகம்

சமீபத்திய தொழில் நுட்ப புரட்சியின் காரணமாக சமூகஊடகங்கள் வேகமாக வளர்ந்து அன்றாட வாழ்வின் தவிர்க்க முடியாத பகுதியாக மாறி வருகின்றன. இந்த அசுர வளர்ச்சிக்கு காரணம் திறன்பேசிகளின் (Smart Phone) பயன்பாடு அதிகரித்து வருவதாகும். ஏறத்தாழ இந்த திறன்பேசிகள் எந்த ஒரு சமூகஊடகத்தளத்தையும் எங்கிருந்து அணுகுவதையும் எளிதாக்குகிறது.

சமூகஊடகம் என்ற சொல் மெய்நிகர் வலையமைப்புகள் மற்றும் சமூகத்தின் மூலம் கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உதவும் கணினி அடிப்படையிலான தொழில்நுட்பத்தைக் குறிக்கிறது. சமூகஊடகம் இணைய அடிப்படையிலானது மற்றும் பயனர்களுக்கு தனிப்பட்ட தகவல்கள், ஆவணங்கள், காணொலிகள் மற்றும் புகைப்படங்கள் போன்ற மின்னணு தகவல் தொடர்பின் உள்ளடக்கத்தினை விரைவாக வழங்குகிறது.



சமூக ஊடகங்களின் வகைகள்

- பராம்பரிய சமூக வலைதளங்கள்
- சமூக மதிப்பாய்வு தளங்கள்
- புகைப்படம் மற்றும் காணொலி பகிர்வு தளங்கள்
- காணொலி இணையதளங்கள்
- சமூக வலைபதிவுகள்
- கலந்தாய்வு தளங்கள்
- பொருளாதார வலையமைப்பு பகிர்வுகள்

பிரபலமான சமூக ஊடக கருவிகள் மற்றும் தளங்கள்

- **வலை பதிவுகள்** (Blogs) : ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது கருத்தினை சார்த்த சாதாரண உரையாடல் மற்றும் விவாதங்களை அடக்கிய தளம்.
- **முகநூல்** (Face Book) : மாதாந்திர செயலில் 2.2 பில்லியன் பயனர்களை கொண்ட (ஜனவரி 2018 – ன் மூன்றாம் காலாண்டு வரை) உலகளாவிய பெரிய சமூக வலைதளமாகும். பயனர்கள் தனிப்பட்ட சுயவிவரம் உருவாக்கி, பிற பயனர்களைச் சேர்க்கவும் நண்பர்களாகவும், செய்திகளை பரிமாறிக்கொள்ளவும், நிலை புதுப்பிப்புகள் உட்பட பல்வேறு செயல்களில் ஈடுபடலாம்.
- **கீச்சகம்** (Twitter) : குழுக்கள் மற்றும் தனிநபர்கள் குறுகிய நிலை செய்திகளின் பரிமாற்றம் மூலம் இணைந்திருக்க அனுமதிக்கும் சமூக வலையமைப்பு / நுண் வலைப்பதிவு தளமாகும்.
- **வலையொலி** (You tube) : காணொலியை நிறுவ அல்லது பார்வையிட உதவுவது.
- **சொடுக்கிடல்** (Flicker) : நிகழ்நிலை சமூகத்தில் ஒளிப்படம் மற்றும் காணொலி பட (Video) சேவையை வழங்கும் தளம். இணையப் பயனர்கள் இலகுவாக அவர்களுடைய ஒளிப்படங்களை (Images) சேமித்து முகநூல், கீச்சகம் மற்றும் பிற சமூக வலையமைப்புத் தளங்களில் பகிர ஏதுவான தளமாகும்.
- படவரி (Instagram) : இது இலவசபுகைப்படம் மற்றும் காணொலி பகிர்வு பயன்பாடாகும். பயனர்கள் தங்கள் புகைப்படங்களுக்கு இலக்க வடிப்பான் (Digital Filter) சட்டங்கள் (Frames) மற்றும் சிறப்பு விளைவுகளை பயன்படுத்தவும், பின்னர் அவற்றை சமூக வலையமைப்பு தளங்களில் பகிரவும் அனுமதிக்கிறது.
- **இணைக்கப்பட்டது** (LinkedIn) : ஆர்வமுள்ள ஒரே துறைகளை சார்ந்த வல்லுநர்கள், தகவலைப் பகிர்ந்து கொள்ளவும், உரையாடலில் பங்கேற்கவும் உதவும் ஒரு இடமாகும்.



சமூக ஊடகத்தின் முக்கியத்துவம்

தகவல் தொடர்புகளில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவமானது தொடர்ந்து விவாதிக்கப்படும் ஒரு தலைப்பாகும். முன்பு மக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் சென்றடைய முடியாத தகவலை கொண்டு சேர்ப்பதே நிகழ்நிலை தகவல் தொடர்பாகும். (Online Communication). இது உலகின் பிற பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிக்கிறது. சமூக ஊடகங்கள் தன்னைப் பற்றி மக்கள் சொல்வதை அனுமதிப்பதோடு மட்டுமல்லாமல் நாம் பதிலளித்து செயல்படவும் வைக்கிறது.

சமூக ஊடகங்களின் நன்மைகள்

1. உலகளாவிய இணைப்பு
2. உயர்ந்த விளைவுகளுக்கான சரியான இடம்
3. கல்விக்கான மிகச்சிறந்த கருவி
4. தகவல்கள் மற்றும் மேம்படுத்துதல்கள்
5. மிகுந்த அளவில் தினமும் தகவல் பகிர்வு
6. ஒரு சமூகத்தை இணைத்தல்
7. கட்டண விளம்பர சேவைகளுக்கான அணுகுதல்

சமூக ஊடகங்களின் தீமைகள்

1. இணைய மிரட்டல் (Cyberbullying)
2. சமூக ஊடகங்களில் மென் தாக்குதல் (hacking)
3. நேருக்கு நேர் தொடர்புதிறன்கள் குறைகிறது.
4. போலிச் செய்திகள்
5. சமூக ஊடகங்களுக்கு மக்கள் அடிமையாய் இருத்தல்
6. சமூக ஊடகங்கள் தூக்கம் சம்பந்தமான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.
7. சமூக ஊடகங்கள் மனச் சோர்வு (Depression) மற்றும் தனிமை உணர்வை (Loneliness) ஏற்படுத்துகின்றன,
8. சமூக ஊடகங்கள் கவனச் சிதறலை (Distraction) ஏற்படுத்துகின்றன.

செயல்பாடு 1

வகுப்புத் தோழர்களிடையே நேர்காணல் நடத்தி பிரபலமாக பயன்படுத்தப்படும் சமூக ஊடக வரைத்தளம் எது என்பதை கண்டறிந்து?, அது ஏன் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை பகுப்பாய்வு செய்யுங்கள்.

3.2 வலைப்பதிவிடுதல் (BLOGGING)

அறிமுகம்

வலைப்பதிவிடுதல் என்பது சமூக ஊடகங்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். வலைப்பதிவு என்ற சொல் நிகழ்நிலை குறிப்பைக் (Online diary) குறிக்கிறது. வலைப்பதிவுகள் உரைகட்டுரைகளாகவும், சில நேரங்களில் புகைப்படங்கள், காணொலிகள் மற்றும் கேட்பொலிகளாக கூட இருக்கலாம். தனிப்பட்ட வலைப்பக்கங்களை உருவாக்க மற்றும் தங்கள் எண்ணங்களைப் பதிவு செய்ய எவரும் வலைப்பதிவை பயன்படுத்தலாம். பயனர்கள் பதிலளிக்கவும், தங்கள் கருத்துகள், எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் செய்திகள், நிகழ்வுகள் பற்றிய தகவல்களை தெரிவிக்கவும் வலைப்பதிவிடுதலை பயன்படுத்தலாம்.



வலைப்பதிவுகளை உருவாக்கும் சில பிரபலமான வலைதளங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. www.workprocess.com
2. www.blogger.com
3. www.blog.com
4. www.bloghome.com

வலைப்பதிவு கணக்கை உருவாக்கும் படிநிலைகள்

வலைப்பதிவுகணக்கைஉருவாக்கபயன்படும் படிநிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. கணினியில் வலைஉலாவி (web browser) – யை திறக்கவும்.
2. முகவரிப்பட்டியில் (Address bar) – ல் www. wordpress.com என தட்டச்சு செய்து GET START பொத்தானை கிளிக் செய்வும்.
3. வலைப்பதிவு முகவரி (Blog address), பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் (PassWord) போன்ற புலங்களை (Fields) கொண்ட ஒரு புதிய பக்கம் திரையில் காட்டப்படும். சன்னல்திரையில் (Window) – கீழ் காணும் விவரங்களை குறிப்பிடவும்.
   - ❍ Email Address : ஒரு செயல்முறை வலைப்பதிவு உருவாக்கப்படும் போது பணிச்செயல் முறையிலிருந்து (Word Process) பயனருக்கு செயல்படுத்தும் இணைப்பு(Activation Link)அனுப்பப்படும்.
   - ❍ User Name : இது வலைப்பதிவை கையாள பயன்படுகிறது.
   - ❍ Password:பணிமுன்னேற்றத்திற்கான பாதுகாப்பினை அளிக்கிறது.
   - ❍ Blog Address : பயனர் அடிக்கடி வலைப்பதிவை பார்வையிட பயன்படுத்தும் முகவரி.
4. Continue : பொத்தானை கிளிக் செய்க.
5. பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலை (Registered Mail) திறந்து வலைப்பதிவு கணக்கிற்கான செயல்பாடு இணைப்பு (Activation Link) உள்ளதா என சோதிக்கவும்.
6. செயல்பாடு இணைப்பை கிளிக் செய்த பின்பு வலைப்பதிவு செயல்பட துவங்கும்.
7. பணிச் செயல்முறை வலைப்பதிவு கணக்கின் வகையானது தற்போது திரையில் தோன்றும்.

தற்போது வலைப்பதிவு பயன்படுத்த தயார்நிலையில் உள்ளது. வலைப்பக்கத்தின் மேல்பகுதியில் வலைப்பதிவு முகவரியானது தயார் செய்யப்படும். இணைப்பின் மீது இரு முறை கிளிக் செய்து வலைப்பதிவின் முகப்பு பக்கத்திற்கு (Home Pages) செல்லலாம். மற்றவர்களின் பார்வைக்கு பொருளடக்கத்தினை வலைப்பதிவில் சேர்க்கவும்.

கருத்துக்களை உருவாக்குதல் மற்றும் பதிவிடுதல் (Posting)

புதிய பதிவிடுதலை உருவாக்க New post விருப்பத்தினை கிளிக் செய்க. புதிய சன்னல் திரை தோன்றும். கருத்திற்கான தனித்தன்மையான தலைப்பை வழங்கி உரைப்பெட்டியில் (Text Box) பொருளடக்கத்தை தட்டச்சு செய்யவும். பொருளடக்கத்தை தட்டச்சு செய்த பின், Publish பொத்தானை கிளிக் செய்து பொருளடக்கத்தை வெளியிடுக.

பதிவிடுதல்களைப் பார்க்க, வலைஉலாவியின் முகவரிப்பட்டையில் வலைப்பதிவு முகவரியை தட்டச்சு செய்யவும். மற்றவர்கள் வெளியிட்ட பதிவிடுதல்களைப் பற்றிய கருத்துக்களைப் பதிய பதிவிடுதல்களின் கீழே தோன்றும் கருத்துப்பெட்டியில் குறிப்பிடலாம். தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து Post comment – யை கிளிக் செய்தால் பயனர் வலைப் பதிவுடன் கூடிய கருத்துக்களைப் பார்க்கலாம்.



வலைப்பதிவு பதிவிடுகளின் கூறுகள் (Element of Blog post)

1. சிறந்த தலைப்பு (Great Title)
2. சிறிய பத்திகள் (Short Paragraphs)
3. காட்சியமைப்புகள் (Visuals) அல்லது பல்லூடகம் (Multimedia) அல்லது உரை (Text)

4. உள் மற்றும் வெளிக் கோடுகள்
5. சரிபார்த்தல் (Proof read)

வலைப் பதிவுகளின் முக்கியத்துவம்

1. ஒருவரின் எண்ணங்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்ளுதல்
2. தயாரிப்பு அல்லது சேவையை விளம்பரப்படுத்துதல்
3. வருவாய் ஈட்டுதல்
4. நிகழ்நிலை சமூகத்தை கட்டமைத்தல்

வலைப்பதிவின் வகைகள்



கல்வி வலைப்பதிவின் முக்கியத்துவம்

1. பகுப்பாய்வினை ஊக்குவிக்கிறது
2. படைப்பாற்றலை செயல்படுத்துகிறது
3. கூட்டு முயற்சி (Collaborative)
4. சுய பிரதிபலிப்புக்கான இடத்தை வழங்குகிறது
5. மீள் கருத்துக்களை (Feedback) வரவேற்கிறது.

செயல்பாடு 1

வலைப்பதிவு என்பது எதிர்காலத்தின் வழி எனில், உங்களுக்குப் பிடித்த இப்போது பிரபலமாக உள்ள ஏதோ ஒரு தலைப்பில் பொருடளக்கத்தை உருவாக்கவும். பின்பு வலைப்பதிவை உருவாக்கும்போது அதை பதிவிட்டுகொள்ளலாம்.

3.3 மெய்நிகர் தொடர்பு (VIRTUAL COMMUNICATION)

அறிமுகம்

மெய்நிகர் தொடர்பு என்பது நாம் ஒரே அறையில் இல்லாவிட்டாலும் கூட, ஒன்றாக வேலை செய்வது மற்றும் பிறருடன் கலந்துரையாடுவதைக் குறிக்கும். மெய்நிகர் தொடர்பு என்பது ஒரு தகவல் தொடர்பு முறையாகும், இதில் கேட்பொலி அல்லது காணொலி மின்னணு சாதனங்கள் மூலம் நேருக்குநேர் தொடர்பு கொள்ள இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. கோவிட்19 தொற்று நோய்க்குப் பிறகு மெய்நிகர் தொடர்பின் பயன் வேகம் பெறுகிறது.



- உரைச் செய்தி
- உடனடிச் செய்தி
- காணொலி அரட்டை
- குரல் மூலம் இணைய நெறிமுறை
- சமூக ஊடகம்
- மின்னஞ்சல்
- இணைய மாநாடு

உள்ளிட்ட எந்த தொழில் நுட்பத்திலும் இந்த வகையான தகவல் தொடர்பை நடத்தலாம்.

எடுத்துக்காட்டு

மின்னஞ்சலில் நாம் திறம்பட தொடர்பு கொள்ளவும், சலுகைகளுடன் சந்திப்புகளை திட்டமிடவும், மேலும் பின்னாளில் குறிப்புக்காக

நமது உரையாடல்களின் பதிவுகளை வைத்திருக்கவும் அனுமதிக்கிறது.

இன்றைய உலகில் பெருமளவு மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தொலைவில் வேலை செய்கின்றனர். இன்னும் சிலர் தேநீர் கடைகளிலும், உணவகங்களிலும் இருந்து வேலை செய்வதை தேர்வு செய்கின்றனர். ஒரு நபர் சரியான தகவல் தொடர்பு தடைகளை அணுகவில்லை என்றால், அவர்கள் சிறப்பாக செயல்படுவார்க்ள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இங்கு மெய்நிகர் தகவல் தொடர்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அடிக்கடி பயன்படுத்தப்படும் சில மெய்நிகர் தொடர்பு கருவிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. Zoom
2. Google meet
3. Hangouts
4. Webex
5. Skype



மெய்நிகர் தொடர்புக்குத் தேவையான திறன்கள்

பணியிடத்தில் நேருக்குநேர் தொடர்பிலிருந்து நிகழ்நிலை தொடர்புக்கான மாற்றத்தின் போது, பயனுள்ள தகவல் தொடர்பு திறன் முன்பைவிட மிக முக்கியமானது. தகவல் தொடர்பு என்பது கடினமான வணிக முடிவுகளுக்கு வழி வகுக்கும் ஒரு மென்மையான திறனாகும். மேலும் இந்த கோவிட்–19 உலகில் மெய்நிகர் தகவல் தொடர்புக்கு முன்பைவிட அதிக கவனம் தேவை.

நிகழ்நிலை தகவல் தொடர்புக்கு பல ஊடகங்கள் மற்றும் கருவிகள் உள்ளன இவை குறைபாடுகளை இணைக்க திறம்பட செயல்படும். அதே வேளையில், மெய்நிகர் பணியிடத்தின் சகாப்தத்தில் மெய்நிகர் தொடர்புத் திறன்களை உருவாக்குவது தனிநபர்களாகிய நம் கையில் உள்ளது. திறம்பட மற்றும் உத்வேகத்துடன் இருக்க, நாம் மெய்நிகர் தொடர்பு திறன்களில் சிறந்து விளங்க வேண்டும். மெய்நிகர் தகவல்தொடர்பு தனிப்பட்ட தகவல் தொடர்புகளைக் காட்டிலும் அதிக சிந்தனையைக் கோருகிறது. ஏனெனில் நாம் வாய்மொழி அல்லாத அடையாளங்களை தவற விடுவதால், அரட்டைகள் மற்றும் செய்திகளை தவறாக புரிந்து கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் நம்மிடம் இருக்கலாம்.

மெய்நிகர் தொடர்பிற்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய சில திறன்கள்

1. மரியாதையுடன் இருத்தல்
2. குறித்த நேரத்தில் இருப்பது
3. மற்றவர்களுக்கு தடையாக இருத்தல் வேண்டாம்.
4. தலைப்புடன் ஒத்த செயல்பாடு
5. நல்லுறவை உருவாக்கவும், தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்கவும் நேரம் ஒதுக்குதல்.
6. அனைவரும் தொலைதூரத்தில் இருப்பதால் நன்றாக புரிந்து கொள்ள அதிகமாக தொடர்பு கொள்ளுதல்.
7. பெறப்பட்ட செய்தியில் கவனம் செலுத்துதல்.

மெய்நிகர் தொடர்பின் நன்மைகள்

1. செலவு சேமித்தல்
2. உற்பத்தித் திறனை அதிகரித்தல்
3. ஆரோக்கியமான வேலை வாழ்க்கை சமநிலை அடைதல்

மெய்நிகர் தொடர்பின் தீமைகள்

1. நம்பிக்கை இல்லாமை
2. குறைக்கப்பட்ட குழு ஒத்துழைப்பு
3. மறைக்கப்பட்ட தொழில் நுட்ப செலவுகள்

செயல்பாடு 1

கோவிட் தொற்று நோய் காலத்தில் நிகழ்நிலை வகுப்புகளுக்கு காணொலி கலந்தாய்வு பயன்படுத்துவதை நன்கு அறிந்திருப்பீர்கள், உங்கள் வகுப்பு தோழர்களுடன் காணொலி கலந்தாய்வு சந்திப்பைத் நடத்த எந்த கருவியைப் பயன்படுத்த வேண்டும் என திட்டமிடவும். குறிப்பிட்ட கருவியின் நன்மை, தீமைகளைப் பற்றி விவாதிக்கவும்.



கருவியின் பெயர்

நன்மைகள்	தீமைகள்

3.4 தகவல் தொடர்பு திறமைகள்

அறிமுகம்

தகவல் தொடர்பு திறமை என்பது, அறிவு, திறன்கள், செயல்முறைகள் மற்றும் மனநிலைமையை ஒருங்கிணைத்து மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதாகும். ஒருவரின் தகவல் தொடர்பு மூலம், மாணவர்கள் யோசனைகள் / தகவல்களை உருவாக்கவும் மாற்றவும் கற்றுக்கொள்கிறார்கள், மற்றவர்களுடன் ஒரு இணைப்பை உருவாக்குகிறார்கள், தங்கள் கருத்துக்களைப் பகிரவும், அவர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தவும், தங்கள் கற்றலை அதிகரிக்கவும், காரியங்களைச் செய்யவும் தொடர்பு கொள்கிறார்கள்.

தகவல் தொடர்பு திறமையானது ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட இரண்டு துணைத் திறமைகளை உள்ளடக்கியது. அவை:

தொடர்பு கொள்ளுதல்: (Communicating)

தொடர்பு கொள்வது என்பது மக்கள் தகவல்களை, அனுபவங்களை, சுற்றியுள்ள உலகத்தை ஆராய்வதற்கான யோசனைகளை பரிமாற்றவும், தகவல் தொடர்புப் படிவங்கள், உத்திகள் மற்றும் தொழில் நுட்பங்களை புரிந்து கொண்டுதிறம்பட பயன்படுத்தவும்தேவையான திறன்களின் தொகுப்பாகும். தொடர்புகொள்வது மக்களின் கற்றல், அவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக அடையாளம், அவர்கள் தொடர்பு கொள்ளும் உலகம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலத்தை வழங்குகிறது.

திறம்பட தொடர்பு கொள்பவர்கள் அவர்களின் திறமைகள் மற்றும் உத்திகளை தேவைகேற்ப பயன்படுத்தி பார்வையாளர்களின் புரிந்துணர்வை உறுதிப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தொடர்பு கொள்ளும்போது பலவகையான நோக்கங்களை பல்வேறு சூழல்களுக்கு, பலதரப்பட்ட பார்வையாளர்களிடம் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

ஒத்துழைத்தல் (Collaborating)

ஒத்துழைப்பு என்பது பொதுவான நோக்கத்தைத் தொடரவும் பொதுவான இலக்குகளை நிறைவேற்றவும் ஒன்றாக செயல்படுவதற்கு மக்கள் பயன்படுத்தும் திறன், உத்திகள் மற்றும் இயல்புகளை உள்ளடக்கியது.

திறம்பட ஒத்துழைப்பவர்கள், மற்றவர்களின் முன்னோக்கு, உத்திகள் மற்றும் சொந்த முயற்சிகளை இணைப்பதன் மூலம் கூட்டுப்புரிதல்கள், பயன்கள் மற்றும் விளைவுகளை எவ்வாறு இவை அதிகரிக்கிறது என கண்டுணர்கின்றனர். அவர்கள் குழு உறுப்பினர்களின் பங்களிப்பை மதிக்கிறார்கள். உள்ளடங்கிய நடைமுறைகளை பயன்படுத்துவதினால் ஆதரவாகவும் திறம்படவும் செயலாற்றுகிறார்கள் மற்றும் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் பரஸ்பர நன்மைக்காகப் பாடுபடுகின்றனர்.



ஒத்துழைப்பு மற்றும் தொடர்பு

திறமையான தொடர்பாளராக மாறுதல்

பல்வேறு வகையான தகவல் தொடர்பு திறன்களை கற்றுக் கொண்டு பயிற்சி செய்யும்போது நம்மை ஒரு திறமையானத் தொடர்பாளராக மாற்ற உதவும். இந்த திறன்கள் பல ஒன்றாகச் செயல்படுவதால், முடிந்தவரை வெவ்வேறு சூழல்களில் தொடர்புத்திறன்களை பயிற்சிச் செய்வது முக்கியம்.

1. செய்திறன்மிகு கவனிப்பு (Active Listening)

இது எளிமையானதாகத் தோன்றினாலும், இதனை உருவாக்க மற்றும் மேம்படுத்த கடினமான ஒரு திறமையாக இருக்கும். பேச்சாளரிடம் கவனம் செலுத்துதல், கைப்பேசி, மடிக்கணினிகள் அல்லது பிற பொருட்களினால் ஏற்படும் கவனச் சிதறல்களைத் தவிர்த்தல், மற்றும் சிந்தித்துப் பதிலளிக்க கேள்விகள், கருத்துக்கள் அல்லது யோசனைகளைத் தயாரிப்பதன் மூலம் ஒருவர் செயல்திறன்மிகு கவனிப்பாளராக இருக்க முடியும்.

2. நம்முடைய தொடர்புப் பாணியை பார்வையாளர்களுக்கு ஏற்ப மாற்றியமைத்தல்

வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வகையான தகவல் தொடர்புகள் பொருத்தமானவை. எடுத்துக்காட்டாக ஒரு திறமை வாய்ந்த தொழிலதிபருடன் தொடர்பு கொள்ளும்போது, முறையான மின்னஞ்சலை அனுப்புவது அல்லது அவர்களைத் தொலைப்பேசியில் அழைப்பது நல்லது. சூழ்நிலையைப் பொறுத்து, தகவல் தொடர்பு வடிவங்களில் முறையான தட்டச்சு செய்யப்பட்டக் கடிதத்தை நாம் அனுப்ப வேண்டியிருக்கலாம்.

3. நட்புறவு (Friendliness)

நட்பில், நேர்மை மற்றும் இரக்கம் போன்ற குணாதிசயங்கள் பெரும்பாலும் நம்பிக்கை மற்றும் புரிதலை வளர்க்கின்றன. அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று ஒருவரிடம் கேட்பது, அவர்கள் பேசும்போது புன்னகைப்பது, திறமையான வேலைக்கான வெகுமதியை வழங்குவது போன்ற சிறிய சைகைகள், சக ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இருவருடனான உறவுகளை வளர்க்க உதவும்.

4. நம்பிக்கை(Confidence)

பணியிடத்தில், நம்பிக்கையுடன் முன் வைக்கப்படும் கருத்துக்களுக்கு மக்கள் பதிலளிக்க அதிக வாய்ப்புள்ளது. நாம் யாரிடமாவது பேசும்போது கண்ணுக்கு நேராக பார்த்துப் பேசுவது, தோள்களை விரித்து நேராக உட்காருவது மற்றும் எண்ணங்களை மெருகூட்டுவதற்கு, நேரத்திற்கு முன்பே தயாராகுதல் போன்ற பல வழிகள் நம்பிக்கையுடன் தோற்றமளிப்பதைக் குறிக்கும்.

5. மீள்கருத்துக்களை (feedback) அனுப்புதல் மற்றும் பெறுதல்

வலுவானத் தொடர்பாளர்கள் (Communicators) முக்கியமானக் கருத்துகளை ஏற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமான உள்ளீட்டை வழங்க முடியும். மீள்கருத்துக்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும், தீர்வுகளை வழங்க வேண்டும், திட்டம் (அ) தலப்பை வலுப்படுத்த உதவ வேண்டும்.

6. தொகுதி மற்றும் தெளிவு (Volume and clarity)

நீங்கள் பேசும்போது, கேட்கக் கூடிய வகையில் தெளிவாக இருப்பது அவசியம். பல்வேறு அமைப்புகளில் தகவலைக் கேட்கக் கூடிய வகையில் பேச குரலைச் சரி செய்வது திறம்பட தொடர்பு கொள்வதற்க்கு மிகவும் முக்கியமானது. மிகவும் சத்தமாக பேசுவது சில அமைப்புகளில் அவமரியாதையாகவோ, அல்லது மிக மோசமானதாகவோ இருக்கலாம், உங்களுக்குத் தெரியாவிட்டால் இடத்தைப் பார்த்து மற்றவர்கள் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை கவனிக்கவும்.

7. புரிந்துணர்வு (Empathy)

இந்த தகவல் தொடர்பு திறன் தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் முக்கியமானது,

இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாம் மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்த கொண்டு பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணமாக, யாராவது கோபம் அல்லது விரக்கிதியை வெளிப்படுத்தினால், புரிந்துணர்தல் அவர்களின் உணர்ச்சிகளை ஒப்புக் கொள்ளவும், பரவலாக்கவும் உதவும். அதே சமயம், ஒருவர் நேர்மறையாகவும், உற்சாகமாகவும் உணரும் போது புரிந்துணர்தல், யோசனைகள் மற்றும் திட்டங்களுக்கு ஆதரவைப் பெற உதவும்.

8. கண்ணியம் (Respect)

கண்ணியத்தின் முக்கிய அம்சம், தகவல் தொடர்புகளை எப்போது தொடங்க வேண்டும் மற்றும் பதிலளிக்க வேண்டும் என்பதை அறிவதாகும். உங்கள் குழு அல்லது குழு அமைப்புகளில் மற்றவர்களை குறுக்கீடில்லாமல் பேச அனுமதிப்பது அவசியமானத் தகவல் தொடர்பு திறனாகும். மரியாதையுடன் தொடர்பு கொள்வது என்பது – மற்றொருவருடன் புத்திசாலித்தனமாக நேரத்தைப் பயன்படுத்துவது, தலைப்பிலிருந்து விலகாமல் இருப்பது, தெளிவாக கேள்வி கேட்பதும், முழுமையாகப் பதிலளிப்பதாகும்.

9. மொழியற்ற அறிகுறிகளைப் புரிந்து கொள்ளுதல்

உடல் மொழி (Body Language) முகபாவங்கள் மற்றும் கண் தொடர்பு (Eye Contact) போன்ற மொழியற்ற அறிகுறிகளின் மூலம் ஒரு பெரிய அளவிலான தொடர்பு நிகழ்கிறது. நாம் ஒருவரின் பேச்சைக் கேட்கும்போது, அவர்கள் சொல்வதையும் மற்றும் அவர்களின் மொழியற்ற அறிகுறிகளையும் கவனிக்க வேண்டும். அதே அளவீட்டின் படி, மற்றவர்களுடன் நாம் தொடர்பு கொள்ளும் போது பொருத்தமான அறிகுறிகளை அனுப்புகிறோமா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டும், நம் உடல் மொழியைப் பற்றிய விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.



10. பொறுப்புணர்வு (Responsiveness):

நாம் ஒரு தொலைபேசி அழைப்பிற்குப் பதிலளிக்கும் போதும் அல்லது மின்னஞ்சலுக்குப் பதில் அனுப்பும் போதும், மெதுவாக பதிலளிப்பவர்களைக் காட்டிலும் வேகமான தொடர்பாளர்கள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்பர். பதிலளிக்க எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதைக் கருத்தில் கொள்வது ஒரு முறையாகும். இந்த ஒரு கோரிக்கைக்கு அல்லது கேள்விக்குப் பதலளிக்க அடுத்த 5 நிமிடங்களில் முடியுமா? அப்படியானால், பார்த்தவுடன் அதை நிவர்த்தி செய்வது நல்லது. அது மிகவும் சிக்கலான கோரிக்கை அல்லது கேள்வி எனில் நாங்கள் செய்தியைப் பெற்றுள்ளோம் என்பதை ஒப்புக் கொண்டும், மறு பதில் பின்னர் முழுமையாகப் பகிரப்படும் என்பதையும் மற்றவருக்குத் தெரியப்படுத்தவும்.

திறமையான தொடர்பாளர்களின் பண்புகள்



தகவல் தொடர்புத் திறன்களின் நன்மைகள்

- மோதலைக் குறைத்தல்
- பணியாளரின் ஈடுபாடு அதிகரித்தல்
- உற்பத்தித்திறன் மேம்படுத்துதல்
- வாடிக்கையாளருடனான உறவுகளை மேம்படுத்துதல்
- ஆரோக்கியமான பணியிட கலாச்சாரம்
- ஊழியர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்கள்
- பணியாளர் வேலை திருப்தியை அதிகரித்தல்
- புதுமையை அதிகரித்தல்

தகவல் தொடர்பு திறன்களின் தீமைகள்

- பயனுள்ள தகவல் தொடர்பின் குறைபாடு சங்கடத்தை ஏற்படுத்தும், இது தன்னம்பிக்கையை குறைக்கும்.
- தகவல் தொடர்புகளில் உள்ள சிரமங்களால், நம் கருத்துக்களை வெளிப்படுத்த முடிவதில்லை.
- நல்ல தகவல் தொடர்பு திறன் இல்லாதது நமது ஆளுமைக்கு எதிர்மறையாக இருக்கலாம்.
- எதிர்மறையான அங்கீகாரம்.
- அனுப்புனருக்கும் பெறுநருக்கும் இடையேயான பிரச்சனை.

செயல்பாடு 1

கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிரில் இருந்து திறமையான தொடர்பாளராக ஆவதற்குத் தேவையான திறன்களைக் கண்டறியவும்.

1. கருணை மற்றும் நேர்மை போன்ற சிறிய சைகைகள்
2. இந்த திறமையால் மட்டுமே மற்றவர்கள் விரைவாக பதிலளிக்கின்றனர்
3. தொடர்பைத் தொடங்குவதற்கான முக்கிய அம்சம் இது
4. தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் இது அவசியம்
5. இந்த திறன் கேள்விக்கு பதிலளிக்கிறது மற்றும் தீர்வை வழங்குகிறது.
6. அவ மரியாதையான அமைப்பைத் தவிர்க்க இந்த திறமையைக் கொண்டிருக்க வேண்டும்.

K	K	C	X	I	J	Q	J	E	X	F	H
N	Q	K	A	T	Y	H	T	A	P	M	E
H	Z	Z	M	Y	A	Y	D	T	O	P	A
F	R	I	E	N	D	L	I	N	E	S	S
M	F	I	I	D	A	Y	H	F	L	V	F
J	T	F	E	E	D	B	A	C	K	Y	J
U	X	L	V	U	U	Q	W	C	T	A	D
Q	I	E	O	M	Y	Z	B	L	J	V	H
D	C	O	N	F	I	D	E	N	C	E	E
V	O	L	U	M	E	N	D	E	H	H	B
J	V	T	C	E	P	S	E	R	F	X	L
G	I	F	L	G	N	L	C	V	O	N	A

3.5 செயல்திறன்மிகு கேட்டல் (ACTIVE LISTENING)

அறிமுகம்

கேட்பது ஒரு திறமை!

தகவல் தொடர்புகளில், பெரும்பாலான மக்கள் கேட்பது ஒரு சக்தி வாய்ந்த திறமை என்பதனை மறந்து, பேசுவதிலும் சொந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்வதிலும் கவனம் செலுத்துகிறார்கள். கேட்பது மற்ற நபரை தகுதியானவராகவும், பாராட்டப்பட்டவராகவும், சுவாரஸ்யமாகவும், மரியாதையாகவும் உணர வைக்கிறது. உதாரணமாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பேச்சைக் கவனிப்பது அவர்களின் சுயமரியாதையை வளர்க்க உதவுகிறது.



இந்த வணிக உலகத்தில், கேட்பது தவறான புரிதல்களைத் தடுத்து பணம் மற்றும் நேரத்தைச் சேமிக்கிறது. நாம் பேசுவதை விட கேட்கும்போது அதிகம் கற்றுக் கொள்கிறோம். கேட்கும் திறன்கள் நமது சமூகத்திற்கு எரிபொருளாகவும், மனவெழுச்சி, தொழில் முறை வெற்றியையும் மற்றும் நம்மால் கற்றுக் கொள்ள கூடிய ஒரு திறமை என்பதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

யாராவது ஒரு சொற்பொழிவை வழங்கும் போது, பங்கேற்பாளர்கள் கேட்கிறார்கள் என்று கருதப்படுகிறது, ஆனால் இது உண்மையல்ல. மக்கள் குறிப்பாக இளைஞர்கள் கேட்கிறார்கள் ஆனால் அவர்கள் உண்மையில் கவனிப்பதில்லை. எல்லோரும் ஒரே மாதிரி கேட்பதில்லை. புள்ளியியல் (Statistical) ஆய்வுகளின்படி மனிதர்கள் தொடர்ந்து 15 நிமிடங்கள் மட்டுமே கேட்க முடியும் அதன் பிறகு அவர்களின் கவனம் சிதறுகிறது.

செயல்திறன் மிகு கேட்டல் என்பது பரஸ்பர புரிதலை மேம்படுத்த பேசுபவரிடம் கேட்டு பதிலளிக்கும் ஒரு வழியாகும். இது உரையாடலில் கவனம் செலுத்துதல், குறுக்கிடாமல் இருப்பது பேச்சாளர் என்ன பேசுகிறார் என புரிந்து கொள்ள நேரம் ஒதுக்குவது போன்றவற்றை உள்ளடக்கியது. செயல்திறன்மிகு உறுப்பு என்பது விவரங்களை அடையாளம் கண்டு அது நேரடியாக பகிரப்படாமல் இருப்பதை உள்ளடக்கியது.

3A கேட்டல் (Triple A – Listening)

நன்றாக கேட்பது மூன்று திறன்களை அடிப்படையாகக் கொண்டது. கவனம் (Attention), மனப்பான்மை (Attitude) மற்றும் அனுசரிப்பு (Adjustment) இந்த திறன்கள் கூட்டாக 3A கேட்டல் என அழைக்கப்படுகின்றன.

கவனம்: கவனம் என்பது நபர்களை அவர்களின் முயற்சிகளில் செயல்திறன் மிகு இருக்க ஊக்குவிப்பதாகும். நாம் செயல்திறன் மிகு கவனிக்கும் போது, வார்த்தைகள் நினைவகத்தில் நுழைந்து கருத்துக்களாகச் செயலாக்கப்படுகின்றன.

மனப்பான்மை: நன்றாக கேட்பதற்கு ஆக்கப்பூர்வமான மனப்பான்மை பராமரிக்கப்படவேண்டும். அது திறந்த மனப்பான்மைக்கான வழிமற்றும் வாய்வழியாக வழங்கப்பட்ட பொருளை மனரீதியாக ஏற்றுக் கொள்ள தயாராக்க வழி வகுக்கிறது.

அனுசரிப்பு: கேட்பதில் அனுசரிப்பு, நிகழ்த்துதல் பாணி அல்லது கவனச் சிதறல் என்னவாக இருந்தாலும் விரும்பிய தகவலை பெற உதவுகிறது. தனக்குப் புரியவில்லை என்றால் அனுசரிப்பு சுபாவம் கேள்விகளைக் கேட்க தன்னைத் தானே ஊக்குவிக்கிறது.



கேட்டலின் வகைகள்:

- **விரிவான (தகவல்) கேட்டல்:**

இந்த வகையில் சில தகவல்களைப் பெறுவதற்காக கேட்கிறோம். உதாரணமாக விமான அறிவிப்புகள், இரயில்வே அறிவிப்புகள் அல்லது ஆசிரியர்களின் விரிவுரைகளைக் கேட்பது போன்றவையாகும். இந்த செய்தியின் உள்ளடக்கம் மிகவும் முக்கியமானது.

- **விமர்சன (மதிப்பீடு) கேட்டல்:**

நம் சொந்த விமர்சனச் சிந்தனைத் திறன்களைப் பயன்படுத்தி, சிந்தனையின் அடிப்படைச் செய்திகளை புரிந்து மதிப்பீடு செய்யலாம். உதாரணமாக நேர்காணலில் கேள்விகளைக் கவனிப்பது இந்த வகையின் கீழ் வரும்.

- **பாராட்டுதற்குரிய (அழகியல்) கேட்டல்:**

இந்த வகை கேட்டல் என்பது விருப்பத்தின் அடிப்படையில் கேட்பதாகும். பாடல்களைக் கேட்பது அல்லது சில மகிழ்ச்சி தரும் ஓசைகள் இந்த வகையின் கீழ் வரும்.

- **சிகிச்சைக்கான (பரிதாபக்) கேட்டல்:**

இந்த வகை பேச்சாளருக்கு பச்சாதாபம் (இரக்கத்துடன்) அடிப்படையில் கேட்பதாகும். இதில் தீர்ப்பளிப்பது அல்லது தவறுகளைக் கண்டுபிடிப்பது இல்லை.

செயல்பாடு 1

கடந்த ஐந்து நாட்களில் நீங்கள் செய்த அனைத்தையும் நினைத்துப் பாருங்கள். தகவல் அல்லது அறிவுறுத்தலுக்காக நீங்கள் கவனமாக கேட்க வேண்டியிருந்த மூன்று சந்தர்ப்பங்களை எழுதுக. (எ.கா. கடையில் பொருட்களை வாங்க உங்கள் பெற்றோருடன் பேசும்போது, நண்பர்களுடன் அவர்களின் நாளைப் பற்றி பேசும் போது)

1. _____

_____

_____

2. _____

_____

3. _____

_____

செயல் திறன்மிகு கேட்டலின் முக்கியத்துவம்

- நம்பிக்கையை உருவாக்குதல்
- அக்கறை காட்டுதல்
- மொழிகள் அல்லாத அறிகுறிகள்
- பேசி முடியும்வரை காத்திருத்தல்
- ஒரே மாதிரியான உதாரணங்களைப் பகிர்தல்
- பெயர்ப்புரை

நல்ல கேட்கும் திறனை வளர்ப்பதற்கானக் காரணங்கள்

- நம்பிக்கை மற்றும் வலுவான உறவுகளை உருவாக்குதல்
- மோதலைத் தீர்க்க உதவுதல்
- முக்கியமான தகவல்களைத் தவறவிடாமல் தடுத்தல்
- சிக்கல்களை அடையாளம் காண அல்லது எதிர்நோக்க உதவுதல்
- அறிவை வளர்க்க உதவுதல்
- ஒரு தலைவராக இருக்க அதிகாரம் அளித்தல்.
- கல்வி மற்றும் தனிப்பட்ட வெற்றி
- வெற்றிகரமான நேர மேலாண்மை.

செயல் திறன்மிகு கேட்டலின் தீமைகள்

- பேச்சாளர் முடிக்கும் வரை காத்திருந்தால், கேட்போர் கேள்விகளை மறந்து விடலாம்.
- பேச்சாளருக்கு பார்வையாளரிடமிருந்து கேள்விகள் ஏதும் எழாவிட்டால் சந்தேகம் வரலாம். இது நாம் ஒரு கேள்வியைக் கேட்கவில்லை ஆனால் சற்று முன் பேச்சாளர் என்ன சொன்னார் என்பதைப் பற்றிய நிச்சயமற்ற தன்மையைக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

செயல் திறன்மிகு கேட்டல் பயிற்சிக்கான வழிகள்:

இங்கே செயல்திறன் மிகு கேட்பாளராவதற்கு பயிற்சி செய்யக் கூடிய சில செயல்திறன் மிகு கேட்டல் நுட்பங்கள் உள்ளன.



உரையாடல்களிலும் கூட்டங்களிலும் மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள செயல்திறன் மிகு கேட்டல்நுட்பங்கள் உங்களுக்கு உதவும்.

1. கவனம் செலுத்துங்கள்
2. "நான் பார்க்கிறேன்", "எனக்குத் தெரியும்", "நிச்சயமாக", "நன்றி","எனக்குப் புரிகிறது" போன்ற சுருக்கமான வாய்மொழி உறுதி மொழிகள் மூலம் நெருக்கமான கேட்டலை வெளிப்படுத்தலாம்.
3. குறுக்கிடாதீர்கள் பேச்சாளர் முடிக்கும் வரை காத்திருங்கள்.
4. பதிலில் நேர்மையாக இருங்கள்.
5. கண் தொடர்பாடலைப் பராமரிக்கவும்.
6. உள் கவனச் சிதறல்களைக் குறைக்கவும்
7. திறந்த மனநிலையை வைத்திருங்கள் எந்த அனுமானமும் வேண்டாம்.

செயல்பாடு 2

ஒரு உரையாடலைக் கேட்பது மற்றும் முக்கியமான விவரங்களை குறிப்பிடுதல்,

குமார் – வணக்கம், மலர்

மலர் – வணக்கம், குமார் நீங்கள் இன்று கலை அறைக்கு சென்றீர்களா?

குமார் – இல்லையே, ஏன்?

மலர் – நல்லது. திரு.மணிவண்ணன், நமது கலை ஆசிரியர் ஒரு பெரிய திட்டப்பணியைப் (Project) பற்றிய அறிவிப்பை போட்டிருக்கிறார். அவர்கள் சுற்றுச் சுவரில் அழகிய ஓவியங்கள் தீட்ட திட்டமிட்டுள்ளனர். இது சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைத் தடுக்கும்.

குமார் – நன்றாக இருக்கிறது, அப்போ முழு சுற்றுச் சுவரிலும் பல ஓவியங்கள் இருக்குமல்லவா.

மலர் – சரியாக சொன்னாய் !

குமார் – ஆனால் எங்கே?

மலர் – பொது நூலகத்தின் ஓரத்தில் இருக்கும் அந்த நீண்ட சுவர் நம் பள்ளியின் பயிற்சியாளர்கள் தான் முழுவதையும் செய்யப் போகிறார்கள். நாமும் ஒரு வடிவமைப்பை உருவாக்கி அதற்கு வண்ணம் தீட்டலாம். நான் இந்த அணியின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறேன்.

குமார் – எனக்கும் பங்கு பெற வேண்டும் வா. கலை ஆசிரியர் திரு. மணிவண்ணனை சந்திப்போம்.

நாம் முக்கியமான புள்ளிகளை கவனிக்கலாம்.

- பெண்ணின் பெயர் – மலர்
- ஆணின் பெயர் – குமார்
- ஆசிரியரின் பெயர் – மணிவண்ணன்
- சுற்றுச் சுவரில் ஓவியம் தீட்டும் திட்டப்பணி – சுவரொட்டிகள் ஒட்டப்படுவதை தடுத்தல்
- பொது நூலகத்தின் ஓரச் சுவர் – இந்த பள்ளி மாணவர்கள் தங்கள் சொந்த வடிவமைப்பை உருவாக்குகிறார்கள்.
- இருவரும் சேர விரும்புகின்றனர்.

கீழே உள்ள கூற்றுகளில் எது உண்மை என்று பார்க்கலாம்.

1. நகரத்தில் ஒரு புதிய கலைத்திட்டம் (உண்மை / பொய்)
2. அவர்களின் கலை வகுப்பிற்கான பணி (உண்மை / பொய்)
3. பொது நூலகத்தின் உள்ளே ஒரு கலைக் காட்சி (உண்மை / பொய்)

4. வளாகத்தில் சிறுமி பார்த்த ஓவியம் (உண்மை / பொய்)

3.6 விளக்கத் திறன்கள்

அறிமுகம்

விளக்கம் என்பது கண்டறிதல், தீர்மானித்தல் அல்லது ஒப்படைத்தல்களின் செயல்முறை ஆகும். விளக்கத்திறன்கள் எதற்கும் பயன்படுத்தலாம். எ.கா. எழுதப்பட்ட செய்திகள், விளக்கப்படங்கள் (Charts), வரைபடங்கள் (Diagrams), நிலப்படம் (Maps), வரைகட்டம் (Graphs), நினைவுக் கூறுகள் (Memes).



விளக்கத் திறன்கள் என்பது பேச்சாளரிடமிருந்து செய்திகள் எந்த சேர்த்தலும் புறக்கணிப்பும் இல்லாமல் இலக்கு மொழியில் துல்லியமாகவும் மொழியியலாகவும் மாற்றக் கூடிய திறனாகும்.

விளக்கத் திறன்களின் பண்புக்கூறுகள்

விளக்கத் திறன்களில் ஐந்து பண்புக் கூறுகள் உள்ளன.

1. பதிவு செய்யும் திறன்கள்
2. மொழி அறிவு
3. நினைவாற்றல் திறன்கள்
4. நடுநிலைமை
5. பதிவு செய்யும் திறன்களைப் பயன்படுத்துவதன் மூலம், மொழி பெயர்ப்பாளர் என்ன பேசப்பட்டது என்பதைப் பதிவு செய்து மற்றும் பேச்சாளருக்கும் மொழி பெயர்ப்பாளருக்கும் தவறு இல்லாமல் சரியான செய்தி ஒழுங்கமைத்து தெரிவிக்கப்பதாகும்.

மொழியின் நல்ல அறிவைப் பெறுவதன் மூலம், மொழி பெயர்ப்பாளரால் சரியாக புரிந்து கொள்ள முடியும்.

நினைவாற்றல் திறன்களைப் பயன்படுத்துவதன் மூலம் மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் உள்ளடக்கத்தை அவர்கள் மூளையில் பதிவு செய்யலாம் மற்றும் தேவைப்படும் நேரத்தில் அதையே மீண்டும் நினைவிற்கு கொண்டுவரவும் முடியும்.

விளக்கத் திறனை மேம்படுத்துவதற்கான உத்திகள்

1. **குறிப்புகள் எடுக்கும் பழக்கம்:** சிறு குறிப்புகளை உருவாக்கும் பழக்கம், ஒரு நல்ல யோசனை மற்றும் எழுதும் பயிற்சியை உறுதி செய்வதாக இருக்கும்.
2. **நினைவில் வைக்க எளிதான பாணியை (Style) உருவாக்குங்கள்:** தனி நபர்கள் நினைவாற்றலுக்காக, தகவல்களை எளிமையாக நினைவில் வைத்துக் கொள்ள, சின்னங்கள் அல்லது எளிய புள்ளி விவரங்களை தேர்வு செய்யலாம்.
3. **கலாச்சாரம் மற்றும் தகவலின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்:** உரையை விளக்குவதற்கு முன் கற்பவர் அதன் சட்ட மீறல்களை புரிந்துகொள்ள பின்னணியை அறிதல் வேண்டும்.
4. **பல புலன் உணர்வு ஆதாரங்களைப் பயன்படுத்துதல்:** கற்பவர், ஒரே கருத்துக்களுக்கு பல நுண்ணறிவுகளை பெற காணொலிகள், படங்கள் அல்லது வேறு ஏதேனும் பல புலன் உணர்வு ஆதாரங்கள் போன்றவற்றை பார்க்கலாம்.
5. **பல்வேறு வகையான விளக்கப் பாணிகளை முயற்சித்தல்:** ஒருவர் பல்வேறு விளக்கப்பாணிகளில் இருந்து ஒன்றினை தேர்வு செய்யலாம்.

விளக்கத் திறனின் வகைகள்

ஒரே நேரத்தில் விளக்கம் (Simultaneous Interpretation)

ஒரே நேர மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் மனதிலிருக்கும் பேச்சை உடனடியாக விரும்பிய மொழிவடிவில் குறைந்த பட்ச நேரத்தில் மில்லி வினாடிகளில் வழங்குகிறார்கள். அசல் பேச்சு எந்த இடையூறு இல்லாமல் தொடர்வதற்குப் பார்வையாளர்கள் மற்றும் பேச்சாளர்களிடமிருந்து உடனடி புரிதல் தேவைப்படுகிறது.

தொடர்ச்சியான விளக்கம் (Consecutive Interpretation)

தொடர்ச்சியான முறையானது கட்டமைக்கப்பட்ட குறிப்புகளை எடுப்பதில் பெரிதும் சார்ந்துள்ளது. அசல் பேச்சாளர் ஒவ்வொரு சில வாக்கியங்களுக்கும் இடைநிறுத்துதல் வேண்டும், அதே போன்று மொழி பெயர்ப்பாளரும் இடைவிடாமல் குறுக்கிட்டு எதிர்பார்த்த மொழியில் பேச்சை விளக்க வேண்டும்.

முணுமுணுப்பான விளக்கம் (Whispered Interpretation)

இ. நெறிப்படுத்துதல் ஈ. செயல்படுத்துதல்

II. பின்வருவம் வினாக்களுக்கு விடையளிக்கவும் (2 மதிப்பெண்கள்)

1. குழு இயக்கத்தை வரையறுக்கவும்.
2. ஒரு நிறுவனத்தில் சுற்றுப்புற நுண்ணாய்வு என்றால் என்ன?
3. தலைமைத்துவத்தை வரையறுக்கவும்.
4. இடைக்குழு நடத்தை என்றால் என்ன?
5. முன்முயற்சி திறன் என்றால் என்ன?

III. பின்வருவம் வினாக்களுக்கு விடையளிக்கவும் (3 மதிப்பெண்கள்)

1. முன்முயற்சித் திறன்களைக் காட்ட தற்குறிப்பில் சேர்க்கக்கூடிய வார்த்தைகளை பட்டியலிடவும்.
2. சுற்றுப்புற நுண்ணாய்வு செய்ய என்னென்ன நுட்பங்கள் உள்ளன?
3. முன்முயற்சி திறன்களை மேம்படுத்த ஏதேனும் 3 வழிகளை பட்டியலிடவும்.
4. ஒரு பணியமர்த்துபவர்களுக்கு மறுதிறனாக்கத்தின் நன்மைகளைப் பட்டியலிடவும்.
5. குழுக்களின் வகைகளை எழுதுக.

IV. பின்வருவம் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. வேலையில் தகவமைப்பு திறனை அதிகரிப்பதற்கான சில வழிகளைக் குறிப்பிடவும்.
2. ஒரு திறமையான தலைவர் கொண்டிருக்க வேண்டிய பாத்திரங்களை பட்டியலிடவும்.
3. திறன் மேம்பாடு மற்றும் மறுதிறனாக்கம் ஆகியவற்றை ஒப்பிடவும்.
4. குழு இயக்கத்தை அதிகரிக்கும் நிலைகள் யாவை?



7

பாலினம்

கற்றலின் நோக்கம்

- பணியிடத்தில் உள்ள பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்ளுதல்
- பணியிடத்தில் உட்சேர்ப்பு என்ற சொல்லை அடையாளம் காணுதல்
- பணியிட உட்சேர்ப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்
- உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை மற்றும் அதன் தேவையை விவரித்தல்
- பாலினம் சார்ந்த கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் சமூக அதிகாரம் ஆகியவற்றை விவரித்தல்
- பாலினங்களின் மத்தியில் பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்புகளை விளக்குதல்
- பெண்களைப் பொறுத்தமட்டில் வளர்ச்சிக்கான தடைகளைப் புரிந்து கொள்ளுதல்
- வளர்ச்சிக்கான தடைகளை கடப்பதற்கான வழிகளை பட்டியலிடுதல்

7.1 பணியிடத்தில் பன்முகத்தன்மை

பன்முகத்தன்மை என்பது பல்வேறு வகையான பிரிவுகளால் ஆனது. எ.கா: ஒரு ரோல் பாபின்ஸ் மிட்டாய் பல்வேறு நிறங்கள் மற்றும் சுவைகளைக் கொண்டுள்ளது, ஆனால் போலோ மிட்டாய் அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்கும். பணியிடத்தில் பன்முகத்தன்மை என்பது வெவ்வேறு பால், பாலினம், சாதி, வகுப்பு, வயது, உடல் தோற்றம், கல்வி, திறன்கள் மற்றும் பலவற்றைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வேலை செய்யும் அமைப்பைக் குறிக்கும். பலதரப்பட்ட பணியிடங்கள் என்பது பல்வேறு பின்னணியில் இருந்து பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்கள் பாதுகாப்பான மற்றும் மரியாதையான சூழலில் பணிபுரியும் ஒரு இடமாகும்.

உங்கள் வகுப்பறையைச் சுற்றி உங்கள் வகுப்பு தோழர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாருங்கள். உங்கள் வகுப்பறையில் என்ன வகையான நபர்கள் இருக்கிறார்கள்?

ஆண்களும் பெண்களும்? உயரமானவர்கள், குட்டையானவர்கள்? இவை வெளிப்படையான வேறுபாடுகள்.



பணியிடத்தில் பன்முகத்தன்மையின் முக்கியத்துவம்

பணியிட பன்முகத்தன்மை அடையப்படும்போது, பாலினத்தைப் பொருட்படுத்தாமல் மக்கள் சமமான வெகுமதிகள், வளங்கள் மற்றும் வாய்ப்புகளை அணுகவும் அனுபவிக்கவும் முடியும். பணியிட பன்முகத்தன்மையின் சில முக்கியத்துவங்களாவன:

1. பலதரப்பட்ட பணியிடம் வெவ்வேறு கண்ணோட்டங்கள் கொண்டவர்களை ஒன்றிணைக்கிறது. இது படைப்பாற்றலையும் புதுமையையும் அதிகரிக்கிறது. இதனால் அதிக வாடிக்கையாளர்களுக்கு வழிவகுக்கிறது.
2. பலதரப்பட்ட பணியிடமானது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் வாடிக்கையாளர் திருப்திக்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கிறது. ஒரு குழு பலதரப்பட்டதாக இருக்கும் போது, அவர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய நபர்களின் வரம்பும் பரந்ததாக இருக்கும்.
3. பலதரப்பட்ட பணியிடமானது சரியான நபர் சரியான பணி பெறுவதை உறுதி செய்வதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது.

பன்முகத்தன்மைக்கான தடைகள்

பலதரப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருப்பதற்கு பல தடைகள் அல்லது தடங்கல்கள் உள்ளன. மக்கள், அவர்களிடமிருந்து வேறுபட்டவர்களுடன் சௌகரியமாக இருப்பது எளிதானது அல்ல. இது மோதல்களுக்கு வழிவகுக்கிறது, இது இறுதியில் வேலையை பாதிக்கிறது. பன்முகத்தன்மைக்கான தடைகள் மற்றவர்களைப் புரிந்துகொள்ளாததும் மதிக்காததுமே ஆகும். இது நிகழ்வதற்கான காரணங்கள் சில கிழேபட்டியலிடப்பட்டுள்ளன:

	தடைகள்	காரணங்கள்
1	பாரபட்சம்	மக்கள் பெரும்பாலும் அவர்களிடமிருந்து வேறுபட்ட மற்றவர்களிடம் பாகுபாடு காட்டுகிறார்கள். எ.கா: பல ஆண்டுகளாக, சில சமூகங்கள் மற்ற சமூகங்களுக்கு எதிராக தீண்டாமையை கடைபிடித்து, வேலை செய்ய, சாப்பிட அல்லது அவர்களுடன் பழக மறுத்துவிட்டனர்.
2	கலாச்சார வேறுபாடுகள்	இந்தியாவில் பொதுவாக ஒருவரையொருவர் சார் அல்லது மேடம் என்று அழைப்போம். நவீன அலுவலகங்களில், எல்லோரும் ஒருவரையொருவர் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். அவர்களின் வயது, அந்தஸ்து அல்லது பதவி ஒரு பொருட்டல்ல. இது ஒரு கலாச்சார வேறுபாடு மற்றும் சில நேரங்களில் இது மோதலுக்கு வழிவகுக்கிறது.
3	கூடுதல் வசதிகள்	பலதரப்பட்ட பணியாளர்களுக்கு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படலாம். எ.கா: மாற்றுத்திறனாளி போன்றவர்களை பணியமர்த்தும் போது புதிய கழிவறை வசதிகள் தேவைப்படலாம்.
4	தொடர்பு / மொழி	இந்தியாவில் பல மொழிகள் உள்ளன. அவை அனைத்தும் சமமாக முக்கியமானவை. நிறுவனம் ஒரு மொழியை மட்டுமே தொடர்பு மொழியாக உபயோகிக்கும் போது அல்லது மதிக்கும்போது, அது மற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உணர்வை ஏற்படுத்துகிறது. ஆங்கிலம் அல்லது இந்தியில் பேசத் தெரியாதவர்களை பலர் கேலி செய்கிறார்கள். மோதல் மற்றும் வலிக்கு இது மற்றொரு காரணமாக இருக்கிறது.
5	தலைமுறை இடைவெளி	வெவ்வேறு தலைமுறை சார்ந்த மக்கள் வித்தியாசமாக நினைக்கிறார்கள். வயதானவர்கள் தொழில்நுட்பம் பயன்படுத்துவதை கடினமாக நினைக்கலாம். அந்த நேரத்தில் அவர்கள் இளைஞர்களால் பாகுபாடு காட்டப்படுகிறார்கள். இதேபோல், ஒரு அலுவலகத்தில் இளைஞர்கள் பழைய ஊழியர்களை விட வித்தியாசமாக சிந்தித்து வேலை செய்கிறார்கள். இது சிக்கல்களை உருவாக்கலாம்.

பணியிடத்தில் பன்முகத்தன்மையின் தடைகளை சமாளித்தல்



1. பன்முகத்தன்மையை ஒரு நிறுவனக் கொள்கையாக ஆக்குதல்

ஒவ்வொரு பணியிடத்திற்கும் விடுப்புக் கொள்கை இருப்பதுபோல்,பன்முகத்தன்மைக்கொள்கையும் இருக்க வேண்டும். இந்தக் கொள்கை, பலதரப்பட்ட நபர்கள் பணியமர்த்தப்படுவதை ஊக்குவிக்க வேண்டும். பணியமர்த்தப்பட்ட பிறகு, வெவ்வேறு பின்னணியில் உள்ள பல்வேறு வகையான நபர்கள் மரியாதையுடன் எவ்வாறு பணியாற்றுவது என்ற கொள்கை விளக்கம் தர வேண்டும்.

2. பயிற்சி அளித்தல்

தங்களிடமிருந்து வேறுபட்டவர்களைத் தொடர்புகொள்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும் மக்கள் சிரமப்படுவது இயற்கையானது. சரியான பயிற்சியால் மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவும் மதிக்கவும் அது உதவுகிறது.

3. பலதரப்பட்ட பணியிடமாக இருப்பது பற்றி வாய்மொழியாக உரைத்தல்

ஒரு அமைப்பு பன்முகத்தன்மையை ஊக்குவிக்கிறதுஎன்பதைதெளிவுபடுத்துங்கள். இது திறமையானவர்களை அதிக அளவில் விண்ணப்பிக்க ஊக்குவிக்கும். அனைத்து ஊழியர்களுக்கும் சரியான எதிர்பார்ப்புகள் இருப்பதையும் இது உறுதி செய்யும்.

4. மேல் பதவியிலிருந்து முன்னுதாரணம் அழித்தல்

அமைப்பின் உயர்மட்ட உறுப்பினர்களும் பலதரப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதன் பொருள் தலைமைப் பதவிகளும் பலதரப்பட்ட மக்களால் நிரப்பப்படுகின்றன – பெண்கள், ஆண்கள், திருநங்கைகள்.

பலன்கள்

பலதரப்பட்ட பணியிடங்களின் நன்மைகள்:

- அதிகரித்த லாபம்
- சிறந்த வாடிக்கையாளர் திருப்தி
- புதுமை
- பரஸ்பர மரியாதை.

செயல்பாடு 1

உங்கள் வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட பண்புகளை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? இல்லையென்றால், இதைச் செய்வதற்கான வாய்ப்பு இதுவாகும். உங்கள் நண்பர்களின் தனிப்பட்ட, அவர்களை மற்றவர்களிடமிருந்து தனித்து நிற்கச் செய்யும் குணாதிசயங்களை அடையாளம் காணவும். இது ஒரு குணம்/நடத்தை/ பழக்கம்/ அல்லது வேறேதாவதாகவும் இருக்கலாம்.

அவற்றை இங்கே பட்டியலிடவும்.





7.2 பணியிடத்தில் உட்சேர்ப்பு

அறிமுகம்



உட்சேர்ப்பு என்பது உள்ளிட்ட செயலைக் குறிக்கிறது. உதாரணமாக, நீங்கள் ஈத், கிறிஸ்துமஸ், அல்லது தீபாவளியைக் கொண்டாடும் போது, பல்வேறு மதங்களைச் சேர்ந்த அண்டை வீட்டாரையும் சேர்த்துக் கொள்கிறீர்கள். மரியாதையுடனும் அன்புடனும் மக்களைச் சேர்க்கும் நடைமுறையே உட்சேர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. பணியிட உட்சேர்ப்பு, பணிச்சூழலில் இருக்கும் ஒவ்வொரு பணியாளரையும் மதிப்பபாக உணர வைக்கிறது, அதே நேரத்தில் அவர்களின் வேறுபாடுகளை ஒப்புக்கொள்கிறது மற்றும் இந்த வேறுபாடுகள் நிறுவனத்தின் கலாச்சாரம் மற்றும் வணிக விளைவுகளுக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்று உணர்த்துகிறது.

பணியிட உட்சேர்ப்பின் முக்கியத்துவம்

ஒரு அமைப்பு அனைவரையும் உள்ளடக்கியதாக இல்லாவிட்டால், மரியாதைக்குரியசூழல்இருக்காது.ஊழியர்கள் ஒருவருக்கொருவர் பாகுபாடு காட்டலாம். ஊழியர்கள் தங்கள் கருத்துக்களைப் பேசவும் பகிர்ந்து கொள்ளவும் தயங்கலாம்.

உட்சேர்ப்பு என்பது ஒரு நிறுவனத்தை உண்மையிலேயே பன்முகத்தன்மையுடனும் உயிரோட்டமாகவும் மாற்றும் மாயப் பொருளாகும். பன்முகத்தன்மையை ஒரு விளக்காக நினைத்துப் பாருங்கள். உட்சேர்ப்பு என்பது விளக்கை ஒளிரச் செய்ய தேவையான மின்சாரம்.

இறுதியாக பணியாளருக்கு, வேலையில் மகிழ்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு பணியிட உட்சேர்ப்பு அவசியம். பணியிட உட்சேர்ப்பால் அதிகரிக்கப்படும் காரணிகள் கிழே கொடுக்கப்பட்டுள்ளது:

- **வேலை திருப்தி மற்றும் ஈடுபாடு:** பணியிடத்தில் உட்சேர்ப்பு ஊழியர்களின் வேலை திருப்தியை மேம்படுத்தும், ஏனெனில் இது தலைவர்களுக்கு அர்த்தமுள்ள வேலையை வழங்க அனுமதிக்கிறது.
- **பணியாளர் நல்வாழ்வு:** வேலையில் சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும் உணரும் பணியாளர்கள் சிறந்த வேலை–வாழ்க்கை சமநிலையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
- **பணியாளர் தக்கவைப்பு:** வேலையில் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உணரும் ஊழியர்கள் ஒரே நிறுவனத்தில் நீண்ட காலம் தங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
- **உயர் திறமையான பணியாளர்:** பணியிட சேர்க்கையை உருவாக்கி வளர்க்கும் நிறுவனங்கள், அவர்களின் திறந்த நிலைகளுக்கு சிறந்த வேட்பாளர்களை ஈர்க்கும்.

உள்ளடக்கிய பணியிடத்தை உருவாக்குதல்:



தேவைப்பட்டால் மட்டுமே மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பணியிட உட்சேர்ப்பிற்கு எடுக்கக்கூடிய சில படிகள் பின்வருமாறு:

1. **உள்ளடக்கிய தலைமை:** ஒரு நிறுவனத்தில் தலைமைக் குழு உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதாவது தலைவரானவர்,
   - பலதரபட்டவராக
   - உட்சேர்பவராக
   - உள்ளடக்கிய பணியாளர்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுபவராக இருத்தல் வேண்டும்

2. **உட்சேர்ப்பை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள்:** நிறுவனங்களின் ஒவ்வொரு முடிவுகளிலும் உட்சேர்ப்பது ஒருங்கிணைக்கப்பட வேண்டும், அதாவது:
   - அனைத்து மட்டங்களிலும் பலதரப்பட்ட மற்றும் உள்ளடக்கிய பணியாளர்களை பணியமர்த்தல்
   - விளம்பரங்களும் வளர்ச்சியும் உள்ளடக்கிய நோக்கம் கொண்டிருக்க வேண்டும்
   - சம வேலைக்கு சம ஊதியம்
3. **பன்முகத்தன்மையைக் கொண்டாட வேண்டும்:** இது வெவ்வேறு பண்டிகைகளைக் கொண்டாடுவது, உணவைப் பகிர்வது போன்றவற்றின் மூலமாக இருக்கலாம்.
4. **பயிற்சி:** அனைத்து மட்டங்களிலும் உள்ள அனைத்து ஊழியர்களும் உட்சேர்ப்பு, அதன் முக்கியத்துவம் மற்றும் நிறுவனத்திற்குள் அதை எவ்வாறு ஆதரிப்பது என்பதை குறித்த பயிற்சியைப் பெற வேண்டும்.
5. **வடிவமைப்பு:** உங்கள் பணியிடத்திலுள்ள உட்கட்டமைப்பு மக்களின் தேவைகளை உணரும் வகையில் வடிவமைக்கப்படவேண்டும். எளிய மாற்றங்கள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். ஒரு சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:
   - படிக்கட்டுகளுக்குப் பதிலாக சாய்வுப் பாதைகளைப் பயன்படுத்துதல்
   - சைன் போர்டுகளை பெரிதாக்குதல்.
   - தங்கள்கைகளில்முழுஇயக்கம்இல்லாத மக்கள் கூட பயன்படுத்தக்கூடிய நெம்புகோல் கைப்பிடியுடன் கூடிய பரந்த கதவுகள் அமைத்தல்
   - அனைத்து வித மக்களுக்கும் சரிபடுத்தக்கூடிய மேசைகள் மற்றும் நாற்காலிகள் செய்வித்தல்
   - ஒளிரும் விளக்குகள் போன்ற பல உணர்வு பாதுகாப்பு அலாரங்கள் அமைத்தல்.
6. **தொடர்ந்து மதிப்பீடு செய்யுங்கள்:** உங்கள் நிறுவனம் உண்மையிலேயே உள்ளடக்கியதா என்பதைச் சரிபார்க்கவும். இதற்கான எடுத்துக்காட்டுகள்:
   - அனைத்து ஊழியர்களும் தங்கள் கருத்துக்களை கூட்டங்களில் பகிர்ந்து கொள்கிறார்களா?
   - சில ஊழியர்கள் பேசும்போது மற்றவர்களை தடைபன்னுகிறார்களா?
   - அனைத்து ஊழியர்களிடையேயும் பணி நியாயமாக ஒதுக்கப்பட்டுள்ளதா?
   - தகுதியுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் தலைமைப் பதவிகளுக்கான வாய்ப்புகள் சமமாக வழங்கப்படுகிறதா?

செயல்பாடு 1

சிந்தி, இணை பின்பு பகிர்ந்து கொள்:

3 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை உருவாக்கவும், ஒவ்வொரு சூழ்நிலையையும் பகுப்பாய்வு செய்து, உட்சேர்ப்பதன் அடிப்படையில் தீர்வுகளை வழங்கவும்.

எண்	சுழ்நிலை	தீர்வு
1	விளையாட்டு மைதானத்தில் விளையாடும் போது 11 உறுப்பினர்கள் கொண்டு மட்டுமேவிளையாட முடியும் ஆனால் 12 பேர் உள்ளனர். விடுபட்ட நபரைப் பற்றி என்ன செய்வீர்கள்?	
2	ஒரு மேஜையில் மதிய உணவு சாப்பிடும் போது உட்கார 5 நாற்காலிகள் உள்ளன. மாணவர்கள் தங்கள் பையை ஒரு நாற்காலியில் வைத்து விட்டு, அவர்கள் வசதியாக மீதமுள்ள 4 நாற்காலிகளில் அமர்ந்து சாப்பிடுவார்கள். தாமதமாக வந்த ஒரு மாணவர், உட்கார நாற்காலி இல்லாமல் இருக்கிறார், அந்த நபரை அனைவரும் தவிர்க்கின்றனர். நீங்கள் இந்த சுழ்நிலையில் என்ன செய்வீர்கள்?	
3	குழுவாக பணிகளைச் செய்யும்போது, ஒரு புதிய மாணவர் 3 நண்பர்கள் குழுவில் நுழைகிறார். புதிய மாணவர் எப்படி நடத்தப்படுவார்?	

7.3 உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை



- பாலின இடைவெளி என்பது சமூக, அரசியல், அறிவுசார், கலாச்சார அல்லது பொருளாதார சாதனை அணுகுமுறைகளில் பிரதிபலிக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.
- பாலின சமத்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகையில் ஆண்கள் மற்றும் பெண்கள் அல்லது சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கு இடையிலான விகிதங்களை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு புள்ளிவிவர பிரதிநிதித்துவமாகும்.
- உலகப் பொருளாதார மன்றம் (WEF) அனைத்து நாடுகளிலும் பாலின சமத்துவத்தை அளவிடுவதற்கான குறியீடை உலகளாவிய பாலின சமத்துவ இடைவெளி அறிக்கையாக (GGGR) வெளியிடுகிறது. முதல் அறிக்கை 2006 இல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- GGGI இன் சமீபத்திய அறிக்கை 2022 இல் WEF ஆல் வெளியிடப்பட்டது, இந்தியா 146 நாடுகளில் 135 வது இடத்தில் உள்ளது.

உலகளாவிய பாலின சமத்துவ இடைவெளி குறியீடு (GGGI) என்றால் என்ன?

உலகளாவிய பாலின சமத்துவ இடைவெளி அறிக்கையானது உலகளாவிய பாலின சமத்துவ இடைவெளி குறியீட்டிற்கு மதிப்பெண்களை வழங்குகிறது, இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவ இடைவெளியை நான்கு பரிமாணங்களில் ஆய்வு செய்கிறது:

- பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்பு
- கல்வி கிடைக்கும் அளவு
- ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தல்
- அரசியல் அதிகாரமளித்தல்

GGGI இன் தேவை:

- ஒரு நாடு தனது வளங்களையும் வாய்ப்புகளையும் ஆண் மற்றும் பெண் மக்களிடையே எவ்வாறு பிரித்துக் கொள்கிறது என்பதை இது அடையாளம் காட்டுகிறது
- எந்த நாடு முன்மாதிரியாக செயல்படுகிறது என்பதை தீர்மானிக்க இது ஒரு கட்டமைப்பை வழங்குகிறது
- இது பாலின சமத்துவத்தின் தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கிறது
- பாலின சமத்துவத்தை நோக்கி பல்வேறு நாடுகளால் எடுக்கப்பட்ட கொள்கைகளை அடையாளம் காண பிற நாடுகளுக்கு உதவுகிறது.

GGGI இன் பரிமாணங்கள்

	பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்பு
	கல்வி கிடைக்கும் அளவு
	ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தல்
	அரசியல் அதிகாரமளித்தல்

GGGI ஐ அளவிடுவதற்கான பல்வேறு பரிமாணங்கள்

ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தல்

ஆண்–பெண் ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தல் என்பது பெண்கள் தங்கள் வாழ்நாளில் அதிக மருத்துவ நிலைமைகள் மற்றும் இயலாமையை அனுபவிக்கும் நிகழ்வுகள் இருந்தாலும், அவர்கள் எதிர்பாராத விதமாக ஆண்களை விட நீண்ட காலம் வாழ்கிறார்கள். இந்த முரண்பாடானது, ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் அதிக நோய்களை அனுபவித்தும் குறைவான மரணம் ஏற்படுகிறது, இது அசாதாரணமான ஒரு கருத்து, ஏனெனில் நோயை அனுபவிப்பது இறப்புக்கான வாய்ப்பை அதிகரிக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது இந்த காரணத்தால் ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தல் GGGI ஐ அளவிடுவதற்கான ஒரு பரிமாணமாக பயன்படுகிறது.

ஒவ்வொரு பாலினத்திற்கும் ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்வை தீர்மானிக்கும் காரணிகள் கிழ்கண்டவற்றை சார்ந்துள்ளது:

- நோய்கள்
- ஆபத்து காரணிகள் மற்றும் நடத்தைகள்
- உயிரியல் காரணிகள்
- சமூக காரணிகள்
- உளவியல் காரணிகள்

கல்வி



பாலினம் மற்றும் கல்வி பற்றிய ஆய்வு, கல்வி முறையின் சாதனை, மற்றும் அனுபவங்கள் கல்வி விளைவுகளில் பாலின வேறுபாடுகளை உள்ளடக்கியது. இந்தத் துறையானது பாலினம் எவ்வாறு கல்வி முடிவுகளை பாதிக்கிறது மற்றும் பாலின வேறுபாடுகள் தொழிலாளர் சந்தை, குடும்ப உருவாக்கம் மற்றும் சுகாதார விளைவுகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிய ஆய்வுகளை உள்ளடக்கியது.

வேலைவாய்ப்பு



உலகம் முழுவதும், வேலை தேடுவது ஆண்களை விட பெண்களுக்கு மிகவும் கடினமாக உள்ள ஒரு செயலாகும். வேலை செய்ய விரும்பும் பெண்கள் ஆண்களை விட வேலை தேடுவதில் சிரமப்படுகிறார்கள். பல குறைவான கல்வியறிவு பெற்ற பெண்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் குறைந்த தரம் வாய்ந்த வேலைகளில் பணிபுரிகின்றனர், மேலும் எதிர்காலத்தில் முன்னேற்றத்திற்கு இடமில்லாமல் இருக்கிறார்கள்.

பொருளாதாரம்

தொழிலாளர் பங்கேற்பு மற்றும் ஊதியம் போன்ற பொருளாதார விளைவுகளில் பாலின வேறுபாடுகள் கடந்த பல வருடங்களில் பொருளாதார நிபுணர்களிடமிருந்து அதிகரித்து வரும் கவனத்தைப் பெற்றுள்ளன – இது பொருளாதார சிந்தனையில் நேர்மறையான மற்றும் மிகவும் தேவையான வளர்ச்சியாகும்.

சமூக அதிகாரமளித்தல்



பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற வார்த்தையின் அர்த்தம், சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விதிமுறைகளைப் போலவே வெளிப்புற சூழலில் அன்றாட நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் சக்தி பெண்களுக்கு உள்ளது என்பதாகும். பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது பொருளாதார வளர்ச்சியில் புதிய கருத்து ஆகும். இது பெண்களுக்கு சமமான வேலைகள் கிடைப்பதன் மூலம் முழு நாட்டின் வருவாயையும் மேம்படுத்த முடியும் என்பதாகும்.

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் பாலின இடைவெளியைக் குறைக்க இந்தியா எடுத்த முயற்சிகள்

- **பேட்டி பச்சாவோ பேட்டி பதௌ(Beti Bachao Beti Padhao):** இது பெண் குழந்தையின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் கல்வி ஆகியவற்றை உறுதி செய்கிறது.
- **மஹிளா ஷக்தி கேந்திரா(Mahila Shakti Kendra):** திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகளுடன் கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **மஹிளா காவல் தொண்டர்கள் (Mahila Police Volunteers):** காவல்துறைக்கும் சமூகத்திற்கும் இடையே இணைப்பாகச் செயல்பட மற்றும் துன்பத்தில் இருக்கும் பெண்களுக்கு உதவியாக இருக்க மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள மகிளா காவல்துறை தன்னார்வத் தொண்டர்களை ஈடுபடுத்த இது திட்டமிடுகிறது.
- **ராஷ்ட்ரிய மகிளா கோஷ்(Rashtriya Mahila Kosh):** இது ஒரு உச்சக்கட்ட நுண்–நிதி அமைப்பாகும், இது பல்வேறு ஏழைப் பெண்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்காக சலுகை அடிப்படையில் சிறு கடன்களை வழங்குகிறது.
- **சுகன்யா சம்ரித்தி யோஜ்னா(Sukanya Samriddhi Yojna):** இந்தத் திட்டத்தின் கீழ் பெண்கள் தங்கள் வங்கிக் கணக்குகளைத் திறப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்டுகின்றனர்.
- **பெண் தொழில்முனைவோர்:** பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்க, ஸ்டாண்ட்–அப் இந்தியா மற்றும் மஹிலா இ–ஹாட்(Mahila e–Haat) (பெண் தொழில்முனைவோர்/ SHGகள்/ NGO களை ஆதரிக்கும் நிகழ்நிலை சந்தைப்படுத்தல் தளம்), தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ESSDP) போன்ற திட்டங்களை அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- **கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (Kasturba Gandhi Balika Vidyalaya):** இவை கல்வியில் பின்தங்கிய தொகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன.
- **சுகன்யா சம்ரித்தி யோஜனா (Sukanya Samriddhi Yojna):** இந்தத் திட்டத்தின் கீழ் பெண்கள் தங்கள் வங்கிக் கணக்குகளைத் திறப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்டுள்ளனர். சுகன்யா சம்ரித்தி யோஜனா என்பது இந்திய அரசாங்கத்தின் சேமிப்புத் திட்டமாகும், இது இந்தியாவில் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளின் உயர்கல்வி மற்றும் இதர செலவுகளுக்காக நிதியை உருவாக்க உதவுவதற்காக இது தொடங்கப்பட்டது.
- **திறன் மேம்பாடு மற்றும் மகிளா காயர் யோஜ்னா (Mahila Coir Yojna)** என்பது தென்னை நார் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் கைவினைஞர்களின் திறன் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட MSME இன் பிரத்யேக பயிற்சித் திட்டமாகும்.
- **பஞ்சாயத்து ராஜ்** நிறுவனங்களில் பெண்களுக்கு 33% இடங்களை அரசு ஒதுக்கியுள்ளது.
- **தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளின் திறனைக் கட்டியெழுப்புதல்:** நிர்வாகச் செயல்முறைகளில் திறம்பட பங்கேற்பதற்கு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில் இது நடத்தப்படுகிறது.

செயல்பாடு 1

இணையத்தைப் பயன்படுத்தி WEF இன் உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையைக் கண்டறிந்து, 2006 முதல் இந்தியா பெற்றுள்ள தரவரிசையைப் பகுப்பாய்வு செய்யவும். தரவரிசையை அட்டவணைப்படுத்தவும், உங்கள் வகுப்பில் மாற்றங்களைப் பற்றி விவாதிக்கவும்.

எண்	அறிக்கை ஆண்டு	நாடுகளின் மொத்த எண்ணிக்கை	இந்தியாவின் தரவரிசை

7.4 பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்புகள்

அறிமுகம்

உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளபடி, பாலின இடைவெளியை குறைத்தால் மட்டுமே 20%க்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடைய முடியும். ஆண்கள் செய்யும் அதே விகிதத்தில் பெண்களும் புதிய வணிகங்களைத் தொடங்கினால், 5–6 டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார ஆதாயங்களை பெற முடியும் என ஆய்வுகள் மதிப்பிடுகின்றன. எனவே ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த இரு பாலினத்தவர்களும் வேலையில் பங்கேற்பது அல்லது பாலின சமத்துவத்தை நோக்கி நாடுகளின் கொள்கைகளை துரிதப்படுத்துவது அவசியம். ஆனால் இரு பாலினருக்கும் வேலை வாய்ப்புகள் முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கிறது, ஏனெனில் ஆண்களுக்கு பல பொருத்தமான வேலைவாய்ப்பு எளிமையாக தோன்றினாலும் பெண்களுக்கு பாதுகாப்பு காரணங்களை குறித்து நடைமுறையில் வேலைவாய்ப்பு கடினமானதாக உள்ளது.

பாலினத்திற்கிடையான பொருளாதார பங்கேற்பு என்பது பாலினத்தின் உழைப்பு விகிதத்தை குறிக்கிறது. இதன் பொருள், மக்கள்தொகையில் பாலின வாரியாக தொழிலாளர் படையில் இருக்கும் விகிதத்தை இது அளவிடுகிறது. மற்றொரு வழியில் இதை கூறினால், இது தொடர்ந்து வேலை தேடும் அல்லது ஏற்கனவே வேலை செய்யும் நபர்களின் எண்ணிக்கையைப் பற்றியது.

பாலின சமத்துவத்தை அடையக்கூடிய காரணிகளாவது:

அ) பெண் விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களின் வருவாய் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்;

ஆ) வேலையில் பெண் தொழிலாளரின் பங்கையும் அவர்களுக்கான வேலைவாய்ப்பையையும் விரிவுபடுத்துதல்; மற்றும்

இ) சமூகங்கள், வணிகங்கள் மற்றும் பொதுத்துறையில் முடிவெடுப்பதில் பெண்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பை ஊக்குவித்தல்.

பெண்களின் பொருளாதாரஅதிகார வலுவூட்டல்



பெண்களின் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்தை உணர்ந்து கொள்வதில் பெண்களின் பொருளாதார அதிகார வலுவூட்டல் மையமாக உள்ளது. பெண்களின் பொருளாதார அதிகார வலுவூட்டல் என்பது தற்போதுள்ள சந்தைகளில் சமமாக பங்குபெறும் பெண்களின் திறனை உள்ளடக்கியது; உற்பத்தி வளங்களுக்கான அணுகல் மற்றும் கட்டுப்பாடு, பண்பான வேலைக்கான அணுகல், அவர்களின் சொந்த நேரம், வாழ்க்கை மற்றும் உடல் மீதான கட்டுப்பாடு; குடும்பம் முதல் சர்வதேச நிறுவனங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் பொருளாதார முடிவெடுப்பதில் குரல் கொடுப்பது, நிறவுவது மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு ஆகியவற்றை அதிகரித்தது.

பெண்களின் பொருளாதார வாய்ப்பை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் பின்வருமாறு

பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதில் நாடுகள் ஈடுபாடு காட்டி வருகின்றன. செய்யப்பட்ட முதலீடுகளில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- **நிதி உள்ளடக்கம்:** வங்கித் தேவைகளில் பெண்கள் அணுகும் நிதிச் சேவைகளின் தரத்தை அதிகரிக்கும் முயற்சிகளை ஆதரிப்பது.
- **பெண்கள் மற்றும் விவசாயம்:** விவசாய மேம்பாடு, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர், எனவே பெண் விவசாயிகள் மற்றும் பெண்களுக்குச் சொந்தமான விவசாய வணிகங்களுக்கான கொள்கை மற்றும் திட்ட ஆதரவை ஊக்குவிப்பது.
- **நிறுவன வளர்ச்சி:** மூலதனம், நில உரிமை மற்றும் பரம்பரை உரிமைகளுக்கான அணுகலை நிறுத்தும் பாரபட்சமான சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை சீர்திருத்துவது உட்பட, பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பை செயல்படுத்தும் கொள்கை மற்றும் திட்டரீதியான தீர்வுகளுக்கு NGOக்கள், தொழில் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பது
- **தொழில்நுட்ப அணுகல்:** கலாச்சார, நிதி, கல்வி மற்றும் ஊக்கமளிக்கும் தடைகளைத் தீர்ப்பதன் மூலம் மொபைல் போன்கள், இணையம் மற்றும் பிற முக்கிய தொழில்நுட்பங்களுக்கான அணுகல் வழியாக பாலின இடைவெளியை குறைப்பது.
- **திறன் மேம்பாடு:** பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் திட்டங்களை வழங்குதல் மற்றும் சந்தை தகவல், தொழில் முனைவோர் வாய்ப்புகள் மற்றும் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கு தேவையான திறன்களை அவர்களுக்கு வழங்குவது
- **வணிகத் தலைமை:** கார்ப்பரேட் வாரியங்கள் உட்பட மூத்த நிர்வாகப் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பது.
- **தரவு சேகரிப்பு:** அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பு அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட, ஆதார அடிப்படையிலான கொள்கை மற்றும் திட்டங்களை உருவாக்க பொருளாதாரத் துறையில் பாலின–உணர்திறன் தரவுகளின் சேகரிப்பு மற்றும் சீரமைப்பை ஊக்குவிப்பது.

பொருளாதார வாய்ப்பு



தற்போதைய மதிப்பீடுகளின்படி, முறையான தொழிலாளர் படையில் இந்தியாவின் பெண் தொழிலாளர் பங்கேற்பின் விகிதம் 24 சதவீதம் மட்டுமே. பெரும்பாலான இந்தியப் பெண்கள் முறைசாராத் துறையில் குறைந்த சமூகப் பாதுகாப்பு மற்றும் குறைந்த ஊதியத்துடன் பணிபுரிகின்றனர். முறையான பொருளாதாரத்தில் ஆண்களுக்கு நிகரான விகிதத்தில் பெண்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டால், இந்தியப் பொருளாதாரம் 60 சதவீதம் கூடுதலான வளர்ச்சி அடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகங்களின் பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தாலும் பெரும்பாலும் அவர்களுடைய ஆற்றல் பயன்படுத்தப்படாத நிலையை கொண்டுள்ளனர்.

பெண்களுக்கான பொருளாதார வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான செயல் திட்டம்

- **தொழில்முனைவோரை உருவாக்குதல்:** பெண்களின் வணிக உரிமை, சிறு நிதி முயற்சிகள் மற்றும் நிதிச் சந்தைகளை மேம்படுத்துதல்.

- **சொத்துக்களை கட்டியெழுப்புதல்:** பெண்களின் நில உரிமைகள் மற்றும் சொத்துரிமை மூலம் நிதி அதிகாரமளித்தல்.
- **நிதி கல்வியறிவு:** பெண்களின் நிதி கல்வியறிவை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி வழங்குதல்.
- **சிறந்த வேலைகள்:** பெண் தொழிலாளர்களுக்கான ஊதியங்கள், வேலை நிலைமைகள், தொழிலாளர் தரநிலைகள், சலுகைகள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான உத்திகள்.
- கிராமப்புற பெண்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வலுப்படுத்துதல்
- இடப்பெயர்வு மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அபாயங்கள் மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- உள்ளூர் அதிகாரிகளிடையே பாலின சமத்துவத்தைப் பற்றிய கூடுதல் புரிதலை ஊக்குவித்தல்
- கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு உருவாக்கம், சுயதொழில் மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றில் முதலீடுகளை அதிகரிப்பது

சமமான பொருளாதார வாய்ப்பை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகள்



- அரசாங்கம் ஒரு விரிவான தொழிலாளர் பாதுகாப்பு திட்டத்தை இயற்றியுள்ளது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் இந்தச் சட்டத்தின் மூலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறது மற்றும் பணியிடங்களில் குழந்தை பராமரிப்புக்கான ஏற்பாடுகளும் இதில் அடங்கும். கூடுதலாக, மார்ச் 2017 இல், அனைத்து பணியமரத்துபவர்களும் 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்குவதை கட்டாயமாக்கும் சட்டத்தை இந்தியா இயற்றியது.
- சுய உதவிக் குழுக்கள் (SHGs) எனப்படும் சேமிப்பு திட்டத்தில் இந்தியா முன்னணியில் உள்ளது. SHGகள் நாடு முழுவதும் உள்ளது இதில் பெண்களின் குழு ஒருவருக்கு ஒருவர் கடன் கொடுக்கும் முறையை கொண்டுள்ளது. பெண்களை இலக்காகக் கொண்ட அரசு சேவைகள் சென்றடைவதற்கான தடமாக SHGகளை அரசாங்கம் இப்போது பயன்படுத்துகிறது.
- இந்தியா தனது ஆதார் திட்டத்தின் மூலம் பெண்களின் நிதி உட்சேர்ப்பை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது, இது உலகில் எங்கும் மேற்கொள்ளப்படாத மிகப்பெரிய டிஜிட்டல் தேசிய அடையாள முயற்சியாகும். தேசிய அடையாள தரவுத்தளத்தை உருவாக்க கைரேகைகள் மற்றும் கருவிழி ஸ்கேன் ஆகியவற்றை நம்பியிருக்கும் 99 சதவீதத்திற்கும் அதிகமான பெரியவர்கள் இப்போது ஆதார் மூலம் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இந்த முயற்சிகள் இருந்தபோதிலும், பெரும்பான்மையான இந்தியப் பெண்கள் முறையான பொருளாதாரத்திற்கு வெளியே வேலை செய்கிறார்கள், எனவே அரசாங்க பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டு இருக்கிறார்கள். முறைசாரா துறையில் பெண்கள் வேலைசெய்ய குவிந்திருப்பது சட்டத் தடைகளால் இயக்கப்படவில்லை, பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பைப் பாதுகாக்க ஒப்பீட்டளவில் சில சட்டங்கள் மட்டுமே இந்தியாவில் இருப்பதால், வேலைகளைப் பெறுவதற்கும், ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கும், வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் இந்தியப் பெண்களுக்கு சம உரிமைகள் இருப்பதாலே. அதற்குப் பதிலாக, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) கருத்துப்படி, பெண்களின் பொருளாதாரத் திறனைக் கட்டுப்படுத்துவதில் கலாச்சாரத் தடைகள் மற்றும் தொழில் சார்ந்த பிரிவினைகள் முக்கிய பங்கு வகிக்கின்றனவாம்.

7.5 பொருளாதார வளர்ச்சியில் பெண்களை சார்ந்து உள்ள தடைகள்

அறிமுகம்

மொத்த, கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்குள் ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் வேலையில் பங்கேற்க்கும் விகிதம் மிகக் குறைவு. இந்தியாவில் பாலின சமத்துவமின்மைக்கு பெண் குழந்தைகள் கல்வியில் பின்தங்கிய நிலையே காரணம். பல பெண்கள் நாளின் குறிப்பிட்ட நேரங்களிலும் குறிப்பிட்ட இடங்களிலும் பாதுகாப்பற்றவர்களாக அச்சத்துடன் வாழ்ந்துவருகின்றனர். இது பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் பங்கேற்பு, சமூக மற்றும் ஓய்வுநேர நடவடிக்கைகளில் ஈடுபடும் திறனில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

உலகெங்கிலும் பணிபுரியும் பெண்களுக்கு ஏற்படும் தடைகள் / சிக்கல்கள்

- வேலை–வாழ்க்கை சமநிலை
- சம ஊதியம்
- துன்புறுத்தல்
- தொழில் வாய்ப்புகள்
- குழந்தைகள் மற்றும் தொழில்

தடைகளைக் கடக்கும் வழிகள்

பெண்கள் மிக முக்கியமான மனித வளம், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், விரும்பிய திசையில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்க்கும் ஒரு காரணிகளாக செயல்படுகிறார்கள். நாம் உண்மையில் அவர்களின் பிரச்சினைகளை நீக்க விரும்பினால், ஆண்களும் பெண்களும் தங்கள் மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு சமூகத்தில் உரிய மரியாதையும் அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டும். ஜவஹர்லால் நேரு சுட்டிக் காட்டியபடி, "மக்களை விழிப்படையச் செய்ய, பெண்களை விழிப்படையச் செய்யவேண்டும். அவள் நகர்ந்தவுடன், குடும்பம் நகரும், கிராமம் நகரும் மற்றும் தேசம் நகரும்".

- கல்வி எல்லைகளை விரிவுபடுத்துகிறது கல்வி ஒருவரின் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதால் பெண்கள் கல்வி கற்க வேண்டும், அரசியலமைப்பு மற்றும் சட்ட உரிமைகள், இனப்பெருக்க உரிமைகள் மற்றும் மனித உரிமைகள், வேலையிலும் சமூகத் துறையிலும் உள்ள உரிமைகள் அவர்களுக்குத் தெரிய வரும்.
- முடிவெடுப்பதில் பெண்களின் திறன் மற்றும் திறமைகளை அதிகரித்து பெண்கள் சுயதொழில் செய்யும் போது தொழில்சார் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- சமூகத்தின் இந்த எளிதில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தீவிர ஆர்வமும் நேர்மையான கவனமும் மிகவும் அவசியம்.
- பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

தடைகளைத் தாண்ட நாம் செய்ய வேண்டியவை

- பெண் குழந்தைகளின் கல்விக்கான அணுகலை வழங்குதல்.
- பெண்கள் அதிகாரத்தில் இருப்பதற்கும் பொருளாதார வெற்றியை அடைவதற்கும் தளங்களை வழங்குதல்.
- இரு பாலினருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் கிடைக்கச்செய்தல் சமூகம் அனைத்து அம்சங்களிலும் சிறந்த வளர்ச்சியை அடையும்.
- முடிவெடுத்தல், சுகாதாரம், அரசியல், உள்கட்டமைப்பு, தொழில் போன்றவற்றில் சம உரிமை கிடைக்கச்செய்தல். இது நிச்சயமாக நமது சமூகத்தை ஒரு புதிய நிலைக்கு முன்னேற்றும்.
- மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்புகளை வழங்கி, பாலின பொதுமைபடுத்தப்பட்ட கருத்தை தடுக்கும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு உள்ளது.

- பாலினத்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் நெகிழ்வான வேலை நேரம் கிடைக்கச்செய்தல்
- பாலின சார்ந்த ஊதிய இடைவெளியை ஒழித்தல்
- அனைவருக்கும் நிறுவனத்தில் ஒரே மாதிரியான பயிற்சி மற்றும் கற்றல் வாய்ப்புகள் கிடைத்தல்
- பாலியல் துன்புறுத்தல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடைசெய்யும் கடுமையான நிறுவனக் கொள்கைகள் இருத்தல்.

முடிவுரை

எனவே இந்த பாடத்தில் பாலின இடைவெளி, குறியீடு, பாலின சமத்துவம் போன்ற பாலினத்தின் பல்வேறு சொற்களை நாம் இப்போது புரிந்து கொண்டுள்ளோம். பெண்கள் பொருளாதாரத்தில் தங்கள் வளர்ச்சியை அடைய பல பிரச்சனைகளை எதிர்கொள்வதால், பிரச்சனைகளை தவிர்க்க சில வழிமுறைகளை கற்றுக்கொண்டோம். ஒட்டுமொத்தமாக ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த பணியிடத்தில் உட்சேர்ப்பு, பன்முகத்தன்மை பற்றி கற்றுக்கொண்டோம்.

மதிப்பீடு

I. சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்

(1 மதிப்பெண்)

1. வெவ்வேறு பால், பாலினம், சாதி, வகுப்பு, வயது, உடல் தோற்றம், கல்வி, திறன்கள் மற்றும் பலவற்றைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வேலை செய்யும் ஒரு அமைப்பு பணியிடத்தில் _____ என குறிப்பிடப்படுகிறது.

   அ. பன்முகத்தன்மை

   ஆ. உட்சேர்ப்பு

   இ. பொருளாதாரம்

   ஈ. சமத்துவம்

2. பாலினத்தைப் பெ _____ வெகுமதிகள், வளங்கள் மற்றும் வாய்ப்புகளை மக்கள் அணுகவும், அனுபவிக்கவும் முடியும் போது பணியிட பன்முகத்தன்மை அடையப்படுகிறது.

   அ. சமமற்ற ஆ. சமமான

   இ. வேறுபட்ட ஈ. அதே

3. பல்வேறுபட்ட பணியிடங்கள் _____ ஐ அதிகரிக்கச் செய்வதன் மூலம் சரியான நபர் சரியான பணியைப் பெறுவதை உறுதிசெய்கிறது.

   அ. உற்பத்தித்திறன்

   ஆ. இலாபம்

   இ. இழப்பு

   ஈ. உற்பத்தி விகிதம்

4. பன்முகத்தன்மைக்கான தடைகள் மற்றவர்களைப் _____ மதிக்காததுமே ஆகும்.

   அ. கல்வி இல்லாமை

   ஆ. நலமின்மை

   இ. அமைதியின்மை

   ஈ. புரிந்துகொள்ளாதது

5. பன்முகதன்மையுடைய அமைப்பாக இருப்பதற்கு _____அமைப்பின்

பெரும்பாலான உறுப்பினர்களும் பலதரபட்டவர்களாக இருக்க வேண்டும்.

அ. கீழ்

ஆ. மேற்கட்ட

இ. குறைந்த

ஈ. சமமான

6. பன்முகத்தன்மையுடைய பணியிடங்கள் வெவ்வேறு கண்ணோட்டங்கள் கொண்டவர்களை ஒன்றிணைக்கிறது. இது _____ மற்றும் புதுமையை அதிகரிக்கிறது.

அ. படைப்பாற்றல் ஆ. உற்பத்தித்திறன்

இ. வளர்ச்சி ஈ. சமபங்கு

7. பணியிடத்தில் மதிப்புமிக்கதாகவும் முக்கியமானதாகவும் உணரும் ஊழியர்கள் _____ நிறுவனத்தில் நீண்ட காலம் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அ. வேறு ஆ. அதே

இ. கடந்து ஈ. வேலையைவிட்டு

8. சமூக, அரசியல், அறிவுசார், கலாச்சார, அல்லது பொருளாதார சாதனைகள் அல்லது அணுகுமுறைகளில் பிரதிபலிக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான வேறுபாடு _____ என்று அழைக்கப்படுகிறது.

அ. பாலின சமத்துவம்

ஆ. பாலின சமானம்

இ. பாலின இடைவெளி

ஈ. பாலின வேறுபாடு

9. உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான இடைவெளியை ஆராய்ந்து _____ குறியீட்டை வழங்குகிறது.

அ. GGGI ஆ. GGGR

இ. GGGT ஈ. GGGK

10. வளர்ந்து வரும் தொழிலாளர் படை பங்கேற்பு மற்றும் ஊதியம் போன்ற _____ விளைவுகளில் பாலின வேறுபாடுகளில் கவனத்தைப் பெற்றுள்ளன.

அ. சமூக

ஆ. கல்வி

இ. பொருளாதார

ஈ. தரம்

11. பாலினங்களுக்கிடையில் பொருளாதார பங்கேற்பு என்பது பாலினத்தின் பங்கேற்பை _____ல் குறிக்கிறது.

அ. தொழிலாளர் விகிதம்

ஆ. பங்கேற்பு விகிதம்

இ. வேலை செய்யும் விகிதம்

ஈ. விட்டு வெளியேறிய விகிதம்

12. எந்த துறையில் பெண்கள் வேலைசெய்ய குவிந்திருப்பது சட்டத் தடைகளால் இயக்கப்படவில்லை?

அ. பொருளாதார

ஆ. முறையான

இ. முறைசாரா

ஈ. கல்வி

13. இந்தியாவில் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பைப் பாதுகாக்கும் சட்டங்கள் ஒப்பீட்டளவில் _____ உள்ளன.

அ. அதிகமாக

ஆ. குறைந்த

இ. அங்கீகரிக்கப்பட்ட

ஈ. அங்கீகரிக்கப்படாத

14. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் மிக முக்கியமான மனித வளம் மற்றும் சொத்து _____ ஆகும்.

அ. ஆண்கள்

ஆ. மாற்றுபாலினத்தவர்கள்

இ. பெண்கள்

ஈ. ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும்

15. ஜவஹர்லால் நேரு சுட்டிக்காட்டியபடி "மக்களை எழுப்ப, _____யை விழிப்படையச் செய்யவேண்டும்".

அ. ஆண்கள்

ஆ. மாற்றுபாலினத்தவர்கள்

இ. பெண்கள்

ஈ. ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும்

16. பெண்களின் பார்வை மற்றும் எல்லைகளை விரிவுபடுத்தி, அவர்களின் அரசியலமைப்பு உரிமைகளை அவர்களுக்கு உணர்த்துவது _____ ஆகும்.

அ. சமூகம் ஆ. குடும்பம்

இ. வேலை ஈ. கல்வி

17. பாலினம் மற்றும் கல்வி பற்றிய ஆய்வு _____ விளைவுகளில் பாலின வேறுபாடுகளை உள்ளடக்கியது.

அ. பணிபுரிதல் ஆ. கல்வி

இ. அரசியல் ஈ. பொருளாதாரம்

18. GGGன் விரிவாக்கம்?

அ. Global Generation Gap

ஆ. Gender Generation Gap

இ. Gender Generation Gender

ஈ. Global Gender Gap

19. WEFஐ விரிவாக்கம்.

அ. World Economic Forum

ஆ. World Education Forum

இ. Wide Economic Forum

ஈ. World Equity Forum

20. பன்முகதன்மையுடைய பணியிடமானது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் _____க்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கிறது.

அ. வாடிக்கையாளர் மேம்பாடு

ஆ. நிறுவன வளர்ச்சி

இ. வாடிக்கையாளர் தயாரிப்பு

ஈ. வாடிக்கையாளர் திருப்தி

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

(2 மதிப்பெண்கள்)

1. பாலின இடைவெளியை வரையறுக்கவும்.
2. பணியிடத்தில் உட்சேர்ப்பு என்றால் என்ன?
3. உலகின் பாலின இடைவெளி அறிக்கையை வெளியிடுபவர் யார்?
4. பொருளாதார பங்கேற்பு என்றால் என்ன?
5. GGGI இன் தேவைகள் என்னென்ன?

III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

(3 மதிப்பெண்கள்)

1. GGGI குறியீட்டினை அளவிடும் போது எத்தனை பரிமாணங்கள் உள்ளன?
2. பன்முகத்தன்மைக்கு ஏதேனும் 3 தடைகளை பட்டியலிடவும்.
3. பாலினத்திற்க்கும், கல்விக்கும் உள்ள தொடர்பு என்ன?
4. பணியிடத்தில் பன்முகத்தன்மையின் தடைகளை சமாளிப்பது எப்படி?
5. ஆரோக்கியம் மற்றும் உயிர்வாழ்தலை தீர்மானிக்கும் செல்வாக்குமிக்க காரணிகளை பட்டியலிடவும்.

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. பணியிடத்தில் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை கூறவும்.
2. உலகம் முழுவதும் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் சில தடைகளை குறிப்பிடவும்.
3. பெண்களின் பொருளாதார வாய்ப்பை முன்னேற்ற முதலீட்டில் ஏதேனும் 5 வழிகளைப் பட்டியலிடவும்.
4. பணியிடத்தில் உட்சேர்ப்பை மேம்படுத்தும் வழிகளை அடையாளம் காணவும்.



8

நிதிசார் கல்வியறிவு

கற்றலின் நோக்கம்

- பணத்தின் கால மதிப்பை புரிந்து கொள்ளுதல்.
- நிதித் திட்டமிடலின் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்து கொள்ளுதல்.
- டிஜிட்டல் நிதியின் நன்மைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- உள்ளடக்க சந்தைப்படுத்தல் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- காப்பீட்டுத் துறை மற்றும் விவசாயத் துறையில் நிதி தொழில்நுட்பத்தின் (Fintech) பங்கினைப் புரிந்து கொள்ளுதல்.
- இந்தியாவில் உள்ள வங்கியியல் முறையைப் புரிந்து கொள்ளுதல்.
- பங்குச் சந்தையின் வகைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- பங்குச் சந்தையின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளுதல்.
- வரி வகைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

8.1 பணத்தின் கால மதிப்பு

அறிமுகம்

பணத்தின் நேர மதிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட தொகையானது அதன் எதிர்கால மதிப்பை விட தற்காலத்தில் அதிக மதிப்பைக் கொண்டிருக்கும் என்னும் கருத்தாகும். அத்தொகையின் வருவாய் ஈட்டும் திறனை கணக்கில் கொண்டு இக்கருத்து உருவாக்கப்பட்டது. இது நிதியின் அடிப்படைக் கொள்கை ஆகும். நம்மிடமுள்ள குறிப்பிட்ட தொகையின் எதிர்கால மதிப்பை விட இப்பொழுது அதன் மதிப்பு அதிகமாகவே இருக்கும். பணத்தின் நேர மதிப்பை தற்போதய வட்டி விகிதத்தின் மதிப்பு என்றும் கூறலாம்.

பணத்தின் கால மதிப்பைப் புரிந்துகொள்ளுதல்

முதலீட்டாளர்கள் தாங்கள் முதலீடு செய்த பணத்தின் மதிப்பை விட அதிகமாகவே திரும்ப பெற நினைக்கிறார்கள். ஏனெனில், எதிர்காலத்தில் அப்பணத்தின் மதிப்பானது சற்று உயர்ந்திருக்கக் கூடும் என்பதால்.

சேமிப்பு கணக்கில் நாம் இடும் பணத்திற்கு வட்டி கொடுக்கப்படுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். காலம் செல்லச் செல்ல ஈட்டிய வட்டியும் முதலுடன் சேர்ந்து கூடுதல் வட்டியை ஈட்டும். இதனை கூட்டு வட்டி என்றும் கூறலாம்.

ஆனால் முதலீடு செய்யப்படாமல் வைத்திருக்கப்படும் பணமானது எதிர்காலத்தில் அதன் மதிப்பை இழக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒருவர் ஆயிரம் ரூபாயை எவ்வித முதலீடும் செய்யாமல் தன்னுடனே வைத்துக் கொள்கிறார் எனில், அவர் அதன் மதிப்பை மட்டும் இழக்காமல் அந்த ஆயிரம் ரூபாய் ஈட்டி இருக்கக்கூடும் கூடுதல் மதிப்பையும் சேர்ந்தே இழக்கிறார். மேலும் அந்த ஆயிரம் ரூபாய்க்காண வாங்கும் திறனும் காலப்போக்கில் குறைந்திருக்கும்.



சூத்திரம்

PV = FV/(1+r)

PV = தற்போதைய கால மதிப்பு

FV = எதிர்கால மதிப்பு

r = வட்டி விகிதம்

உதாரணம்

5% வட்டி விகிதத்தில் (தள்ளுபடி விகிதம்) 1 வருடத்திற்கு ரூ.100 (தற்போதைய மதிப்பு) முதலீடு செய்தால், ஆண்டின் இறுதியில், உங்களிடம் ரூ.105 (எதிர்கால மதிப்பு) இருக்கும். எனவே, இந்த உதாரணத்தின்படி, இன்று ரூ.100 என்பது இன்றிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு ரூ.105 ஆக மாறுகிறது.

செயல்பாடு 1

பண மதிப்பில் உள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடிப்போம்:

பொருட்கள்	2000	2020
1 லிட்டர் பால்		
1 கிராம் தங்கம்		
1 கப் தேநீர்		
1 கிகி அரிசி		

பணத்தின் மதிப்புக்கு இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறிதல் பணத்தின் கால மதிப்பைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

8.2 டிஜிட்டல் நிதியியல்

அறிமுகம்

டிஜிட்டல் நிதியியல் என்பது கணினிகள், டேப்லெட்டுகள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் போன்ற சாதனங்கள் மூலம் பாரம்பரிய நிதிச் சேவைகளை டிஜிட்டல் முறையில் வழங்குவதாகும். டிஜிட்டல் நிதியியல் மூலம் நிதி உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாத பகுதிகளில் உள்ள மக்களும் நிதிச் சேவைகளை அணுக முடிகிறது.



டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு:

டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு என்பது நிதி பரிவர்த்தனை செய்வதற்கு டிஜிட்டல் சாதனங்கள்மற்றும்டிஜிட்டல்தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான அறிவு அல்லது திறன் ஆகும். நிதி பரிவர்த்தனைகளுக்கு டிஜிட்டல் ஆதாரங்களை அணுகுவது தனிநபரின் திறன் ஆகும். டிஜிட்டல் நிதிக் கருவிகளை

பயன்படுத்துவதில் பாதுகாப்பு அம்சம்சங்கள் ஒரு முக்கியகாரணியாகும்.பாதுகாப்பானமுறையில் நிதி பரிமாற்றம் மேற்கொள்ள அல்லது தனிப்பட்ட தரவுகளை பாதுகாக்க, டிஜிட்டல் நிதியியலின் அடிப்படை விதிகளை அறிந்திருக்க வேண்டும். நிதி பரிவர்த்தனைகளின் டிஜிட்டல் மயமாக்கல் பற்றிய இந்த விழிப்புணர்வு டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு எனப்படும். டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு பணமில்லா பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.

டிஜிட்டல் நிதியியல் சேர்க்கை

டிஜிட்டல் நிதியியல் சேர்க்கை என்பது நிதி மற்றும் வங்கி சேவைகளை சமூகத்தில் உள்ள அனைவரும் அணுக வலியுறுத்துவதாகும். நிதிச் சேவைகளின் டிஜிட்டல் மாற்றம் உலகின் தொலைதூர மூலைகளிலும் டிஜிட்டல் நிதிச் சேர்க்கையை செயல்படுத்துகிறது. டிஜிட்டல் நிதியியல் சேர்க்கையானது அரசாங்க மானியங்கள் அல்லது வெளிநாட்டுக் கணக்குகளிலிருந்து நிதிப் பரிமாற்றங்கள் போன்றவைகளுக்கு ஏதுவாகவும், பல்வேறு பலன்களின் தடையற்ற ஒருங்கிணைப்புக்கும் வழி வகுக்கிறது.



டிஜிட்டல் நிதியியல் சேர்க்கையின் கூறுகள்

டிஜிட்டல் நிதியியல் சேர்க்கையின் மூன்று முக்கிய கூறுகள் பின்வருமாறு.

1. டிஜிட்டல் பரிவர்த்தனை தளம்:

டிஜிட்டல் பரிவர்த்தனை தளங்கள் பயனர்களின் தரவுகளை மிகவும் பாதுகாப்புடனும் தனியுரிமையுடனும் மின்னணு முறையில் சேமித்து செயலாக்குகின்றன.

2. சில்லறை விற்பனை முகவர்:

சில்லறை விற்பனை முகவர்கள் நிதியை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான ஆதாரமாக உள்ளனர். இதன் மூலம் மின்னணு முறையில் சேமிக்கப்பட்ட பண மதிப்பை நீர்மை பணமாக மாற்ற முடிகிறது.

3. இயங்குதளத்தை அணுகும் மின்னணு சாதனங்கள்:

மொபைல் போன்கள், டேப்லெட்டுகள், கணினி அல்லது மடிக்கணினிகள் போன்ற மின்னணு சாதனங்கள் மூலம் கம்பியில்லா முறையில் (wireless) எளிமையாக தரவுகளை அணுகமுடிகிறது. டிஜிட்டல் நிதி சேர்க்கையானது கிராமப்புற மக்களும் நிதி பரிவர்த்தனைகளை எளிதாக பயன்படுத்த பெரிதும் உதவுகிறது.

டிஜிட்டல் நிதியியல் சேவைகள்

டிஜிட்டல் நிதியியல் சேவைகள் என்பது விற்பனை புள்ளி (PoS), ஏடிஎம்(ATM), பண வைப்பு இயந்திரம் போன்ற டிஜிட்டல் முறையில் இணைய வசதியுடன் வழங்கப்படும் நிதிச் சேவைகள் ஆகும். இந்த சேவைகள் இணையம் வழியாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.தனிப்பட்ட மொபைல் வங்கிச் சேவைகளான M–Pay மற்றும் M–Money போன்ற பரிவர்த்தனை மற்றும் பரிவர்த்தனை அல்லாத சேவைகளும் இதில் அடங்கும். டிஜிட்டல் நிதியியல் சேவைகள் பெரும்பாலும் நிதி தொழில்நுட்பம்(FinTech) என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. இந்த டிஜிட்டல் காலகட்டமானது நிதி தொழில்நுட்ப(FinTech) நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுவதன் மூலன் அன்றாட வாழ்க்கையை எளிதாக்குகிறது. பயன்பாட்டு கட்டணங்கள், வாகனத்தின் பயண வாடகைகள் போன்ற அனைத்து கட்டணங்களையும் இப்போது இணையத்தின் வழியே செலுத்த முடிகிறது. டிஜிட்டல் நிதியியல் சேவைகள் அல்லது நிதி தொழில்நுட்பமானது(FinTech) நமது வாழ்க்கை முறை மற்றும் பொருளாதாரத்தை அதிக திறனுள்ளதாக மாற்றியமைக்கிறது.



டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் நன்மைகள்

- அனைத்து இடங்களிலும் அணுக இயலும்.
- மிகவும் எளிதானது மற்றும் திறன்வாய்ந்தது.
- நேரத்தையும், வளங்களையும் சேமிக்க இயலும். வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை.
- ஒவ்வொரு பரிவர்த்தனையும் நிகழ்நேரத்தில் புதுப்பிக்கப்படும்
- எளிமையாக முடிவெடுத்தல்.
- நம்பகத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை.
- அனைத்து டிஜிட்டல் தளங்களின் தடையற்ற ஒருங்கிணைப்பு வசதி.
- சூழலுக்கு இணக்கமானது.
- தொழில்நுட்ப உதவியுடன் வாடிக்கையாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுதல்.
- அனைத்து வழி டிஜிட்டல் சந்தைபடுத்துதல்களையும் அடைய முடிகிறது.

இவையாவும் வணிகம் மற்றும் நுகர்வோர் ஆகிய இருவருக்கும் பயனளிக்கும் டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் நன்மைகள் ஆகும். கணினிசார் தொழில்நுட்பத்தின் பரிணாமவளர்ச்சி வழக்கமான வங்கி மற்றும் நிதி அமைப்புகளின் இயக்கவியலை பெருமளவு மாற்றியுள்ளது.

டிஜிட்டல் நிதியியல் மாற்றத்தின் முக்கியத்துவம்

இந்த தொழில்நுட்ப சகாப்தத்தில் டிஜிட்டல் என்ற வார்த்தை மிகவும் பிரசித்தியானது. வங்கித் துறையில் டிஜிட்டல் மாற்றத்தின் முக்கியத்துவமானது நேரத்தைச் செலவழிக்கும் சிக்கலான நிதிச் செயல்முறையைகளை எளிய டிஜிட்டல் தீர்வுகளுடன் முறியடிப்பதாகும்.

நிதித் தொழில்நுட்பத்தில் டிஜிட்டல் புரட்சியானது மக்கள் தங்கள் கணக்குகளைக் கட்டுப்படுத்த மிகுந்த சுதந்திரத்தை அளிக்கிறது. ஒவ்வொரு தனிநபரும் தங்களது கிளை அல்லது வங்கி ஊழியர்களின் உதவியை நாடாமல் எந்தவொரு பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ளலாம்.

டிஜிட்டல் நிதியியல் மிகவும் வலுவானது மற்றும் பயனர்களுக்கு ஏற்றது, இது வாடிக்கையாளர்களின் திருப்தியில் மிகுந்த கவனம் செலுத்துகிறது.

டிஜிட்டல் மாற்றம் தற்போதுள்ள அமைப்பையும் புதிய நிதி தயாரிப்புகள் மற்றும் கருவிகளின் பரிணாமத்தையும் எளிதாக்கி எந்தவொரு பணியின் உற்பத்தித்திறனையும் செயல்திறனையும் அதிகரிக்கிறது.

டிஜிட்டல் மயமாக்கல் என்பது பரிவர்த்தனையை பதிவு செய்வது மட்டும் அல்லாமல் வாடிக்கையாளர் நடத்தை மற்றும் சந்தை அணுகுமுறை பற்றிய முழுமையான புரிதலைப் பெறுவதற்கு வங்கித் துறைக்கு பயன்படுகிறது. வங்கி நடைமுறையானது நுண்ணறிவு சார்ந்த செயல்பாட்டு அமைப்பாக உருவாகியுள்ளது. இது உயர் தரநிலைகள், வேகமான செயலாக்கம் மற்றும் முழுமையான தானியங்கி செயலாக்கம் ஆகியவற்றின் மூலம் வாடிக்கையாளர் மற்றும் பணியாளர் திருப்தியை உறுதிசெய்கிறது.

டிஜிட்டல் நிதியியலின் எதிர்காலம்:

டிஜிட்டல் நிதியியலானது செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் பெரிய தரவு பகுப்பாய்வு ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியுடன் சமூகத்திற்கு வழங்குவதற்கு மிகவும் மேம்பட்ட அம்சங்களைப் பெற்றுள்ளது. நிதித் துறையில் பல்வேறு மாற்றங்களைச்

செய்ய நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் படிப்படியாக செயல்பட்டு வருகின்றன. ரோபோடிக் செயல்முறை தானியங்கு மற்றும் இயந்திர கற்றல் ஆகியவை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் வருடாந்திர நிதிநிலை அறிக்கைகள் மற்றும் சமரச அறிக்கைகள் தயாரிப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

செயல்பாடு 1

மொபைல் செலுத்துதல் செயலிகள் டிஜிட்டல் நிதியியலை மேலும் சேர்க்கையானதாகவும் வேகமானதாகவும் மாற்றியுள்ளது. உங்களுக்குத் தெரிந்த 5 மொபைல் செலுத்துதல் செயலிகளின் பெயர்களை எழுதுங்கள்

1. ……
2. ……
3. ……
4. ……
5. ……

8.3 நிதி தொழில்நுட்பம் (FINTECH)

அறிமுகம்

நிதி தொழில்நுட்பம்(FINTECH) என்பது வணிகங்கள் அல்லது நுகர்வோருக்கான நிதிச் சேவைகளை மாற்றியமைக்க, மேம்படுத்த அல்லது தானியங்குபடுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வணிகத்தை குறிக்கிறது. இது இணைய வங்கி, மொபைல் செலுத்துதல் செயலிகள் அல்லது கிரிப்டோகரன்சி போன்ற நிதிச் சேவைகளை மென்பொருளின் மூலம் வழங்கும் தொழில்நுட்பமும் ஆகும்.

காப்பீட்டில் நிதி தொழில்நுட்பம்

நிதி தொழில்நுட்ப சேவைகள் மூலம் காப்பீட்டு கோரிக்கையை நிரப்ப முடியும். தற்போது பல பெரிய காப்பீட்டாளர்கள் வாடிக்கையாளர்களை செயலிகளின் மூலம் உரிமைகோரல்களை தாக்கல் செய்ய அனுமதிக்கின்றனர், இதற்க்கு வழக்கமாக சில நிமிடங்கள் மட்டுமே ஆகிறது. இந்த சேவைகள் பயனர்களுக்கான நடைமுறையை எளிதாக்குகிறது மற்றும் முக்கியமான தகவல்களை ஒழுங்கமைப்பதில் காப்பீட்டாளருக்கு உதவுகின்றன.



சிறப்பியல்புகள்

- மாறும் தன்மை கொண்டது.
- புதுமையானது மற்றும் ஆக்கப்பூர்வமானது.
- பொருந்தக்கூடியது.
- வெளிப்படையானது மற்றும் பயன்படுத்த எளிதானது.

நன்மைகள்

- கூடுதல் வளங்களை அணுகுதல்.
- வணிக செயல்முறைகளை மேம்படுத்தல்.
- வணிகங்களுக்கான சிறந்த தக்கவைப்பு விகிதம்.
- கடன் குழுசேர்க்கைக்கான மிகவும் வசதியான அணுகல்.
- நிதி தொழில்நுட்பம் என்பது புதுமை கண்டுபிடிப்புகளுக்கான களமாகும்.

குறைபாடுகள்

- தனியுரிமை சவால்கள்.
- வெவ்வேறு விதிமுறைகள்.
- நிதியியலின் நிச்சயமற்ற தன்மை.

வேளாண் நிதி தொழில்நுட்பம்

வேளாண் நிதி தொழில்நுட்பம் (Agri–fintech) என்பது வேளாண்சார் தொழில்நுட்ப நிதியுதவியின் தொடர்புடைய ஒரு புதிய சொல் ஆகும். விவசாயி மற்றும் பண்ணை மதிப்பு சங்கிலி நிதியுதவியை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த பயன்படும் தொழில்நுட்பம் என வரையறுக்கப்படுகிறது.

அம்சங்கள்

- மாறும் தன்மை கொண்டது.
- புதுமையானதுமற்றும்ஆக்கப்பூர்வமானது.
- பொருந்தக்கூடியது .
- வெளிப்படையானது மற்றும் பயன்படுத்த எளிதானது.

முக்கியத்துவம்

வேளாண் நிதியானது நாட்டின் விவசாய–சமூக–பொருளாதார வளர்ச்சியில் குறு மற்றும் பெரு மட்டங்களில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை பெறுகிறது.

பண்ணை வணிகத்தை வலுப்படுத்துவதிலும், பற்றாக்குறை வளங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலும் இது ஒரு ஊக்கியாக செயல்படுகிறது.

நன்மைகள்

வேளாண் நிதியானது கடனைக் கையாள்வது முதல் பணப்புழக்கங்களை நிர்வகித்தல் வரை நமது செயல்பாடுகளில் உலகளாவிய மற்றும் உள்ளூர் காரணிகளின் தாக்கங்களை எடைபோடுவதற்கு உதவுகிறது. விவசாய வணிகத்திற்குப் பின்னால் உள்ள எண்மதிப்புகளை கையாள்வதன் மூலம் சிக்கலான நிதி நிலைகளை சமாளிக்கக்கூடியதாக மாற்ற முடிகிறது.

சில்லறை வர்த்தகத்தில் நிதி தொழில்நுட்பம்

சில்லறை வர்த்தகத்தில் நிதி தொழில்நுட்பம் என்பது நிதித்துறையில் வளர்ந்து வரும் அணுகுமுறையாகும். தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் புதுமையான டிஜிட்டல் அடிப்படையிலான உத்திகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்குதனிப்பயனாக்கப்பட்ட, வசதியான மற்றும் மலிவான சேவைகளை வழங்குகிறது. நிதி தொழில்நுட்பம் காரணமாக சில்லறை வர்த்தகத்தில் சில மாற்றங்களைக் கண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 40%க்கும் அதிகமான சில்லறை விற்பனையாளர்கள் Apple Pay, Google Wallet, Amazon Pay மற்றும் PayPal போன்ற மின்னணு கட்டண முறைகளை பயன்படுத்துகின்றனர்.



முக்கியத்துவம்

- உலக சில்லறை வங்கி அறிக்கை 2022 இன் படி வாடிக்கையாளர்கள் நிதி தொழில்நுட்பம் மீது ஈர்க்கப்படுவதாகக் கருத்து தெரிவித்துள்ளனர்.
- இது நிதியியல் தாணியங்கு சேவையில் கவனம் செலுத்தக்கூடிய மலிவான மற்றும் தடையற்ற சேவையாகும். இது அவர்களின் டிஜிட்டல் வங்கி எதிர்பார்ப்புகளை கணிசமாக உயர்த்துகிறது.

அம்சங்கள்

- மாறும் தன்மை கொண்டது.
- புதுமையானதுமற்றும்ஆக்கப்பூர்வமானது.
- பொருந்தக்கூடியது.
- வெளிப்படையானது மற்றும் பயன்படுத்த எளிதானது.

நன்மைகள்

- பாரம்பரிய வழங்குநர்களுடன் ஒப்பிடும்போது மலிவானது, வேகமானது மற்றும் வசதியானது.

- இது குறைந்த இயக்கச் செலவுகளை மட்டுமே ஏற்படுத்துகிறது மற்றும் குறைந்த கட்டணத்தை வசூலிக்கிறது.

செயல்பாடு 1

இங்கே சில துவக்கத்தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இணையத்தைப் பயன்படுத்தி அவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டறியவும்.

Stellapps, Numer8, Aquaconnect, Livestoc மற்றும் DGV

8.4 இந்தியாவில் வங்கியியல் அமைப்பு

வங்கி என்பது தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் வணிகங்களுக்கான பணம், கடன் மற்ற பிற நிதி பரிவர்த்தனைகளைக் கையாளும் ஒரு நிறுவனம் ஆகும். பயனாளர்களுக்கு எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு தேவையான பணப்புழக்கத்தை வங்கிகள் வழங்குகின்றன.

வங்கி அமைப்பு என்பது நமக்கு நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் குழு அல்லது நெட்வொர்க் ஆகும். இந்த நிறுவனங்கள் பணம் செலுத்தும் முறையை இயக்குவதற்கும்,கடன்களை வழங்குவதற்கும், வைப்புகளை பெருவதற்க்கும், முதலீடுகளுக்கு உதவுவதற்கும் பொறுப்பாகும்.

அம்சங்கள்

- பண பரிவர்த்தனை
- தனிநபர்/தொழில்/நிறுவனம் போன்றவைகளுக்கான சேவை
- வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வது
- முன்பணம் கொடுத்தல்
- பணம் செலுத்துதல் மற்றும் திரும்பப் பெறுதல்
- முகவாண்மை மற்றும் பயன்பாட்டு சேவைகள்
- லாபம் மற்றும் சேவை நோக்குநிலை
- எப்போதும் வளர்ந்துவருகிறது
- தொடர்புகளை ஒன்றிணைக்கிறது
- வங்கி வணிகம்
- பெயர் அடையாளம்



நன்மைகள்

- பொதுச் சொத்துக்களின் பாதுகாப்பு
- மலிவான கடன்கள் வசதி
- பொருளாதாரத்தின் உந்துசக்தியாக செயல்படுதல்
- பெரிய அளவிலான பொருளாதார ஆதாரங்கள்
- கிராமப்புறங்களின் வளர்ச்சியில் பங்கு வகித்தல்
- உலகளாவிய தொடர்புகள்

தீமைகள்

- வங்கிகள் திவாலாகும் வாய்ப்புகள்
- மோசடி மற்றும் கொள்ளைகளின் ஆபத்து
- பொதுக் கடனின் ஆபத்து

வங்கி அமைப்புகளின் வகைகள்

வங்கி முறையின் அமைப்பு நாட்டிற்கு நாடு அவர்களின் பொருளாதார நிலைமைகள், அரசியல் அமைப்பு மற்றும் நிதி அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகிறது. வங்கிகளை செயல்பாடுகளின் அளவு, வணிக முறைகள் மற்றும் செயல்பாட்டுப் பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். அவை வங்கி அமைப்பு என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக அடையாளம் காணப்பட்ட அமைப்புகள்:

1. **அலகு வங்கியியல்:** இவ்வகை அமைப்பு அமெரிக்காவில் உருவானதாகும். இந்த அமைப்பில், சிறிய தன்னிச்சை வங்கிகள் வரையறுக்கப்பட்ட பகுதியில் அல்லது

ஒரே நகரத்தில் செயல்படுகின்றன. இந்த அமைப்பு அதற்க்கென சொந்த இயக்குநர்கள் மற்றும் பங்குதாரர்களைக் கொண்டுள்ளது. இது "உள்ளூர்மயமாக்கப்பட்ட வங்கியியல்" என்றும் அழைக்கப்படுகிறது

2. **கிளை வங்கியியல்:** இங்கிலாந்தின் வங்கியியல் அமைப்பு முதன் முதலில் கிளை வங்கியியல் முறையின் உதாரணத்தை வழங்கியது, அங்கு ஒவ்வொரு வணிக வங்கியும் நாடு முழுவதும் கிளைகளின் வலையமைப்பைக் கொண்டுள்ளது.

3. **தொடர்பு வங்கியியல்:** அலகு வங்கியியல் அமைப்பில் உள்ள சிரமங்களை நீக்குவதற்காக, தொடர்பு வங்கியியல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சிறிய வங்கிகள் தங்கள் கையிருப்பு பணத்தை பெரிய வங்கிகளில் வைப்பு செய்கின்றன. தொடர்பு வங்கிகள் இடைத்தரகர்கள் ஆக செயல்பட்டு, அனைத்து அலகு வங்கிகளையும் நிதி மையங்களில் உள்ள பெரிய வங்கிகளுடன் இணைக்கப்படுகின்றன. தொடர்பு வங்கியியல் மூலம், ஒரு வங்கியானது தனது கிளை இல்லாத மற்றொரு இடத்திலும் வணிக பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும்.



4. **குழு வங்கி:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தன்னிச்சையாக இணைக்கப்பட்ட வங்கிகள் ஒரே பங்கு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் அமைப்பாகும். பங்கு நிறுவனமானது வங்கியியல் நிறுவனமாகவோ அல்லது வங்கியியல் அல்லாத நிறுவனமாகவோ இருக்கலாம். குழு வங்கியியலின் கீழ், தனிப்பட்ட வங்கிகளானது அலகு வங்கிகளாகவோ, கிளைகளை இயக்கும் வங்கிகளாகவோ அல்லது இரண்டின் கலவையாகவோ இருக்கலாம்.

5. **தூய வங்கியியல் மற்றும் கலப்பு வங்கியியல்:** வங்கியின் கடன் வழங்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில், வங்கி பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

   (அ) தூய வங்கியியல்: தூய வங்கியியலின் கீழ், வணிக வங்கியானது தொழில், வர்த்தகம் மற்றும் வணிகத்திற்கு குறுகிய கால கடன்களை மட்டுமே வழங்குகின்றன. இவை குறுகிய கால நிதிகளில் மட்டுமே நிபுணத்துவம் பெற்றது.

   (ஆ) கலப்பு வங்கியியல்: கலப்பு வங்கியியல் என்பது வணிக வங்கியானது வணிக வங்கியியல் மற்றும் முதலீட்டு வங்கியியல் என்ற இரண்டு செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.இதில் வணிக வங்கிகள் பொதுவாக குறுகிய கால மற்றும் நடுத்தர கால கடன்களை வழங்குகின்றன.

6. **உறவு வங்கியியல்:** இது தனிப்பட்ட தொடர்புகளை மேம்படுத்துவதற்கும், வங்கிக்கு மிகவும் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதற்கும் வங்கி மேற்கொள்ளும் முயற்சிகளைக் குறிக்கிறது. அத்தகைய இலாபகரமான கணக்குகளை வங்கியில் தக்கவைத்துக்கொள்ள அல்லது புதிய கணக்குகளை ஈர்ப்பதற்காக, வங்கிககள் அத்தகைய வாடிக்கையாளர்களுடன் நல்உறவைப் பேணுவது அவசியமாகிறது.

7. **குறுகிய வங்கியியல்:** ஒரு வங்கியானது வைப்புகளைச் சேகரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தி, குறிப்பிட்ட பிராந்தியத்தில் பணத்தைக் கடனாக வழங்குவது அல்லது முதலீடு செய்வது அல்லது அரசாங்கப் பத்திரங்களில் மட்டுமே நிதியை முதலீடு செய்வது போன்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகளில் கவனம் செலுத்துகிறது. இவ்வகை கட்டுப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச

வங்கியியல் செயல்பாடுகள் 'குறுகிய வங்கியியல்' என்று குறிப்பிடப்படுகிறது.

8. **முழுமை வங்கியியல்:** முழுமை வங்கியியல் என்பது பரந்த மற்றும் விரிவான வங்கியியல் செயல்பாடுகளைக் குறிக்கிறது.



9. **பிராந்திய வங்கியியல்:** கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் சிறு கடன் பெறுபவர்களுக்கு போதுமான மற்றும் சரியான நேரத்தில் கடன்களை வழங்குவதற்காக, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் சில வணிக வங்கிகளுடன் இணைந்து இந்தியா முழுவதும் பிராந்திய கிராம வங்கிகள் எனப்படும் பிராந்திய வங்கிகளை ஏற்படுத்தியது.

10. **உள்ளூர் வங்கிகள்:** போட்டிச் சூழலைக் கொண்டு வருவதற்கும், பிராந்திய வங்கிகளின் பற்றாக்குறைகளைப் போக்குவதற்கும், கிராமப்புற மற்றும் புறநகர் மையங்களில் தனியார் துறையின் கீழ் செயல்படும் இவ்வங்கிகளை நிறுவ அரசு அனுமதித்துள்ளது. இவை உள்ளூர் பகுதி வங்கிகள் எனப்படும்.

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (1 மதிப்பெண்)

1. பன்னாட்டு நிறுவனங்களின் உருவாக்கம் _____மூலம் சாத்தியமாகிறது.

   அ. மையப்படுத்துதல்

   ஆ. பன்முகப்படுத்துதல்

   இ. உலகமயமாக்கல்

   ஈ. உள்நாட்டு வர்த்தகம்

2. நம்மிடம் எத்தனை வகையான உலகமயமாக்கல் உள்ளது?

   அ.2 ஆ.3 இ.4 ஈ.5

3. உலகெங்கிலும் உள்ள அரசியல் அமைப்புகளை உருவாக்குவது _____க்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

   அ. அரசியல் உலகமயமாக்கல்

   ஆ. சமூக உலகமயமாக்கல்

   இ. கலாச்சார உலகமயமாக்கல்

   ஈ. கல்வி உலகமயமாக்கல்

4. தடையற்ற தகவல் தொடர்புகளை ஊக்குவிப்பதன் மூலம்_____யை சமாளிக்க உதவுகிறது.

   அ. வேலை வாழ்க்கை

   ஆ. வேலை கலாச்சாரம்

XII_TM_EMPS_CH09-2023.indd 180 13/03/2023 17:15:04

இ. வேலை கலாச்சார தடை

ஈ. உலகமயமாக்கல்

5. தரம் மற்றும் அளவு முறையில் பணியை பகுப்பாய்வு செய்வது_____ என அழைக்கப்படுகிறது.

அ. வேலை

ஆ. பணி ஆய்வு

இ. வேலைச் சந்தையின் ஆய்வு

ஈ. ஆட்சேர்ப்பு ஆய்வு

6. வேலை திறன்கள் என்பது தேவையான _____இன் விளக்கமாகும்.

அ. திறன், பண்பு அல்லது நடத்தை

ஆ. திறன்,நடத்தை அல்லது அணுகுமுறை

இ. அறிவு ,நடத்தை அல்லது அணுகுமுறை

ஈ. வேலை ,நடத்தை அல்லது பண்புகள்

7. கீழ்க்கண்டவற்றுள் வேலை திறனை தேர்ந்தெடுத்து எழுதவும்.

அ. சிக்கலைத் தீர்க்கும் திறன்

ஆ. பிரச்சனை செய்யும் திறன்

இ. நிராகரிப்பை கையாளும் திறன்

ஈ. ஆங்கில மொழித்திறன்

8. காலக்கெடுக்களை சந்திக்கும் வகையில் ஒவ்வொரு நகர்வையும் திட்டமிடுவதை வலியுறுத்தும் ஒரு முறையான அணுகுமுறை _____ ஆகும்.

அ. கற்றல் திறன்

ஆ. பிரச்சனை தீர்க்கும் திறன்

இ. நிறுவன திறன்

ஈ. பேச்சுவார்த்தை திறன்

9. ஒரு நிலையான தொழில் என்பது முழு பணி வாழ்க்கைச் சுழற்சியில் _____ முழுவதும் நிலைத்திருக்கும் ஒன்றாகும்

அ. காலம் ஆ. தேதி

இ. நாள் ஈ. ஆர்வம்

10. ஒரு புதிய வாடிக்கையாளரைப் பெறுவதற்கு ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளரைத் தக்கவைத்துக்கொள்வதை விட_____ மடங்கு அதிகமாக செலவாகும்.

அ. பத்து ஆ. நான்கு

இ. இரண்டு ஈ. ஐந்து

11. வாடிக்கையாளர் _____அடிப்படையில் செயல்படுவது ஒருவரின் நம்பிக்கையைப் பெறவும் அவர்களின் விசுவாசத்தைப் பேணவும் உதவுகிறது.

அ. தோற்றம் ஆ. பணம்

இ. பின்னூட்டம் ஈ. நேரம்

12. CLV –ன் விரிவாக்கம் ……

அ. Customer lifetime value

ஆ. Customer long life value

இ. Client lifetime value

ஈ. Consumer lifetime value

13. பணிபுரியும் உறவை _____ உடன் உருவாக்குவது வணிகத்தின் நீண்டகால வெற்றிக்கு முக்கியமாகும்.

அ. நிறுவனம்

ஆ. உரிமையாளர்

இ. வாடிக்கையாளர்

ஈ. சகப்பணியாளர்

14. கீழ்க்கண்டவற்றுள் எது இந்தியாவில் வேலைவாய்ப்பு இணைய தளம் அல்ல?

அ. Naukri.com ஆ. LinkedIn

இ. Indeed.com ஈ. Gmail

15. வேலைவாய்ப்பு இணையதளங்கள் ஆட்சேர்ப்பு செய்பவர்களையும் _____ யும் இணைக்கிறது.

அ. உரிமையாளர்கள்

ஆ. மேலாளர்கள்

இ. வேலை தேடுபவர்கள்

ஈ. செயலாளர்கள்

XII_TM_EMPS_CH09-2023.indd 181 13/03/2023 17:15:04

16. கீழ்ண்டவற்றில் எது உலகிலேயே மிகப்பெரிய தொழில்சார் வலை அமைப்பு ஆகும்?

அ. Naukri.com ஆ. LinkedIn

இ. Indeed.com ஈ. Gmail

17. ஒருவர் _____ கண்டுபிடிக்க LinkedIn யை பயன்படுத்தலாம்.

அ. வேலைகளை ஆ. இடங்களை

இ. ஆவணங்களை ஈ. நிதிகளை

18. மற்றவர்களுடன் நன்றாக பணி புரியும் திறன் _____என அழைக்கப்படுகிறது.

அ. உள்முக சிந்தனை

ஆ. சகஜமாக பழகுதல்

இ. குழு மனப்பான்மை

ஈ. குழு அறிவு

19. தர்க்கரீதியாக சிந்திக்கும் திறன் மற்றும் பிரச்சனைக்கு தீர்வு கூறும் திறன் _____என அழைக்கப்படுகிறது.

அ. சிக்கலைத் தீர்க்கும் திறன்

ஆ. சுய உந்துதல்

இ. பேச்சுவார்த்தை திறன்

ஈ. மொழி திறன்

20. டிரான்ஸ் பசிபிக் கூட்டாண்மை _____ன் எடுத்துக்காட்டாகும்.

அ. அரசியல் உலகமயமாக்கல்

ஆ. பொருளாதார உலகமயமாக்கல்

இ. கலாச்சார உலகமயமாக்கல்

ஈ. சமூக உலகமயமாக்கல்

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி

(2 மதிப்பெண்கள்)

1. உலகமயமாக்கல் என்றால் என்ன?
2. உலகளாவிய வேலை கலாச்சாரம் பற்றி சிறுகுறிப்பு தரவும்.
3. சொல்லாடல் திறன் என்றால் என்ன? அதனை எவ்வாறு மேம்படுத்துவீர்கள்?
4. வாடிக்கையாளர் தொடர்புகளின் முக்கியத்துவத்திற்க்கான காரணம் என்ன?
5. வாடிக்கையாளர் விசுவாசத்தை மேம்படுத்துதல் பற்றி சிறு குறிப்பு தரவும்.

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி

(3 மதிப்பெண்கள்)

1. உலகமயமாக்கலின் வகைகளை விளக்கவும்.
2. வேலை சந்தை ஆய்வின் போது கருத்தில் கொள்ள வேண்டியவற்றை பட்டியலிடவும்.
3. வேலை திறன்களின் முக்கியத்துவத்தை பற்றி விளக்கம் தரவும்.
4. வேலை வாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
5. குறுக்கு கலாச்சார தடைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை விளக்கவும்?

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி

(5 மதிப்பெண்கள்)

1. உலகளாவிய வேலை கலாச்சாரத்தை பாதிக்கும் பொதுவான காரணிகள் யாவை? அந்த காரணிகளை சமாளிக்கும் தீர்வுகளை கூறவும்.
2. ஏதேனும் ஐந்து வேலை திறன்களை விளக்கி அதனை மேம்படுத்தும் செயல்பாடுகளை கூறவும்.
3. தொழில் என்றால் என்ன? நிலையான தொழிலை உருவாக்குவதற்க்கான படிகளை விளக்கவும்.
4. வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குதல் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான உத்திகளை கூறவும்.

XII_TM_EMPS_CH09-2023.indd 182 13/03/2023 17:15:04

மாதிரி வினாத்தாள்

நேரம் : 3.00 மணி **மதிப்பெண்கள் : 70**

i) இவ்வினாத்தாளில் ஆங்கிலத்தில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஆங்கிலத்திலேயே விடையளிக்கவும்.

பின்பற்ற வேண்டிய குறிப்புகள்

ii) ஒப்படைப்பதற்கு முன் அனைத்து விடைகளையும் சரிபார்க்கவும்.

ii) வினாத்தாளில் ஏதேனும் அச்சுப்பிழை இருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.

பகுதி – அ

சரியான விடையை தேர்வு செய்யவும் 30X1=30 மதிப்பெண்கள்

1. சுய பிரதிபலிப்பு _____ என்றும் அழைக்கப்படுகிறது.

   அ. தனிநபர் பிரதிபலிப்பு ஆ. சுய பாராட்டு

   இ. தொழில்சார் பிரதிபலிப்பு ஈ. எண்ணங்கள்

2. நீண்டகால வெற்றிக்கு ஆதரவான உங்களின் உடனடி சௌகரியங்கள் அல்லது விருப்பங்களைத் தள்ளி வைப்பது _____ குறிக்கிறது.

   அ. சுய பிரதிபலிப்பு ஆ.சுய ஒழுக்கம் இ.சுய ஏற்பு ஈ.அழகுப்படுத்துதல்

3. நமது அனைத்துப் பொறுப்புகளையும் மிகச் சிறப்பாகச் செய்ய நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதற்கு, _____ முக்கியமாகும்.

   அ. அறிவு ஆ.செயல்திறன் இ.நடத்தை ஈ.திட்டமிடுதல்

4. LSRW skills stands for_____

   A. Listening speaking reading writing B. Learning speaking rising writing

   C. Learning speaking rising watching D. Language speaking rising writing

5. Which of the following is a future tense?

   A. I watched a movie B. I had a pet C. I will walk D. I lost it

6. Information about daily economy, entertainment, politics, sports and commerce are seen in_____

   A. Subject book B. Organisation's publications

   C. Yearbook D. Newspaper

7. Did she find the dress she was looking for? Identify the pronoun in the sentence?

   A. Did B. looking C. Dress D. She

XII_TM_EMPS_CH09-2023.indd 183 13/03/2023 17:15:04

8. ஒரே அறையில் இல்லாவிட்டாலும் கூட ஒன்றாக வேலை செய்து மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் செயல்முறை _____ எனப்படும்.

அ.மெய்நிகர் தகவல் தொடர்பு ஆ.இணையம்

இ.சமூக ஊடகம் ஈ.வலைப்பதிவுகள்

9. கவனம், மனப்பான்மை மற்றும் _____ ஆகியவை 3A கேட்டலாகும்.

அ.உளச்சார்வு ஆ.அனுசரிப்பு இ.மாற்று ஈ.பாராட்டுதல்

10. குறிப்புகள் எடுக்கும் பழக்கம் _____திறனை மேம்படுத்துவதற்கான உத்தி.

அ.ஊக்கம் ஆ.கடின இ.விளக்க ஈ.வலைப்பதிவிடுதல்

11. எந்த சந்தர்ப்பமானாலும் நாம் மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்த கொண்டு பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுத்து கூறுவது_____ எனப்படும்.

அ.சுய மரியாதை ஆ.புரிந்துணர்வு இ.விசுவாசம் ஈ.வழிகாட்டல்

12. ஓரங்களை கீழ்கண்ட எந்த பொருளடக்கத்தில் காணலாம்?

அ. முகப்பு ஆ. காட்சி இ. தளவமைப்பு ஈ. வடிவம்

13. பின்வருவனவற்றில் ஒட்டுவதற்கான குறுக்குவழி விசை எது?

அ. Ctrl + A ஆ. Ctrl + B இ. Ctrl + V ஈ. Ctrl + Z

14. பயனரின் கணிணி சூழலில் உருவாக்கப்பட்ட காட்சிகள் மற்றும் பொருள்கள் உண்மையானவை போன்ற தோற்றத்தை உணரச் செய்தல் _____எனப்படும்.

அ. முகில் (Cloud) ஆ. AI

இ. இணையப் பக்கம் ஈ.மெய்நிகர் உண்மை

15. செயல்பாட்டின் ஆரம்பகட்டத்தில் இருக்கும் ஒரு நிறுவனம் அல்லது திட்டமானது _____ ஆகும், இது பொதுவாக நிஜ வாழ்க்கை பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.

அ. வணிகம் ஆ. உத்தி இ. துவக்கத் தொழில் ஈ. அமைப்பு

16. தொழில் தொடங்குவதற்கு பணத்தை விட அதிக நேரம் உடையவர்கள்_____ தொழில்முனைவோர்.

அ. பின்தொடர் ஆ. புதுமையை கையாளும்

இ. ஆராய்ச்சி ஈ. வெற்றி முனைப்புடன் செயல்படும்

17. இளைஞர்கள் ஒரு தொடக்க நிறுவனராக இருக்க அவர்கள் கொண்டுள்ள சில திறன்கள் ஏற்றதாக இருக்கும், ஆனால் அவர்களிடம் மிக முக்கியமான_____ இருப்பதால் தங்கள் தொழில்களை சிறப்பானதாக மாற்றலாம்.

அ. நிதி ஆ. நேரம் இ. தொழில்நுட்பம் ஈ. உடல் நலம்

18. SWOT, PEST, ETOP மற்றும் QUEST ஆகியவை _____க்கு பயன்படுத்தப்படும் சில நுட்பங்கள்.

அ. முன்முயற்சி ஆ. சுற்றுப்புற நுண்ணாய்வு

இ. தர சரிபார்ப்பு ஈ. லாபத்தை பகுப்பாய்வு செய்யுங்கள்

19. குழு இயக்கத்தின் மூன்றாம் நிலை_____ ஆகும்.

அ. உருவாக்கம் ஆ. ஆற்றல் இ. நெறிப்படுத்தும் ஈ. செயல்படுத்தும்

XII_TM_EMPS_CH09-2023.indd 184 13/03/2023 17:15:04

20. 21 ஆம் நூற்றாண்டில் சந்தைப்படுத்தல் என்பது வாடிக்கையாளர் _____ வழங்குவதாகும்.

அ.தகவல் ஆ. வளங்கள் இ. தொடர்புகள் ஈ. அனுபவம்

21. பல்வேறுபட்ட பணியிடங்கள் _____ஐ அதிகரிக்கச் செய்ய சரியான நபர் சரியான பணியைப் பெறுவதை உறுதிசெய்கிறது.

அ. உற்பத்தித்திறன் ஆ. இலாபம் இ. இழப்பு ஈ. உற்பத்தி விகிதம்

22. பாலினம் மற்றும் கல்வி பற்றிய ஆய்வு _____ விளைவுகளில் பாலின வேறுபாடுகளை உள்ளடக்கியது.

அ. பணிபுரிதல் ஆ. கல்வி இ. அரசியல் ஈ. பொருளாதாரம்

23. இந்தியாவில் பாலின சமத்துவமின்மைக்கு பெண் குழந்தைகள் _____யில் பின்தங்கிய நிலையே காரணம்.

அ. கல்வி ஆ. நலம் இ. அமைதி ஈ. புரிந்தல்

24. டிஜிட்டல் நிதியியல் _____ற்கு மிகவும் முக்கியமானதாகும்.

அ. நிலையற்ற பொருளாதாரம் ஆ. பணமில்லா பொருளாதாரம்

இ. சந்தை பொருளாதாரம் ஈ. பணப்புழக்க பொருளாதாரம்

25. GST _____ ன் வழி தோன்றலாகும்.

அ. மதிப்பு கூட்டு வரி ஆ. வருமான வரி

இ. பொழுதுபோக்கு வரி ஈ. சேவை வரி

26. சுய தொழில் செய்வோர், ஆலோசகர்கள், தொழில்முனைவோர் மற்றும் நிறுவனங்களின் கூட்டாளர்கள் படிவம் _____க்கு தகுதியற்றவர்கள்.

அ. 15 ஆ. 18 இ. 61 ஈ. 16

27. பன்னாட்டு நிறுவனங்களின் உருவாக்கம் _____மூலம் சாத்தியமாகிறது.

அ. மையப்படுத்துதல் ஆ. பன்முகப்படுத்துதல்

இ. உலகமயமாக்கல் ஈ. உள்நாட்டு வர்த்தகம்

28. தரம் மற்றும் அளவு முறையில் பணியை பகுப்பாய்வு செய்வது_____ என அழைக்கப்படுகிறது.

அ. வேலை ஆ. பணி ஆய்வு

இ. வேலைச் சந்தையின் ஆய்வு ஈ. ஆட்சேர்ப்பு ஆய்வு

29. பணிபுரியும் உறவை _____ உடன் உருவாக்குவது வணிகத்தின் நீண்டகால வெற்றிக்கு முக்கியமாகும்.

அ. நிறுவனம் ஆ. உரிமையாளர்

இ. வாடிக்கையாளர் ஈ. சகப்பணியாளர்

30. வாடிக்கையாளர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு _____தீர்வை எதிர்பார்க்கிறார்கள்.

அ.தோற்றம் ஆ. வேகமான மற்றும் பயனுள்ள

இ. பின்னூட்டம் ஈ. மெதுவான மற்றும் பயனற்ற

XII_TM_EMPS_CH09-2023.indd 185 13/03/2023 17:15:04

பகுதி – ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி (வினா எண் 37 கட்டாய வினா)

5X2=10 மதிப்பெண்கள்

31. சுய ஊக்கமளித்தலின் முக்கியத்துவங்களைக் கூறவும்.

32. List out the benefits of reading the newspaper.

33. ஒத்துழைப்பு என்றால் என்ன?

34. பின்தொடர் தொழில்முனைவோர் என்பவர் யார்?

35. உலகின் பாலின இடைவெளி அறிக்கையை வெளியிடுபவர் யார்?

36. டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு என்றால் என்ன?

37. சொல்லாடல் திறன் என்றால் என்ன?

பகுதி – இ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி (வினா எண் 44 கட்டாய வினா)

5X3 =15 மதிப்பெண்கள்

38. What are the benefits of foreign language tests?

39. விளக்கத்திறன்களின் பண்புக்கூறுகள் யாவை?

40. ஒரு புக்மார்க்கை விளக்கக்காட்சியில் சேர்ப்பது எவ்வாறு?

41. முன்முயற்சி திறன்களை மேம்படுத்த ஏதேனும் 3 வழிகளை பட்டியலிடவும்.

42. GGGI ஐ அளவிடும் போது எத்தனை பரிமாணங்கள் உள்ளன?

43. வருமான வரி மற்றும் அதன் விலக்கு பகுதி பற்றி விளக்கவும்.

44. குறுக்கு கலாச்சார தடைகளை எதிர்கொள்வது எவ்வாறு?

பகுதி – ஈ

பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும். 3X5=15 மதிப்பெண்கள்

45. அ)தனிநபர் சுகாதாரம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை விளக்கவும்.

(அல்லது)

ஆ)What are the types of questions? Briefly explain them.

46. அ) தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலம்– பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்

(அல்லது)

ஆ) அரசு மற்றும் அரசு சாரா நிதிகளின் பெயர்கள் சிலவற்றைப் பட்டியலிட்டு விளக்கவும்.

47. அ)திறன் மேம்பாடு மற்றும் மறுதிறனாக்கம் ஆகியவற்றை ஒப்பிடவும்.

(அல்லது)

ஆ) ஏதேனும் ஐந்து வங்கியியல் அமைப்பின் வகைகளை விளக்கவும்.

XII_TM_EMPS_CH09-2023.indd 186 13/03/2023 17:15:04

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

தொழிற்கல்வி

வேலைவாய்ப்புத் திறன்கள்

செய்முறை

செய்முறை

பொருளடக்கம்

செய்முறை	தலைப்பு	பக்கம்
01	MS WORD செயலியைப் பயன்படுத்தி ஒரு பள்ளியின் எழுதுபொருள் தேவைகளுக்கான கொள்முதல் ஆணையை உருவாக்குதல்	189
02	MS Excel செயலியைப் பயன்படுத்தி தேர்வு முடிவுகளின் பகுப்பாய்வை உருவாக்குதல்	193
03	MS பவர் பாயிண்டைப் பயன்படுத்தி ஒரு நிறுவனத்தில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளின் விளக்கக்காட்சியை உருவாக்குதல்	201
04	LinkedIn – சுயவிவர கணக்கை உருவாக்குதல்	208
05	மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பெற கூகுள் படிவத்தை உருவாக்குதல்	212
06	Listening and speaking skills	220
07	தீ அணைப்பான் இயக்குவதற்கான செயல்விளக்கம்	222
08	வரிகளை கணக்கிடுதல்	224
09	Google meet இல் அழைப்பை மேற்கொள்ளுதல்	230
10	குழு விவாதம் – சீர்ப்படுத்துதல்	236

செய்முறை 1

MS WORD செயலியைப் பயன்படுத்தி ஒரு பள்ளியின் எழுதுபொருள் தேவைகளுக்கான கொள்முதல் ஆணையை உருவாக்குதல்

நோக்கம்

- MS Word செயலியைப் பயன்படுத்தி பள்ளி அலுவலகத்திற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் வாங்குவதற்காக ஒரு கொள்முதல் ஆணையை உருவாக்குதல்.

செய்முறையின்கீழ் உள்ள செயல்பாடுகள்



தேவைப்படும் கருவிகள் மற்றும் மென்பொருட்கள்:

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	அச்சுபொறியுடன் உள்ள கணினி அல்லது மடிக்கணினி	I5 செயலி/4GB RAM	1
2	MS Office மென்பொருள்	செயல்படுத்தப்பட்ட MS office	1

செயல்முறை:

பிரிவு 1: பள்ளிக்கான கொள்முதல் ஆணையை உருவாக்குதல்.

படி 1: Start > All programs > MS office > MS word > File>New தேர்வுசெய்யவும்.

படி 2: புதிய MS word ஆவணத்தில் படம் 1.1 ல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை பதிவிடவும்.



படம் 1.1 தட்டச்சு செய்வதற்கான கொள்முதல் ஆணை ஆவண விவரங்கள்

படி 3: தேவையான எழுதுபொருட்கள் தகவல்களை உள்ளிடுவதற்கு ஒரு அட்டவணையை உருவாக்கவும்.



படம் 1.2 அட்டவணையை உள்ளிடுதல்

படி 4: தகுந்த வரிசைகள் மற்றும் நெடுவரிசைகளில் எழுதுபொருள் விவரங்களை பதிவிடவும்.



படம் 1.3 தேவையான எழுதுபொருள் விவரங்களை பதிவிட்ட பிறகு

படி 5: படம் 1.4 ல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை ஆவணத்தில் பதிவிடவும்.



படம் 1.4 கொள்முதல் ஆணை ஆவணத்தில் தட்டச்சு செய்வதற்கான தகவல்கள்

படி 6: ஆவணத்தில் உள்ள புல்லட்டுகள், எண்வரிசையிடல், சீரமைவு, தலைப்பு, அடிக்குறிப்பு, பக்க எண், ஓரங்கள், அளவு, நெடுவரிசைகள், எழுத்துப்பிழை மற்றும் இலக்கண விருப்பங்களைப் பயன்படுத்தி ஆவணத்தை உருவாக்கவும்.



படம் 1.5 மாதிரி கொள்முதல் ஆணை

பிரிவு 2: ஆவணத்தை அச்சிடுதல்

படி 7: File > Print தேர்ந்தெடுக்கவும்

படி 8: ஆவணத்தை அச்சிடவும்.



படம் 1.6 கொள்முதல் ஆணையை அச்சிடுதல்

முடிவுரை

MS WORD செயலியைப் பயன்படுத்தி ஒரு பள்ளியின் எழுதுபொருள் தேவைகளுக்கான கொள்முதல் ஆணை வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.

மாதிரி கொள்முதல் ஆணையை.docx வடிவத்தில் பதிவிறக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

செய்முறை 2

MS Excel செயலியைப் பயன்படுத்தி தேர்வு முடிவுகளின் பகுப்பாய்வை உருவாக்குதல்

பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள தரவுகளை அட்டவணை வடிவமாக மாற்றவும்:

ஒரு வகுப்பில் உள்ள 10 மாணவர்களான அருண், பாலு, சந்துரு, டேவிட், எழில், பிராங்கிளின், கணேஷ், இம்ரான், மற்றும் ஜெகன் ஆகியோர் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற அரையாண்டு மதிப்பெண்கள் பாடவாரியாக(தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூகம்) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அருண்(Arun)– (85,80,70,65,50),

பாலு(Balu)– (90,85,90,70,75),

சந்துரு(Chandru)– (55,45,40,45,50),

டேவிட்(David)– (50,55,60,45,40),

எழில்(Ezhil)– (70,65,60,50,45),

பிராங்கிளின்(Franklin)– (75,55,45,40,55),

கணேஷ்(Ganesh)– (40,30,30,40,50),

ஹரிஷ் (Harish)– (30,40,25,30,20),

இம்ரான்(Imran)– (45,25,35,45,40), மற்றும்

ஜெகன்(Jegan)– (25,35,40,55,60)

ஒவ்வொரு மாணவரின் மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு, வட்ட வரைபடத்துடன் பகுப்பாய்வு செய்யவும்.

நோக்கம்

- MS Excel செயலியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட பத்தியில் உள்ள தகவல்களை அட்டவணை வடிவமாக மாற்றுதல்.
- வட்ட வரைபடத்துடன் முடிவுகளை பகுப்பாய்வு செய்யதல்.

செய்முறையின்கீழ் உள்ள செயல்பாடுகள்:



தேவைப்படும் கருவிகள் மற்றும் மென்பொருட்கள்:

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	கணினி அல்லது மடி கணினி	I5 செயலி/4GB RAM	1
2	MS Office மென்பொருள்	செயல்படுத்தப்பட்ட MS office	1

செயல்முறை:

பிரிவு 1: பத்தியில் உள்ள தகவல்களை படித்து புரிந்துகொள்ளுதல்

படி 1: பத்தியில் உள்ள தகவல்களைப் படிக்கவும்.

படி 2: பத்தியில் உள்ள தகவல்களைப் புரிந்து கொள்ளவும்.

படி 3: அட்டவணையை தேர்ந்தெடுத்து மனதில் காட்சிப்படுத்தவும்.

பிரிவு 2: தகவல்களை பணித்தாளில் பதிவிடுதல்

படி 4: Start அல்லது windows >All programs>MS office > Excel ஆகிய படிநிலைகளின் மூலம் Excel பணித்தாளினை திறக்கவும்.



படம் 2.1 அட்டவணைக்கான எல்லைகளை வரைதல்

படி 5: S.no, Name, Tamil, English, Maths, Science, Social Science, Total, Average, Result என்ற வரிசையில் தகவல்களுக்கான தலைப்பை உள்ளிடவும்.



	A	B	C	D	E	F	G	H	I	J	K
1	S.NO	ME OF THE STUDI	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT	
2	1	ARUN	80	80	70	65	50				
3	2	BALU	90	85	90	70	75				
4	3	CHADRU	55	45	40	45	50				
5	4	DAVID	50	55	60	45	40				
6	5	EZHIL	70	65	60	50	45				
7	6	FRANKLIN	75	55	45	40	55				
8	7	GANESH	40	30	30	40	50				
9	8	HARISH	30	40	25	30	20				
10	9	IMRAN	45	25	35	45	40				
11	10	JEGAN	25	35	40	55	60				
12											
13											

படம் 2.2 பணித்தாளில் தகவல்களை உள்ளிடுதல்

படி 6: அட்டவணையில் உள்ள தரவை சீரமைக்க வரிசைகள் மற்றும் நெடுவரிசைகளின் அளவை மாற்றியமைக்கவும், அட்டவணையின் முதலாவது வரிசையை தடிமனாக மாற்றவும்.

படி 7: மதிப்பெண்களின் மொத்தத்தை கணக்கிட

அ) தொகுதியிலிருந்து Autosum விருப்பத்தைப் பயன்படுத்துதல். மாணவரின் Total நெடுவரிசையில் cursorயை வைக்கவும் click>Autosum>sum

ஆ) =sum(C2:G2)

கொடுக்கப்பட்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட மாணவரின் Total நெடுவரிசையில் சூத்திரங்களை உள்ளிட்டு, சேர்க்க வேண்டிய மதிப்பெண்களைத் தேர்ந்தெடுக்கவும்.



படம் 2.3 Autosum விருப்பத்தைத் தேர்ந்தெடுத்தல்



	A	B	C	D	E	F	G	H	I	J
1	S.NO	ME OF THE STUDI	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
2	1	ARUN	80	80	70	65	50	=SUM(C2:G2)		
3	2	BALU	90	85	90	70	75			
4	3	CHADRU	55	45	40	45	50			
5	4	DAVID	50	55	60	45	40			
6	5	EZHIL	70	65	60	50	45			
7	6	FRANKLIN	75	55	45	40	55			
8	7	GANESH	40	30	30	40	50			
9	8	HARISH	30	40	25	30	20			
10	9	IMRAN	45	25	35	45	40			
11	10	JEGAN	25	35	40	55	60			
12										
13										
14										

படம் 2.4 SUM சூத்திரத்தை உள்ளிடுதல்

பிரிவு 3: கூட்டுதொகையை கண்டறிதல்.



I2 | =AVERAGE(C2:G2)

	A	B	C	D	E	F	G	H	I	J
1	S.NO	ME OF THE STUD	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
2	1	ARUN	80	80	70	65	50	345	69	
3	2	BALU	90	85	90	70	75	410		
4	3	CHADRU	55	45	40	45	50	235		
5	4	DAVID	50	55	60	45	40	250		
6	5	EZHIL	70	65	60	50	45	290		
7	6	FRANKLIN	75	55	45	40	55	270		
8	7	GANESH	40	30	30	40	50	190		
9	8	HARISH	30	40	25	30	20	145		
10	9	IMRAN	45	25	35	45	40	190		
11	10	JEGAN	25	35	40	55	60	215		
12								2540		

படம் 2.5 SUM சூத்திரத்தைச் உள்ளிட்ட பின்னர்

படி 8: கூட்டுதொகையை கண்டறிய autosum option>Average விருப்பத்தைப் பயன்படுத்தவும் அல்லது தேவையான நுண்ணறையில் =average(C2:G2) சூத்திரத்தைப் பயன்படுத்தி கூட்டுதொகையைக் கணக்கிடவும்.

பிரிவு 4: முடிவுகளை கண்டறிதல்

படி 9: சூத்திரங்களைப் பயன்படுத்தி முடிவைக் கணக்கிடவும்

=IF(AND(C2<=35,D2<=35,E2<=35,F2<=35,G2<=35),"pass""fail")



File | Home | Insert | Page Layout | Formulas | Data | Review | View | Help | Tell me what you want to d

Cut | Copy | Format Painter | Paste | Clipboard | Calibri | 11 | Font | Wrap Text | Merge & Center | Alignment

J2 | =IF(AND(C2>=35,D2>=35,E2>=35,F2>=35,G2>=35),"pass","fail")

	A	B	C	D	E	F	G	H	I	J
1	S.NO	ME OF THE STUD	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
2	1	ARUN	80	80	70	65	50	345	69	pass
3	2	BALU	90	85	90	70	75	410	82	pass
4	3	CHADRU	55	45	40	45	50	235	47	pass
5	4	DAVID	50	55	60	45	40	250	50	pass
6	5	EZHIL	70	65	60	50	45	290	58	pass
7	6	FRANKLIN	75	55	45	40	55	270	54	pass
8	7	GANESH	40	30	30	40	50	190	38	fail
9	8	HARISH	30	40	25	30	20	145	29	fail
10	9	IMRAN	45	25	35	45	40	190	38	fail
11	10	JEGAN	25	35	40	55	60	215	43	fail
12								2540	50.8	pass

படம் 2.6 முடிவைக் கண்டறிந்த பின்னர்

பிரிவு 5: மையப்படுத்தி இணைத்தல், உரை மடங்குதல் மற்றும் சீரமைதல் பற்றிப் புரிதல்

படி 10: பணித்தாளின் தலைப்பை உள்ளிட முதல் வரிசைக்கு மேலே 2 வரிசைகளைச் செருகவும்.



	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
	80	70	65	50	345	69	pass
	85	90	70	75	410	82	pass
	45	40	45	50	235	47	pass
	55	60	45	40	250	50	pass
	65	60	50	45	290	58	pass
	55	45	40	55	270	54	pass
	30	30	40	50	190	38	fail
	40	25	30	20	145	29	fail
	25	35	45	40	190	38	fail
	35	40	55	60	215	43	fail
					2540	**50.8**	pass

படம் 2.7 2 வரிசைகள் செருகுதல்

படி 11: நுண்ணறை A1 இல் தரவை பதிவிட்டு, ஒன்றிணைக்க வேண்டிய நுண்ணறைகளைத் தேர்ந்தெடுத்து, "Merge & Center" என்ற விருப்பத்தைக் click செய்யவும்.



	A	B	C	D	E	F	G	H	I	J
1	RESULT ANALYSIS									
2										
3	S.NO	ME OF THE STUD	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
4	1	ARUN	80	80	70	65	50	345	69	pass
5	2	BALU	90	85	90	70	75	410	82	pass
6	3	CHADRU	55	45	40	45	50	235	47	pass
7	4	DAVID	50	55	60	45	40	250	50	pass
8	5	EZHIL	70	65	60	50	45	290	58	pass
9	6	FRANKLIN	75	55	45	40	55	270	54	pass
10	7	GANESH	40	30	30	40	50	190	38	fail
11	8	HARISH	30	40	25	30	20	145	29	fail
12	9	IMRAN	45	25	35	45	40	190	38	fail
13	10	JEGAN	25	35	40	55	60	215	43	fail
14										
15										
16										

படம் 2.8 மையப்படுத்தி இணைத்தல்

படி 12: அதே நுண்ணறையில் தரவுகளை மடிக்க நுண்ணறை தேர்ந்தெடுக்கவும்>"Wrap Text" விருப்பத்தை click செய்யவும்



	A	B	C	D	E	F	G	H	I	J	K
1	RESULT ANALYSIS										
2											
3	S.NO	ME OF THE STUD	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT	
4	1	ARUN	80	80	70	65	50	345	69	pass	
5	2	BALU	90	85	90	70	75	410	82	pass	
6	3	CHADRU	55	45	40	45	50	235	47	pass	
7	4	DAVID	50	55	60	45	40	250	50	pass	
8	5	EZHIL	70	65	60	50	45	290	58	pass	
9	6	FRANKLIN	75	55	45	40	55	270	54	pass	
10	7	GANESH	40	30	30	40	50	190	38	fail	
11	8	HARISH	30	40	25	30	20	145	29	fail	
12	9	IMRAN	45	25	35	45	40	190	38	fail	
13	10	JEGAN	25	35	40	55	60	215	43	fail	

படம் 2.9 உரை மடக்குதல் விருப்பத்தை தேர்வு செய்தல்

படி 13: உரையை சீரமைக்க Orientation >Select the Cell>Select Orientation option தேர்ந்தெடுக்கவும்



	A	B	C	D	E	F	G	H	I	J
1	RESULT ANALYSIS									
2										
3	S.NO	NAME OF THE STUDENT	TAMIL	ENGLISH	MATHS	SCIENCE	SOCIAL	TOTAL	AVERAGE	RESULT
4	1	ARUN	80	80	70	65	50	345	69	pass
5	2	BALU	90	85	90	70	75	410	82	pass
6	3	CHADRU	55	45	40	45	50	235	47	pass
7	4	DAVID	50	55	60	45	40	250	50	pass
8	5	EZHIL	70	65	60	50	45	290	58	pass
9	6	FRANKLIN	75	55	45	40	55	270	54	pass
10	7	GANESH	40	30	30	40	50	190	38	fail
11	8	HARISH	30	40	25	30	20	145	29	fail
12	9	IMRAN	45	25	35	45	40	190	38	fail
13	10	JEGAN	25	35	40	55	60	215	43	fail

படம் 2.10 சீரமைப்பு விருப்பத்தைத் தேர்ந்தெடுத்த பின்னர்

பிரிவு 6: வட்ட வரைபடத்துடன் மதிப்பெண்களை பகுப்பாய்வு செய்தல்

படி 14: கட்டளையைப் பயன்படுத்தி பாடவாரியாக முடிவைப் பகுப்பாய்வு செய்ய

Alt F1>Select Chart Type as Pie chart>Select Change Data>Select C4 to G4>Click ok.



படம் 2.11 வட்ட வரைபடத்துடன் தரவுகளை செருகுதல்

முடிவுரை:

MS Excel செயலியைப் பயன்படுத்தி முடிவுகளின் பகுப்பாய்வு வட்ட வரைபடத்துடன் உருவாக்கப்பட்டது.

மாதிரி முடிவுகளின் பகுப்பாய்வை.xlsx வடிவத்தில் பதிவிறக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும

செய்முறை 3

MS பவர் பாயிண்டைப் பயன்படுத்தி ஒரு நிறுவனத்தில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளின் விளக்கக்காட்சியை உருவாக்குதல்

நோக்கம்

- MS பவர் பாயிண்டில் விளக்கக்காட்சியை உருவாக்குதல்
- MS பவர் பாயிண்டில் சில விருப்பங்களை ஆராய்தல்

செய்முறையின்கீழ் உள்ள செயல்பாடுகள்:



தேவைப்படும் கருவிகள் மற்றும் மென்பொருட்கள்:

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	கணினி அல்லது மடி கணினி	I5 செயலி/4GB RAM	1
2	MS Office மென்பொருள்	செயல்படுத்தப்பட்ட MS office	1

செயல்முறை:

பிரிவு 1: MS பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை திறத்தல்

படி 1: windows > search > MS–office PowerPoint என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

படி 2: PowerPoint > Select File > New திறந்து வெற்று விளக்கக்காட்சியை உருவாக்கவும்.

படி 3: புதிய சில்லுவில் மேலும் சில்லுகளைச் சேர்த்து, தரவுகளை பதிவிட உரையைத் தேர்ந்தெடுத்து தேவையான இடங்களில் எழுத்துருக்கள், தடிமன், சாய்வு, அடிக்கோடு போன்ற பாணிகளை மாற்றவும்.

பிரிவு 2: கொடுக்கப்பட்ட விளக்கக்காட்சியில் தரவை உள்ளிடுதல்

படி 4: விளக்கக்காட்சியில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் உள்ளிடவும்



படம் 3.1 சில்லுகளில் தகவல்களை உள்ளிடுதல்

படி 5: தொகுதியில் அழகாக்கம் விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து சில்லுகளில் அழகாக்கத்தைப் பயன்படுத்தி மாற்றியமைக்கவும்.



படம் 3.2 அழகாக்கம் விருப்பத்தைப் பயன்படுத்துதல்

படி 6: விளக்கக்காட்சியினை நிகழ்த்தும் போது சில்லுகள் மற்றும் அதில் உள்ள தகவல்கள் எவ்வாறு தோன்றவேண்டும் என்பதை மாற்ற நிலைமாற்றம் மற்றும் அசைவூட்டல் விருப்பத்தைப் பயன்படுத்தவும்.



படம் 3.3 நிலைமாற்றம் மற்றும் அசைவூட்டல் பயன்பாடு

படி 7: MS பவர் பாயிண்டில் மீத்தொடுப்பை உருவாக்க, சேர்க்க விரும்பும் தரவைத் தேர்வு செய்யவும் > Save it in the Desktop . Powerpoint இல், "Insert"> hyperlink அல்லது "Insert"> Hyperlink(or Ctrl+K)> Existing file in webpage>Select "Desktop File name" from options> Click OK.



படம் 3.4 MS பவர் பாயிண்டில் மீத்தொடுப்பை உருவாக்குதல்

படி 8: கணினியிலிருந்து கேட்பொலியைச் சேர்க்க, Insert > Audio> Audio on my PC (ஆடியோ கோப்பை நீங்கள் சேமித்து வைத்திருந்தால்) அல்லது நேரலையில் சொல்ல விரும்பினால் கேட்பொலியை பதிவு செய்யவும்



படம் 3.5 கேட்பொலியை பதிவு செய்தல்



படம் 3.6 கேட்பொலியை பதிவிட்ட பிறகு

படி 9: விளக்கப்படத்தில் திறன்கலையை சேர்க்க, Insert>Smart Art பட்டியலிலிருந்து விரும்பமான விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்.



படம் 3.7 திறன்கலையை சேர்த்தல்

படி 10: விளக்கக்காட்சியைச் சேமிக்கவும்

மாதிரி விளக்கக்காட்சி:





7 TYPES OF PERSONAL PROTECTIVE EQUIPMENT (PPE) TO GUARANTEE YOUR SAFETY

- *Safety for the head*
- *Protect your eyes*
- *Hearing production*
- *Maintain a good respiration*
- *Protect your hands with the right gloves*
- *Protection for the feet*
- *Wear the correct work clothing*



To See the presentation from the internet , Use this link:

- *https://www.slideshare.net/MIGlobalCorporation/safety-items-list-63972592*

TYPES INDUSTRIAL SAFETY SYSTEM

1.Emergency shutdown (ESD)
2.Safety shutdown system (SSS)
3. Fire and gas system (FGS)
4. Emergency depressurization (EDP)
5. Pressure safety valves(PSV)





படம் 3.8 மாதிரி விளக்கக்காட்சி

முடிவுரை

MS PowerPoint ஐப் பயன்படுத்தி ஒரு நிறுவனத்தில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு முறையின் விளக்கக்காட்சி வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.

	மாதிரி MS PowerPoint .pptx வடிவத்தில் பதிவிறக்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

செய்முறை 4

LinkedIn – சுயவிவர கணக்கை உருவாக்குதல்

நோக்கம்

- லிங்க்டுஇன்(LinkedIn) –இல் சுயவிவர கணக்கை உருவாக்குதல்.

தேவையான மென்பொருள் மற்றும் உபகரணங்கள் :

வ.எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	கணினி அல்லது மடிக்கணினி	I5 processor/4GB RAM	1
2	உலாவி	புதுப்பிக்கப்பட்டது	1

செயல்முறை

படி 1: லிங்க்டுஇன் செயலியை பதிவிறக்கவும் அல்லது https://www.linkedin.com என்ற இணையதளத்திற்குச் செல்லவும்

படி 2: லிங்க்டுஇன் இணையதளத்தின் வலது மேல் மூலையில் காணக்கூடிய "Join now" விருப்பத்தை கிளிக் செய்யவும்



படம் 4.1 லிங்க்டுஇன் இணையதளம்

படி 3: மின்னஞ்சல் முகவரி/தொலைபேசி எண்ணை உள்ளிட்டு கடவுச்சொல்லை அமைக்கவும். "Agree and join" என்பதைக் கிளிக் செய்யவும்.



படம் 4.2 தொலைபேசி எண் மற்றும் கடவுச்சொல் அமைப்பு

படி 4: லிங்க்டுஇனிலிருந்து அனுப்பப்பட்ட பாதுகாப்புக் குறியீட்டை உள்ளிடவும்



படம் 4.3 பாதுகாப்பு குறியீட்டை உள்ளிடுதல்

படி 5: பெயர் மற்றும் இருப்பிட விவரங்களை உள்ளிடவும்.



படம் 4.4 இருப்பிட விவரங்களை உள்ளிடுதல்

படி 6: கல்வித் தகுதிகளுடன் சுயவிவரத்தை அமைத்து விருப்பமான வேலைக்கான துறையைத் தேர்ந்தெடுக்கவும்.



படம் 4.5 கல்வித் தகுதிகளை உள்ளிடுதல்

படி 7: கணக்கு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.



படம் 4.6 லிங்க்டுஇன் சுயவிவரம்

படி 8: லிங்க்டுஇன்–இல் கணக்கை உருவாக்குவதற்கான உள்ளீடுகள்:

தொலைபேசி	உங்கள் தொலைபேசி எண்
மின்னஞ்சல்	உங்கள் மின்னஞ்சல் ஐடி
கடவுச்சொல்	கடவுச்சொற்கள் எழுத்து வடிவுணர்வு கொண்டவை, அதில் குறைந்தது ஆறு எழுத்துகள் இருக்க வேண்டும். ஒரு நல்ல கடவுச்சொல் பெரிய எழுத்து, சிறிய எழுத்துக்கள், எண்கள் மற்றும் சின்னங்களின் கலவையைக் கொண்டிருக்கும்
பெயர்	முதல் பெயர் மற்றும் கடைசி பெயர்.
இருப்பிடம்	உங்கள் நகரத்தின் பெயரை உள்ளிடவும்
வகை	"I am a student" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
கல்வி தகுதி	உங்கள் பள்ளியின் பெயரை உள்ளிடவும். பள்ளிக் கல்வியில் சேர்ந்த ஆண்டு & இறுதி ஆண்டை உள்ளிடவும். உங்கள் பிறந்த தேதியை உள்ளிடவும்.

முடிவுரை

லின்க்டுஇன் சுயவிவர கணக்கு உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக புதுப்பிக்கப்பட்டது..

	லின்க்டுஇன் இணையதளத்திற்குச் செல்ல QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

செய்முறை 5

மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பெற கூகுள் படிவத்தை உருவாக்குதல்

நோக்கம்

- மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பெற கூகுள் படிவத்தை உருவாக்குதல்.

தேவையான மென்பொருள் மற்றும் உபகரணங்கள்

வ.எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	கணினி அல்லது மடிக்கணினி	I5 processor/4GB RAM	1
2	உலாவி	புதுப்பிக்கப்பட்டது	1

செயல்முறை:

படி 1: ஜி–மெயிலில் உள்நுழையவும். ஜி–மெயில் சுயவிவரத்தின் வலது பக்கத்தில் உள்ள விருப்பத்தை கிளிக் செய்யவும்.



படம் 5.1 ஜிமெயிலில் உள்நுழைந்த பிறகு

படி 2: பக்கத்தை ஸ்க்ரோல் செய்து "Forms" விருப்பத்தை கிளிக் செய்யவும்



படம் 5.2 படிவங்களைத் தேர்ந்தெடுத்தல்

படி 3: "Blank" விருப்பத்தை கிளிக் செய்து புதிய படிவத்தை உருவாக்கவும்



படம் 5.3 வெற்று படிவத்தை உருவாக்குதல்

படி 4: கோப்பை மறுபெயரிடுவதன் மூலம் தலைப்பை "Student details " என மாற்றவும்



படம் 5.4 படிவத்தின் தலைப்பைத் திருத்துதல்

படி 5: புதிய கேள்விகளை உருவாக்குவதற்கு "+" விருப்பத்தை கிளிக் செய்யவும்



படம் 5.5 கேள்விகளை உருவாக்குதல்

படி 6: குறுகிய பதில், பத்தி, MCQகள், தேர்வுப்பெட்டி விருப்பங்கள் போன்றவை, சாளரத்தின் வலது பக்க மூலையில் உள்ள கீழ்தோன்றும் பட்டியலைக் கிளிக் செய்வதன் மூலம் காட்டப்படும்.



படம் 5.6 கேள்வி மற்றும் பதில் வகையைத் தேர்ந்தெடுத்தல்

படி 7: "Short answer" என்பதைத் தேர்ந்தெடுத்து, கேள்வியை "Name" என தட்டச்சு செய்யவும்



படம் 5.7 குறுகிய பதில் கேள்வியை உருவாக்குதல்

படி 8: மாணவரின் பிறந்த தேதியைப் பெற, "Date" என்பதைத் தேர்ந்தெடுத்து, கேள்வியை "Date of Birth" என்று தட்டச்சு செய்யவும்.



படம் 5.8 பல தேர்வு கேள்வியை(Multiple choice) உருவாக்குதல்

படி 9: மாணவரின் பாலினத்தைப் பற்றி அறிய, "Drop-down" என்பதைத் தேர்ந்தெடுத்து, கேள்வியை "Gender" என்று தட்டச்சு செய்யவும்.



படம் 5.9 கீழ்தோன்றும் கேள்வியை(Drop–down) உருவாக்குதல்

படி 10: "Gender" என்ற கேள்வியின் கீழ் "Male,Female and Others" என தட்டச்சு செய்யவும்



படம் 5.10 கீழ்தோன்றும் கேள்வியின்(Drop–down) விருப்பங்களை உள்ளிடுதல்

படி 11: அனைத்து கேள்விகளையும் தட்டச்சு செய்த பிறகு, சுயவிவரத்திற்கு அருகில் உள்ள "Send" விருப்பத்தை கிளிக் செய்யவும்



படம் 5.11 படிவத்தை அனுப்புதல்

படி 12: மின்னஞ்சல் ஐடியை உள்ளிடவும் அல்லது "Link" விருப்பத்தை கிளிக் செய்யவும்



படம் 5.12 மின்னஞ்சலைப் பயன்படுத்தி படிவத்தை அனுப்புதல்

படி 13: இணைப்பை நகலெடுத்து மற்றவர்களுக்கு அனுப்பவும்



படம் 5.13 இணைப்பைப் பயன்படுத்தி படிவத்தை அனுப்புதல்

படி 14: பதில்களைக் காண "Responses" என்ற விருப்பத்தை கிளிக் செய்யவும்.



படம் 5.14 பதில்களை பார்த்தல்

படி 15: ".CSV" வடிவத்தில் பதில்களைப் பெற "More" ஐகானைக் கிளிக் செய்யவும். பதில்களை ".CSV" வடிவத்தில் பதிவிறக்கவும்.



படம் 5.15 பதில்களை பதிவிறக்குதல்

படி 16: MS Excel ஐப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்யப்பட்ட கோப்பைப் பார்க்கவும்



படம் 5.16 MS Excel இல் பதில்களைப் பார்த்தல்

முடிவுரை

மாணவர்களின் தனிப்பட்ட விவரங்கள் தொடர்பான கேள்விகள் அடங்கிய கூகுள் படிவம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.

செய்முறை 6

Listening and speaking skills

OBJECTIVE

- To listen to the audio actively and answer the questions given below.
- To deliver a speech on the content of the audio.

Tools and software required:

S.NO	Name of the apparatus/ components	Range/Value	Quantity
1	Computer/Laptop with Internet	I5 Processor/4GB RAM	1
2	Speaker/Microphone/Headphones	–	1

A. Listen to the conversation, and then answer the questions given below:

PROCEDURE:

Step 1: Scan the QR code provided below using any QR & barcode reader app. Click the link that appears.

	Scan QR Code to listen the audio

Step 2: Listen to the audio using Speaker/Microphone/Headphones.

Step 3: Make sure that the room where the practical is going to be done is silent.

Step 4: Check if the Microphones/Speaker/Headphones are working properly.

Step 5: Play the audio and listen to specifics. If you are unable to remember them, take notes as you hear them.

Step 6: After hearing once check if you have obtained required details and try to answer the questions provided

Step 7: Answer the questions provided below,

1. What was the age of the little boy?
2. How much money did he have with him?
3. When did this incident took place?
4. How much money was left for the waiter?
5. What was the first item the little boy received at the ice cream shop?

Step 8: Verify the answers

ANSWERS:

1. 10-year-old
2. Rs.50
3. A day in April
4. 15 Rupees
5. A cup of water

Step 9: If you are unable to answer the questions, hear the audio note again and answer the questions.

B. Speech on content in the audio

Step 10: After listening to the audio and answering the questions, provide a speech summarizing the story you heard on the audio with a moral.

Step 11: Prepare a speech. Take 15 minutes to summarize the story heard on the audio with the notes taken earlier.

Step 12: Greet the gathering.

Step 13: Describe the story in simple words.

Step 14: Tell the moral of the story

Step 15: End the speech with a thank you note

SAMPLE SPEECH:

Story name:Kindness of the child

Warm wishes to all gathered here. The story takes place on a bright sunny April day, a 10–year–old boy wanted some ice cream. So, he went to the ice cream shop. As he sat on the table, a waiter gave him a cup of water and asked what the boy wanted. The boy asked for the money he needed to buy a Badam ice cream; the waiter said it was Rs.50. The boy then checked the collection of coins he had in his pocket, he again asked what does a dish of plain ice cream cost? The waiter replied rudely that it was Rs.35 as many people were waiting for the table. The boy said he wanted a plain ice cream. The waiter gave him the ice cream, gave the bill at the counter and walked away. The boy finished his ice cream, paid the bill and left. The waiter then came back to clean the table and he was shocked to see the boy left him Rs.15 as a tip.

This story tells that a small act of kindness is needed all the time.

Thank you.

CONCLUSION

Thus, in this experiment listening skill and speaking skills were performed.

செய்முறை 7

தீ அணைப்பான் இயக்குவதற்கான செயல்விளக்கம்

நோக்கம்

- தீ அணைப்பானை பாதுகாப்பாக இயக்க அறிந்துகொள்ளுதல்.

தேவையான உபகரணங்கள்

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	தீ அணைப்பான்	2 கிகி– உலர் தூள்	1

தெரிந்து கொள்ள வேண்டியவை:

பராமரிப்பு:

- அழுத்த அளவீட்டை அவ்வப்போது சரிபார்த்து இயக்கக்கூடிய அளவில் அழுத்தத்தை உயர்த்த வேண்டும்.
- கசிவுக்கான சோதனை.
- முனைபகுதி தடையின்றி இருக்க வேண்டும்.
- அடைப்புஊசி இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.

எச்சரிக்கை

- பகுதியளவில் பயன்படுத்தப்பட்ட/வெளியேற்றப்பட்ட அணைப்பான் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம்

முக்கியமான உதவி எண்கள்:

தீயணைப்பு படை	101
மருத்துவ அவசர ஊர்தி	108
காவல்	100
குழந்தை உதவி எண்	1098
பெண்கள் உதவி எண்	181
பேரிடர் மேலாண்மை	104

செயல்முறை:

படி 1: தீக்கு ஏற்ப பொருத்தமான தீ அணைப்பானை தேர்வு செய்யவும்.

படி 2: அழுத்த அளவீட்டில் பச்சை பகுதி அறிகுறிகளைச் சரிபார்க்கவும்.

படி 3: தீயை அணைக்க P.A.S.S நுட்பத்தைப் பயன்படுத்தவும்.



படி 4: இழுத்தல் (PULL): அடைப்புஊசியை இழுக்கவும். இவ்வாறு இழுப்பது அடைப்பை உடைக்கும்.

படி 5: இலக்கு (AIM): தீ இலக்குக்கு தாழ்வாக,அணைக்கும் முனையை (அல்லது அதன் குழாயை) தீயின் அடிப்பகுதியை நோக்கிப் பிடித்தல்.

(குறிப்பு: CO2 அணைப்பான்களில் பிளாஸ்டிக் வெளியேற்ற குழாயைத் தொடாதீர்கள், அது மிகவும் குளிராக இருக்கும் மற்றும் சருமத்தை சேதப்படுத்தும்)

படி 6: அழுத்தம் (SQUEEZE): தீ அணைக்கும் காரணியை வெளியேற்ற கைப்பிடியை அழுத்தவும்.

படி 7: ஸ்வீப் (SWEEP): தீயின் அடிப்பகுதியிலிருந்து அனைத்து பக்கத்திலும் பரவலாக அணைக்கவும். தீ எரியும் பகுதிகளைக் கவனியுங்கள். தீ மீண்டும் எரிந்தால், 5–7 படிகளை மீண்டும் செய்யவும்.



(குறிப்பு: தீயை எதிர்த்துப் போராடும் திறன் குறித்து உங்களுக்குச் சிறிதளவு சந்தேகம் இருப்பினும் உடனடியாக வெளியேறவும்!)

முடிவுரை

மேற்கண்ட செயல்முறையில், **தீ அணைப்பான்** வெற்றிகரமாக இயக்கப்பட்டுள்ளது.

செய்முறை 8
வரிகளைக் கணக்கிடுதல்

நோக்கம்

- கொடுக்கப்பட்ட பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரிகளைக் கணக்கிடுதல்.
- தேவைப்படும் கருவிகள் மற்றும் மென்பொருட்கள்:

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	மேசை கணினி அல்லது மடிக்கணினி	I5 செயலி/4GB RAM	1
2	உலாவி	மேம்படுத்தப்பட்டது	1

செயல்முறை:

படி 1: https://cbic–gst.gov.in என்ற URL ஐ உலாவியில் தட்டச்சு செய்யவும்.



படம் 8.1 உலாவி இடைமுகம்.

படி 2: சேவைகள் என்னும் தேர்வில் இருந்து "GST Rates" என்ற விருப்பத்தை தேர்வு செய்யவும்.



படம் 8.2 GST Rates விருப்பம்.

படி 3: பிறகு "Description of Goods" என்னும் தேர்வில் பொருட்களின் பெயரை உள்ளீடு செய்து "🔍" சின்னத்தை பயன்படுத்தி தேடவும்.



படம் 8.3 Description of Goods ஐ உபயோகித்து தேடல்.

தெரிந்து கொள்ள வேண்டியவை:

HSN குறியீடு:

இந்தியாவில் HSN குறியீடு என அழைக்கப்படும் HS குறியீடு, உலக சுங்க அமைப்பு (WCO) மூலம் உலகெங்கிலும் உள்ள பொருட்களை ஒரே முறையாக வகைப்படுத்த, ஒரு தரப்படுத்தப்பட்ட அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்தியாவில், HSN குறியீடு 4, 6 & 8–இலக்க சீரானக் குறியீடுகளைக் கொண்டுள்ளது, அவை 5000 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை வகைப்படுத்துகின்றன மற்றும் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

SAC குறியீடு:

SAC என்பது service accounting code – சேவை கணக்கீட்டு குறி என்பதன் சுருக்கம் ஆகும். இது பொருட்களுக்கு பதிலாக சேவைகளை வகைப்படுத்தப் பயன்படுகிறது. எல்லா சேவைகளும் 99 என்ற எண்ணுடன் தொடங்கும், இது குறியீட்டை SAC என அடையாளப்படுத்துகிறது. இது HSN இல் அடங்காது.

படி 4: "அத்தியாயம் / தலைப்பு / துணைத் தலைப்பு / கட்டண உருப்படி (பெயரிடல் ஒத்திசைவான அமைப்பு குறியீடு), பொருட்களின் விளக்கம், CGST சதவீதம் மற்றும் SGST சதவீதம் ஆகியவற்றைக் கவனியுங்கள்.



படம் 8.4 HSN,CGST & SGST ஆகியவற்றைத் தேடல்

படி 5: "Clear" என்னும் விருப்பத்தை தேர்வு செய்து, மற்றொரு பொருளின் பெயரை உள்ளீடு செய்யவும்.



படம் 8.5 பெயரை நீக்கம் செய்தல்.

வ. எண்	HSN குறியீடு	பொருளின் பெயர்	அலகு	விலை	CGST சதவீதம்	CGST விலை	SGST சதவீதம்	SGST விலை	தள்ளுபடி	விலை
1	0804	மாம்பழத் துண்டுகள் (Mangoes sliced)	1	50	2.5%	1.25	2.5%	1.25	0	50
2	0402 91 10	பதப்படுத்தப்பட்ட பால் (Condensed milk)	1	60					0	60
3	0401	தூய பால் (Fresh milk)	1	50					0	50
4	4910	நாட்காட்டி (Calendar)	1	100					0	100
5	8528	கணினி திரை (Monitor)	1	7000					0	7000
					CGST யின் மொத்தம்		SGSTயின் மொத்தம்		மொத்தம்	

படி 6: ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனியாக CGST மற்றும் SGST ஐ கணக்கிடவும்.

சூத்திரம்:

ஒரு பொருளின் CGST = ×CGST சதவீதம்

ஒரு பொருளின் SGST = ×SGST சதவீதம்

1. மாம்பழத் துண்டுகளின் CGST $= \frac{500}{100} \times 2.5 = ₹1.25$

மாம்பழத் துண்டுகளின் SGST $= \frac{500}{100} \times 2.5 = ₹1.25$

2 பதப்படுத்தப்பட்ட பாலின் CGST =

பதப்படுத்தப்பட்ட பாலின் SGST =

3. தூய பாலின் CGST =

தூய பாலின் SGST =

4. நாட்காட்டியின் CGST =

நாட்காட்டியின் SGST =

5. கணினி திரையின் CGST =

கணினி திரையின் SGST =

படி 7: மொத்த GST யின் மதிப்பை அறிய, கண்டுபிடித்துள்ள CGST மற்றும் SGST ஐ கூட்டவும்.

CGST யின் மொத்தம் = ₹ 1.25+ ₹_____+ ₹_____+ ₹_____+ ₹_____= ₹_____

SGST யின் மொத்தம் t= ₹1.25 + ₹_____+ ₹_____+ ₹_____+ ₹_____= ₹_____

மொத்தம் = ₹50 + ₹_____+ ₹_____+ ₹_____+ ₹_____= ₹_____

படி 8 : CGST மற்றும் SGST யின் கூட்டுத் தொகையுடன், பொருளின் விலையையும் கூட்டவும். இதன் மூலம் இறுதி மதிப்பை பெறலாம்.

செலுத்த வேண்டிய தொகை = CGST யின் மொத்தம் + SGST யின் மொத்தம் + பொருளின் விலை.

= ₹_____+ ₹_____+ ₹_____

செலுத்த வெண்டிய தொகை = ₹_____

படி 9: மொத்த வரித் தொகையைக் கண்டறிய, தயாரிப்புகளின் மொத்த CGST தொகை மற்றும் மொத்த SGST தொகையைச் சேர்க்கவும்

மொத்த வரித் தொகை = மொத்த CGST தொகை + மொத்த SGST தொகை

= ₹_____+ ₹_____

மொத்த வரித் தொகை = ₹_____

செலுத்த வெண்டிய தொகை = ₹_____

செலுத்த வெண்டிய தொகை (எழுத்தால்)– _____

மொத்த வரித் தொகை = ₹_____

மொத்த வரித் தொகை (எழுத்தால்) – _____

முடிவுரை

கொடுக்கப்பட்டுள்ள பொருட்களின் சரக்கு மற்றும் சேவை வரிகள் (GST) வெற்றிகரமாகக் கண்டறியப்பட்டது.

	GST கணக்கிடுதலின் மாதிரியை காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

செய்முறை 9

Google meet இல் அழைப்பை மேற்கொள்ளுதல்

நோக்கம்

- Google meet ஐப் பயன்படுத்தி காணொளி சந்திப்பை உருவாக்கி நிகழ்த்துதல்.

தேவைப்படும் கருவிகள் மற்றும் மென்பொருட்கள்:

வ. எண்	சாதனம் மற்றும் கூறுகளின் பெயர்	அளவு/மதிப்பு	எண்ணிக்கை
1	மேசைக் கணினி அல்லது மடிக்கணினி	I5 செயலி/4GB RAM	1
2	உலாவி	மேம்படுத்தப்பட்டது	1

செயல்முறை:

படி 1: start –> All programs –> Gmeet ஆகிய தேர்வுகள் மூலம் Google meet செயலியைத் திறக்கவும்.

அல்லது Google browser –> select the menu –> G meet ஐத் திறக்கவும்.



படம் 9.1 Meet ஐத் திறத்தல்

படி 2: புதிய சந்திப்பை திறக்கவும்.



படம் 9.2 சந்திப்பு இணைப்பை உருவாக்குதல்

படி 3: கீழ்காணும் மூன்று தெரிவுகள் காணப்படும்:

"பின்னர் சந்திப்பை உருவாக்கு–Create a meeting for later" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டால் – ஒரு இணைப்பு தோன்றும், அதன்பின் இணைப்பை நகலெடுத்து சந்திப்பில் சேர்வதற்குத் தேவையான எவருக்கும் அனுப்பலாம் மேலும் எப்போது வேண்டுமானாலும் சந்திப்பைத் தொடங்கலாம்.

"உடனடியாக சந்திப்பைத் தொடங்கு–Start an Instant meeting" தேர்ந்தெடுக்கப்பட்டால் – சந்திப்பு உடனடியாகத் தொடங்கும்.

"நாட்காட்டியில் அட்டவணை–Schedule in calendar" தேர்ந்தெடுக்கப்பட்டால் – கூகுள் நாட்காட்டியில் சந்திப்பை அமைக்க விரும்பும் தேதியை நாம் தேர்வு செய்யலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில், இணைப்பும் அறிவிப்பும் கூகுள் நாட்காட்டி மூலம் அனுப்பப்படும்.



படம் 9.3 சந்திப்பில் மற்றவர்களை சேர்த்தல்

படி 4: சந்திப்பில் சேர நண்பர்களை அழைக்க, Gmailலைப் பயன்படுத்தி அவர்களுடன் சேர "மற்றவர்களைச் சேர்–Add others" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

படி 5: இணைப்பை நகலெடுத்து (எ.கா.trg–gypo–fty) WhatsApp அல்லது SMS அல்லது மின்னஞ்சலைப் பயன்படுத்தி உங்கள் நண்பருக்கு அனுப்புவது, நண்பர்களைச் சேர்ப்பதற்கான மற்றொரு வழி ஆகும்.



படம் 9.4 மின்னஞ்சல் மூலம் மற்றவர்களை சேர்த்தல்

படி 6: சந்திப்பு தொடங்கியவுடன் யாரேனும் அழைப்பில் சேரும்போது(அவர்கள் சாதனத்தில் gMeet நிறுவியிருந்தால் இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம்), சந்திப்பை நடத்துபவர் சந்திப்பில் மற்றவர்களை சேர அனுமதிக்கவும், சந்திப்பு அமைப்புகளைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொண்டுள்ளார்.



படம் 9.5 நுழைவை ஒப்புக்கொள்ளுதல்

படி 7: அவர்களை சந்திப்பில் சேர்ப்பதற்கு "admit" என்பதைத் தேர்வு செய்யவும்.



படம் 9.6 அழைப்பில் உள்ளவர்களை சரிபார்த்தல்.

படி 8: தற்போது நம்மால்,

"Mic" பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் பேசலாம்.

சாதனத்தில் கேமராவில் எடுக்கப்படும் வீடியோவைக் காட்டுவதற்கு , "கேமரா–Camera" என்பதில் ஆன் அல்லது ஆஃப்–ஐ கிளிக் செய்யவும்.

" Share your screen or give presentation" என்பதைக் கிளிக் செய்வதன் மூலம் திரையைப் பகிரலாம்

"More options" என்பதில் திரையின் பின்னணியை மாற்றலாம்

"Show everyone" விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் சந்திப்பின் விவரங்களை அல்லது அழைப்பில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பெறலாம்

"Chat" விருப்பத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட யாருடனும் அல்லது அனைவருடனும் அரட்டையடிக்கலாம்



படம் 9.7 G–Meet இல் உள்ள விருப்பங்கள்

படி 9: "More options" என்பதில் விரிவுரையை வரைந்து காட்ட வெள்ளை பலகையைப் பயன்படுத்தவும்.

more options–> select whiteboard–>start new whiteboard தேர்ந்தெடுக்கவும்



படம் 9.8 கூடுதல் விருப்பங்கள்



படம் 9.9 வெள்ளை பலகையை ஐத் திறத்தல்.

படி 10: அமர்வுக்குப் பிறகு, "Leave Call" ஐத் தேர்ந்தெடுப்பதன் மூலம் சந்திப்பை முடிக்கவும்.



படம் 9.10 அழைப்பை விட்டு வெளியேறுதல்

முடிவுரை

Google meet மூலம் காணொளி சந்திப்பு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டது.

செய்முறை 10

குழு விவாதம் – சீர்ப்படுத்துதல்

நோக்கம்

- சீர்ப்படுத்துதல் (Grooming) என்னும் தலைப்பில் குழு விவாதத்தில் ஈடுபடுதல்.

செயல்முறை

(தலைப்பைக் கொடுத்த பிறகு, தயாரிப்பதற்கு 10 நிமிடங்கள் கொடுக்க வேண்டும்)

ராணி: காலை வணக்கம் நண்பர்களே! வேலைச் சந்தை கடுமையானதாகவும், வாய்ப்பைப் பெற ஆளுமை வளர்ச்சி முக்கியமானதாகவும் இருப்பதால், சீர்ப்படுத்துதல் என்பது நமது அன்றாட வாழ்வின் முக்கியமான மற்றும் ஒருங்கிணைந்த பகுதியாக மாறி விட்டது.

மகேஷ்: சீர்ப்படுத்துதல் சுயமரியாதையை மதிப்பிடுகிறது.

ராணி: இது யதார்த்தத்தை விட கணிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. தோற்றம், நிறம் மற்றும் பாணி ஆகியவற்றிற்கும் வேலை வாழ்க்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

அன்வர்: இது மக்கள் தங்களைப் பற்றி கூடுதல் நம்பிக்கையுடன் உணர உதவுகிறது. அவர்கள் சுயமரியாதை உணர்வை வெளிப்படுத்துகிறது. இதன்மூலம் அவர்கள் விரைவாக நீடித்த பதிவுகளை உருவாக்க முடியும்.

மகேஷ்: தனிப்பட்ட சுகாதாரம் சீர்ப்படுத்துதலுடன் வருகிறது, இது புறக்கணிக்கப்பட்டால் நீங்கள் சந்திக்கும் நபர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும்.

அன்வர்: தன்னை நன்கு அழகுபடுத்தி, சுத்தம் செய்வதன் மூலம், நாமும் ஆரோக்கியமாக இருக்க முடியும். கைகளைக் கழுவுதல், நகங்களை ஒழுங்கமைத்து அழகுபடுத்துதல் போன்ற ஒரு எளிய முயற்சி, நீண்ட உடல்நலப் பிரச்சினைகளிலிருந்து நம்மைத் தடுக்கலாம்.

ராணி: அதன் மூலம் பணம் சம்பாதிக்க விரும்புவோருக்கு சீர்ப்படுத்துதல் சிறந்த சந்தைப்படுத்தல் உத்தியாகிறது. ஒரு எளிய முடி பராமரிப்பு இப்போதெல்லாம் மிகவும் விலை உயர்ந்ததாகிவிட்டது.

மகேஷ்: சீர்ப்படுத்துதல் ஒரு முக்கிய காரணியாகிவிட்டதால், இளைஞர்கள் அழகுபடுத்தும் பொருட்கள் மற்றும் சிகிச்சைகளுக்காக அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறார்கள்.

அன்வர்: பளபளப்பான சருமம் சுகாதாரத்தை உறுதிப்படுத்தாது. எல்லாம் ஒரு செலவு மற்றும் சேதப்படுத்தும் காரணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிக

ஃபேஷியல் செய்வது நமது சருமத்திற்கு நல்லதல்ல.

மகேஷ்: நன்றாகச் சொன்னீர்கள், ஆனால் தோல், முடி மற்றும் நகங்களுக்கு சரியான பராமரிப்பு கொடுக்கப்பட வேண்டும். இது நோய்களைத் தடுக்கும் மற்றும் ஆரோக்கியமான நிலைமைகளை உருவாக்குகிறது.

ராணி: உலகம் எல்லோருக்குமானது. எனவே தனிப்பட்ட சீர்ப்படுதத்தில் அதிக அழுத்தம் கொடுப்பது, அதற்கு கட்டுப்படியாகாதவர்களுக்கு அச்சுறுத்தலாகும்.

அன்வர்: பளபளப்பு, வயதாவதைத் தடுத்தல், கரும்புள்ளிகளை மறைத்தல் மற்றும் பலவற்றிற்கான அழகு சாதனப் பொருட்கள் வெற்றிகரமான வாழ்க்கைக்கு முற்றிலும் அவசியமானவை என அங்கீகரிக்கப்பட்டு வருவதாகக் கருதப்படுகிறது.

மகேஷ்: உடல் துர்நாற்றத்தையும் கையாள வேண்டும், ஏனெனில் அவை உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களை அசௌகரியமாக்குவது மட்டுமல்லாமல், உடல்நலப் பிரச்சினைகள் அல்லது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையைச் சுட்டிக்காட்டும் – இவை இரண்டையும் சரிசெய்ய, சீர்ப்படுத்துதல் அனைவருக்கும் கற்பிக்கப்பட வேண்டும்.

ராணி: நீங்கள் சீராகவும், உங்களைப் பற்றி நேர்மறை எண்ணங்களுடன் இருக்கும்பொழுது., நம்மைச் சுற்றியுள்ளவர்கலிடமும் அது பிரதிபலிக்கும். எப்பொழுதும் சீராக தோற்றமளிப்பதற்காக நீங்கள் மதிக்கப்படுகிறீர்கள் மற்றும் பாராட்டப்படுகிறீர்கள்.

அன்வர்: விவாதிக்கப்பட்டபடி, சீர்ப்படுத்துதல் மனிதர்களுக்கு நன்மைகள் மற்றும் மறைந்துவிடும் விளைவுகள் இரண்டையும் கொண்டுள்ளது. அதிக பலன்களைப் பெற நாம் அதை சரியான நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். நன்றி!

முடிவுரை

ஒரு குழுவில் "சீர்ப்படுத்துதல்" என்ற தலைப்பு வெற்றிகரமாக விவாதிக்கப்பட்டது.

தொழிற்கல்வி – வேலைவாய்ப்புத் திறன்கள்
மேல்நிலை இரண்டாம் ஆண்டு
நூலாசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர்கள்

பாடநூல் வல்லுநர்

முனைவர் கே. மாறன்
பேராசிரியர் மற்றும் இயக்குநர்
ஸ்ரீ சாய்ராம் மேலாண்மைக் நிறுவனம், மற்றும்
ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி,
சென்னை 600044

மேலாய்வாளர்

முனைவர் பூ.தேவமைந்தன்
பேராசிரியர்
மேலாண்மைக் கல்வி, தொலை நிலைக் கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை 600005

பாட ஒருங்கிணைப்பாளர்கள்

காசி. கோமதி, விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

பாடநூல் ஆசிரியர்கள்

முனைவர் தினேஷ் குமார் செ,
உதவி பேராசிரியர்,
ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை நிறுவனம் மற்றும்
ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி, சென்னை 600044

முனைவர் வெங்கடேஷ் பா,
உதவி பேராசிரியர்,
ஸ்ரீ சாய்ராம் மேலாண்மை நிறுவனம், மற்றும்
ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி, சென்னை 600044

முனைவர் அ. கீதா,
உதவி பேராசிரியர், ஆங்கிலத் துறை,
ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி, சென்னை 600044.

முனைவர்.கோ.சி.சத்தியநாரயாணன்,
அன்னை வேளாங்கண்ணி மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
சைதாப்பேட்டை, சென்னை–600 015

முனைவர் உ.அமலேஸ்வரி
பேராசிரியர்,
மேலாண்மைக் கல்வி நிறுவனம் துவாராகாதாஸ்
கோவர்தன் தாஸ் வைணவக் கல்லூரி, சென்னை 106

மொழிப்பெயர்ப்பாளர்கள்

அ.கோ.கலைவாணி,
கணினி பயிற்றுநர்
சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
மார்க்கெட் தெரு, பெரம்பூர், சென்னை–11

சு. கோமதி,
கணினி பயிற்றுநர்
சென்னை மேல்நிலைப்பள்ளி, பாலவாயில் சாலை
அயனாவரம், சென்னை 23.

EMIS தொழில்நுட்பக் குழு

இரா.மா.சதீஸ்
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை, ஒருங்கிணைந்த பள்ளிக்–
ல்வி இயக்ககம்.

க. ப. சத்தியநாராயணா,
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை, ஒருங்கிணைந்த பள்ளிக்–
ல்வி இயக்ககம்.

இரா. அருண் மாருதி செல்வன்,
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை, ஒருங்கிணைந்த பள்ளிக்–
ல்வி இயக்ககம்.

புத்தக வடிவமைப்பு
ஆரோக்கியம் பெலிக்ஸ்
சென்னை.

தரக்கட்டுப்பாடு
ஸ்ரீதர் வே

அட்டைப்பட வடிவமைப்பு
ஆரோக்கியம் பெலிக்ஸ்

ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது. ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

குறிப்பு

குறிப்பு